ஆர்.எஸ். ஜேக்கப்



சிறுகதைகள்

தொகுதி நான்கு

ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள்

தொகுதி நான்கு

பாளை

ஜெயா பப்ளிகேஷன்ஸ்

உரிமை : ஆசிரியருக்கு
முதற் பதிப்பு : 19, நவம்பர் 2005
நூல் வரிசை : 98
நூற்பெயர் : ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள்
தொகுதி நான்கு
R.S. Jacob Short Stories - Part IV
by : Dr. R. S. Jacob
ஆசிரியர் : டாக்டர். ஆர். எஸ். ஜேக்கப்
விலை : ரூ. 40.00

இது ஒரு பாளை - ஜெயா பப்ளிகேஷன்ஸ் தயாரிப்பு
ஆர். எஸ். ஜேக்கப், எண்பது வயது தொடக்க நாள் நினைவு வெளியீடு

தலைமை அலுவலகம் : வயலற் ஜேக்கப்
ஜெயா நிலையம்
37/542-22 ஆம் தெரு
சாந்திநகர்,
பாளையங்கோட்டை - 627 002
பேசி : 2540803.

கிளை அலுவலகங்கள் : ஜெசிந்தா தியாரூ
பிளாட் எண் 11, தெரு எண் 17
டான்சி நகர், வேளச்சேரி
சென்னை - 600042
பேசி - 044 - 22430964

டாக்டர். பிரமிலாதாஸ்
பிளாட் 11, ஃபிளாட்ஸ் 3
முதல் தளம், 9 வது குறுக்குத்தெரு
கந்தசாமிநகர், பாலவாக்கம்
சென்னை - 600041
பேசி - 044 - 24484262

அச்சாக்கம் : நெல்லைத் திருமண்டல ஆப்செட் அச்சகம்
திருவனந்தபுரம் ரோடு, பாளையங்கோட்டை,
பேசி : 2378132

சட்ட ஒழுங்குகள் : ஜே. பி. ஜெயபாலகன் சந்தோஷ்
அட்டை வடிவமைப்பு : ஆர். எஸ். ஜே கிரியேட்டிவ் சர்வீசஸ்

என்னுரை

எம் நூல் வரிசையில் இது 98 ஆவது நூலாகும்.

அடுத்து உடனே வெளியிடுவதற்கு ஆயத்தமாக ஆறு நூற்கள் கைப்பிரதிகளாக உள்ளன. மற்றும் பல படைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவைகள் அனைத்தும் சீக்கிரம் வெளி வரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எனக்கு எண்பது வயது தொடங்கும் இந்நாளின் நினைவாக இந்நூலை வெளிக்கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

விரிந்து பரந்து கிடக்கும் எம் நண்பர் வட்ட இலக்கியக் குடும்பத்தினர், இலக்கிய வாரீசுகள் அனைவரும் உள்ளம் பொங்கி உவகை கொள்கிறார்கள்.

இலக்கியம் என்பது ஓர் ஜீவ ஊற்று, அது சுரந்து கொண்டே இருக்கும். தாமிரபரணிச் சுனை போன்று அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கிறது. அதனை யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

மக்களுக்குச் சொல்ல வேண்டியசெய்திகள் இன்னும் மிகுதியாக உள்ளன. எனவே எழுதிக் கொண்டே இருக்கிறேன்.

இதன் காரணமாகவே, நூறு எடுத்துக்காட்டுக் கதைகள் (1959), நூறு ஜீவனுள்ள கதைகள் (1971) போன்ற மிக அருமையான நூற்களைக் கூட மறு பதிப்புச் செய்ய நேரமில்லை.

புதிது புதிதாகப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்நூலில் சிறுகதைகள், குறுங்கதைகள், கட்டுரைக்கதைகள் எனப் பல ரகங்கள் உள்ளன.

பலரின் விருப்பத்திற்கிணங்க, பட்டுப்பாவாடை, வரவேற்கப்படாத விருந்தாளி, பனம்பால் என்ற மூன்று கதைகளையும், நூறு ஜீவனுள்ள கதைகள் என்ற நூலிலிருந்து எடுத்துள்ளேன். 1996 ஜனவரியில் வெளியான 'நல்ல நல்ல கதைகள்' என்ற நூலிலிருந்தும் ஐந்து கதைகள் இந்நூலில் இடம் பிடித்துள்ளன.

அனைத்துக் கதைகளும் யாம் இதழ்களுக்கு எழுதியவைகளே,

எம் படைப்புகள் அனைத்தையும் இம்மட்டில் பதின்மர் ஆய்வு செய்து பல்கலைக்கழக அளவில் பட்டங்கள் பெற்றுள்ளனர்.

முந்திய மூன்று சிறுகதை நூற்களும், 'வாத்தியார்' புதினமும் பல கல்லூரிகளில் எம்.ஏ.தமிழ் மாணவர்களுக்குப் பாட நூற்களாக இடம் பெற்றுள்ளன.

எம் படைப்புகளில், 'வாத்தியார்' 'மரணவாயிலில்' என்னும் உண்மை வரலாற்று இரட்டை நாவல்கள் வெகுவாகப் பேசப்பட்டும் - பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளன.

ஆயினும் நான் முதன் முதலாக எழுதியது சிறுகதையே. முதலில் வெளியிட்ட நூலும் சிறுகதைத் தொகுப்பே. எனக்கு எதைப்பார்த்தாலும் சிறுகதையாகவே தோன்றுகிறது. சங்க இலக்கியங்களைப் படிக்கும்போதும், பைபிள் படிக்கும் போதும் அவைகள் சிறுகதைகளாகவே பளிச்சிடுகின்றன.

கருத்துப் புரட்சிக்கு சிறுகதை ஒரு வல்லமையான கருவி. சிறுகதை இயற்கையாக - இறை அருளாக என்னோடு ஒட்டிக் கொண்டது.

'இலக்கியத்திற்கு இளைப்பாறுதல் இல்லை' என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்கிறேன்.

இந்நூலை அச்சிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிய நெல்லைத் திருமண்டல அச்சகத் தாளாளரும், எம் நண்பருமான திரு. சாமுவேல் குணசீலன் அவர்களுக்கும் - அச்சக மேலாளர் ஜே. சுரேஷ்குமார் அவர்களுக்கும் என் இதயம் நிறைந்த அன்பை அறிவிக்கிறேன்.

'புரூப்' திருத்துவத்தில் உறுதுணையாக உதவி செய்த என் துணைவியாருக்கும், மகன் ஜெயவீரனுக்கும் உள்ளம் நிறைந்த நன்றியை கூறிக்கொள்கிறேன்.

இறைவனுக்கு நன்றி கூறி, கடந்த கால வரவேற்பு தொடர்ந்து கிட்ட வேண்டல்களை ஏறெடுக்கிறேன்.

பாளை - சாந்திநகர்
(19.11.2005)

அன்பன்
ஆர். எஸ். ஜேக்கப்

(ஆர். எஸ். ஜே. அவர்களின் அறுபது வயது மணி விழாவின் போது, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடான 'பூக்கூடை' மணி விழா மலராக வெளிவந்தது. (நவம்பர் 1986) அதுபோது பூக்கூடை ஆசிரியரும், ஓய்வு பெற்ற சென்னை தாம்பரம் கிறிஸ்தவக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரும், உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் நிறுவனருமான பேராசிரியர் பொன்னு ஆ. சத்திய சாட்சி அவர்கள் 'பூக்கூடை' இதழில் எழுதிய தலையங்கம். அன்னாருக்கு எம் நன்றி.)

ஆர். எஸ். ஜே. பற்றி...

வணங்காமுடி! எந்தச் சீப்புக்கும், எந்த எண்ணெய்க்கும் படியாது! ஆகையினால்தான் ஒட்ட ஒட்டக் கத்தரிப்புச் செய்து விடுகிறார்!

அந்த முடிக்குக் கீழே கபாலப் பெட்டிக்குள் ஓர் எலக்ட்ரானிக் மூளை. கண்கள் என்னும் லென்சுகளின் வழியாகப் பார்க்கின்ற நிகழ்ச்சிகளையெல்லாம் கதைகளாகவே பார்க்கின்றது அந்த மூளை. ஜார்ஜ் பெர்னாட்சா தாம் கண்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளையெல்லாம் நாடகங்களாகவே கண்டு கொண்டிருந்தாராம். அவரே சொல்லியிருக்கிறார். இங்கே பாளையங் கோட்டையில் ஜெயா நிலையத்தில் ஒரு சிறுகதை பெர்னாட்சா!

கண்களா அவைகள்! துளைக்கும் கருவிகள்! அன்று பேதுருவை உற்று நோக்கிய கண்களின் தோழிப் பெண்கள் அவைகள். மின்னல் வெட்டு வெட்டுகின்ற நெருப்பும் கருணைபொழிகின்ற குளிர்ச்சியும் இரண்டாக உள்ள அந்த இடத்திலிருந்து எவ்வாறு தோன்றுகின்றன, தண்ணிய தாமரைப் பூவில் தீ தோன்றியதைப்போல!

அந்த மூக்கு! சிறுகதை மூச்சுக்குப் பாதைகள்!

அந்தச் செவிகள்! ஒன்றில் புதிய ஏற்பாடும், மற்றொன்றில் பழைய ஏற்பாடும் கண்ணுக்குத் தோன்றாக் குண்டலங்களாக அங்கே தொங்கிக் கொண்டிருந்தன. திருமறைக் கேள்வியால் துளைக்கப்பட்ட செவி மடல்கள், இந்தச் செவிகளை தம் ஞானக் கண்ணால் கண்டுதான் திருவள்ளுவர் அந்தக் குறளைச் செய்தாரோ?.

வாய்மைக்காகவே இருக்கின்ற வாய்!

இதழ்கள் நற்செய்தி சொல்ல என்றென்றுமே நாண மலராகத் திறப்பவைகள்.

கதராடையில் மூடப்பட்டிருக்கும் அந்த மார்பகத்தினுள்ளே இரண்டு இதயங்கள். ஒன்று இயேசுவின் அன்பால் துடிப்பது. ஒன்று தமிழ் எழுத்தால் துடிப்பது.

இரண்டு கைகளில் ஒரு கை வெள்ளைத் தாளைப் பிடிப்பதற்கு, மற்றொரு கை அத்தாளின் மீது எழுதுவதற்கு. ஆள், கருவில் உருவாவதற்கு முன்பே இறைவனால் இதற்கெனப் படைக்கப்பட்ட கைகள்.

இலக்கியம் என்னும் உரலில், சமூக வாழ்க்கை எனும் வயலில் விளைந்த நெல்மணிகளை இட்டு எழுதுகோல் என்னும் உலக்கையால் குத்தி உமியைப் போக்குகின்ற கைகள்!

ஓரடியால் மண்ணையும் மற்றோரடியால் விண்ணையும் அளக்கின்ற கால்கள்! விண்ணும் மண்ணும் ஆகிய இரண்டையுமே! இவர் படைப்புகளில் காண்பதற்குக் காரணம் புரிகின்றதா?

பாதங்கள் புழுதிபடிந்த அழகுடையவைகள். நற்செய்தியைச் சுமந்து நாடெல்லாம் சுற்றியவைகளாயிற்றே.

ஆர். எஸ். ஜே. வெண்ணாடை உடுத்தி சி.எல்.எஸ்ஸுக்குள் நுழைந்தால் மல்லிகை பூத்த மலையே நுழைவது போலிருக்கும்.

எங்கள் இல்லமே ஒரு சங்கப் பலகை! - மகள் சொல்லுகின்றார்.

சிங்கம் போட்ட குட்டி சிங்கக் குட்டியாகத் தான் இருக்க முடியும்! - இப்படி ஒரு மகன் பெருமிதமடைகின்றார்.

'உழவன் கை ஏர்போல, பேனா ஏந்தி எழுதுகின்ற இலக்கியங்கள், இறப்பே இன்றி எந்நாளும் வாழ்ந்திருக்கும் - மற்றொரு மைந்தனின் கவிதை.

நவமலர் என்னும் ரசிகர் எல்லாவற்றையும் மூன்றே சொல்லில் அடக்கிவிட்டார்.

'வாத்தியார் கருப்புத்தங்கம்!'

அறுபது கூடைகளை மனதில் பின்னி, அவ்வறுபதையும் வண்ண வண்ண மலரால் நிரப்பி, அவ்வளவையும் ஆர்.எஸ்.ஜேயின் தலையில் சிந்தி மகிழ்கின்றது பூக்கூடை.

வாழ்க பல்லாண்டு வாழ்க
வீழ்க தீயவைகள் வீழ்க
சூழ்க திருவருளே சூழ்க
ஆழ்க கிறிஸ்துவுக்குள் ஆழ்க!

என ஒரு வஞ்சி விருத்தப் பாவையும் அவருக்கு உரிமையாக்கு கின்றது பூக்கூடை.

பேராசிரியர் பொன்னு ஆ. சத்தியசாட்சி

ஆர். எஸ். ஜே பெற்ற விருதுகள்

இலக்கியச் செல்வர் ஆர்.எஸ்.ஜேக்கப் நாடறிந்த நற்கதை ஆசிரியர். கடந்த 60 ஆண்டுகளாக எழுதிவரும் சிறுகதைச் சிற்பி.

அவர் எழுத ஆரம்பித்த முப்பது ஆண்டுகள் கழித்தே அன்னாரது எழுத்துத் திறனை அறிஞர் உலகம் தெரிய ஆரம்பித்தது.

மலேசியா திருமுறை மன்றம்தான் முதன் முதலில் எழுத்தாளர் ஆர்.எஸ்.ஜேயின் சிறுகதைகளைப் பாராட்டி 'புதுமைப்பித்தனுக்கு அடுத்த திருமறைப்பித்தன்' என்ற பட்டத்தினை 1975ல் வழங்கியது.

பாளை-வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம் 1978ல் நடத்திய சிறுகதைக் கருத்தரங்கின்போது புலவரின் முப்பதாண்டு காலச் சேவையைச் சிறப்பித்து பொன்னாடை போர்த்தி திருவிவிலியம் பரிசளித்து கௌரவித்தது.

சென்னைக்கிறிஸ்தவக் கலைக்கழகம் இவரின் இலக்கிய சாதனையை வியந்து 1980ஆம் ஆண்டில் 'இலக்கியத் தென்றல்' என்ற பட்டத்தை வழங்கிப் பெருமை கொண்டது.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் அதன் 125 ஆவது ஆண்டு விழாவினை 1983ஆம் ஆண்டில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடிய நாளில் புலவரின் நூலாசிரிய நுண்மான் நுழை புலமையைப் போற்றி, 'An Eminent Author' என்ற பதக்கம் வழங்கியது.

உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை 1984ஆம் ஆண்டு வேலூரில் நடத்திய இரண்டாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாட்டின்போது ஆர்.எஸ்.ஜே.யின் பத்திரிக்கைப் பணியினை மெச்சி 'அருட்கலைஞர்' என்ற விருதினை வழங்கி மகிழ்ந்தது.

கிறிஸ்தவ இலக்கியச் சங்க மாத இதழான பூக்கூடையின் 1986 நவம்பர் இதழ் ஆர்.எஸ்.ஜேக்கப் மணி விழா மலர் ஆக வெளியிட்ட போது 'கருப்புத் தங்கம்' என்று அட்டையில் அவர் தம் படம் போட்டு கௌரவித்தது.

தமிழ்நாடு கிறிஸ்தவக் கழகமும்-கிறிஸ்தவ இலக்கியச் சங்கமும் இணைந்து 1987ஆம் ஆண்டில் நடத்திய பதினான்காவது இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங்கின் போது அவர்தம் கதைத் துறையைக்குறித்துப் பெருமை கொண்டு 'இலக்கியச் செல்வர்' என்ற பட்டத்தை வழங்கி இறும்பூதெய்தியது.

லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப்பரிசுத்திட்டத்தின் கீழ் பாராட்டுப் பெறும் சிறந்த மூத்த எழுத்தாளர்களாக நாரணதுரைக்கண்ணன், லா.ச. இராமாமிர்தம், தொ.மு.சி.ரகுநாதன், ஆர்.எஸ்.ஜேக்கப், டாக்டர் வாசவன் என்ற ஐவரையும் 24.5.1992 அன்று கோவையில் பாராட்டிப் பரிசளித்துக் கௌரவித்தனர்.

1990 ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.ஜேயின் 14 தமிழ்ச் சிறுகதைகள் Ocean Drops என்ற தலைப்பில் எம்.சந்தோஷ்குமார் அவர்கள் ஆங்கில மொழியாக்கம் செய்து நூலாக வெளிவந்தது.

ஆர்.எஸ்.ஜே-யின் பத்துச் சிறுகதைகளை, செல்வி மேரிபாட்டர்சன் என்ற ஆங்கில சி.எம்.எஸ். மிஷனெரி அம்மையார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "Under the Palmyra Tree" என்ற தலைப்பில் உருவான நூல் 6.3.2005 அன்று நெல்லைப் பேராயரவர்களால் வெளியிடப்பட்டது.

ஆர்.எஸ்.ஜேயின் பன்னிரெண்டு தமிழ்ச்சிறுகதைகளை, திருமதி. வயலற் அழகையா அவர்கள் ஆங்கில மொழியாக்கம் செய்து Road Side Lozaruses என்ற தலைப்பில் 2000 ஆகஸ்டில் சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்து உள்ளது.

ஆர். எஸ். ஜேயின் மூன்று சிறுகதைத் தொகுப்புகளும், வாத்தியார் புதினமும் பல கல்லூரிகளில் எம்.ஏ. தமிழ்மாணவர்களுக்குப் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு (2005-2006) திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் 'ஆர்.எஸ். ஜேக்கப் சிறுகதைகள்-மூன்றாம் பாகம்' என்ற நூல் எம்.ஏ.தமிழ் மாணவர்களுக்குப் பாடமாக உள்ளது.

நெல்லை மாவட்டம் பரன்குன்றாபுரம் முதுபெரும்புலவர் மு.நல்லசுவாமி பண்டிதர் அவர்களின் பத்து சிற்றிலக்கியக் கவிதைகளைத் திரட்டிய ஆர்.எஸ்.ஜே. 1980 மார்ச்சில் 'சிலுவைத்தியான மாலை' என்ற மகுடமிட்டு வெளியிட்ட நூல் - பின்னாளில் பாளை-சாராள் டக்கர் கல்லூரி முதுகலை தமிழ்மாணவர்களுக்குப் பாடநூலாக இடம் பெற்றது. அந்நூலை ஆய்வாளர் சுவாமிதாஸ் அவர்கள் ஆய்வு செய்து 1992ல் எம் ஃபில் பட்டம் பெற்றுத் தேர்ந்துள்ளார்கள்.

சிறுகதைச் சித்தர் ஆர்.எஸ்.ஜே இன்னும் பன்னூறு கதைகளைப் படைத்து-சிறுகதைத் துறையில் மேலும் பலப்பல சாதனைகள் புரிய இறையருள் வேண்டி நிற்கிறோம்.

பதிப்பகத்தார்

அருட்கலைஞர், முனைவர் ஆர்.எஸ்.ஜேக்கப் படைப்புகளின் பேரில் ஆய்வு செய்து பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆய்வாளர்களும் - ஆய்வேடுகளும்

1. பாளை-எஸ்.டி.சி. பெண்கள் மேனிலைப்பள்ளித் தமிழாசிரியர் திருமதி.ஜெசி விமலா எம்.ஏ.,எம்.எட்., அவர்கள் - மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து, புலவர் ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'மனைமலர்' என்ற திங்கள் ஏட்டில் '1985 ஜனவரி முதல் 1985 டிசம்பர்' வரையுள்ள பன்னிரு திங்கள் இதழ்களைச் சேர்த்து, 'மனைமலர் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஆய்வு செய்து-குறிப்பாக ஆசிரியர்களின் சமுதாய நோக்குள்ள தலையங்கங்களை அலசி ஆய்ந்து 1987 ஏப்ரல் திங்களில் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ளார்கள். அன்னார் தற்போது மேரிசார்ஜென்ட் மேனிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர்.

2. பாளை எஸ்.டி.சி. மேனிலைப்பள்ளி தமிழாசிரியர் திருமதி. மெற்றில்டா ஜோதிராணி எம்.ஏ. அவர்கள் - மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து, ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகள் என்ற முதல் தொகுதியிலுள்ள 25 சிறுகதைகளையும் 1986 இல் வெளியான 'எங்கிருந்தோ வந்தான்' என்னும் சிறுகதைத் தொகுப்பிலுள்ள ஒன்பது சிறுகதைகளையும் சேர்த்து 'ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஆய்வு செய்து 1987 ஏப்ரல் திங்களில் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ளார்கள்.

3. பாளை-தூய யோவான் மேனிலைப்பள்ளித் தமிழாசிரியர் ஜோ. மோசஸ் செல்லராஜ் அவர்கள் - மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து ஆர்.எஸ்.ஜேக்கப் எழுதிய நூற்றுக்கணக்கான சிறுகதைகளில் மகளிர் நிலைபற்றிய செய்திகள் பெரும்பாலும் காணப்படுகின்ற 35 சிறுகதைகளை மட்டும் எல்லையாக எடுத்து 'ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகளில் மகளிர் நிலை' என்ற தலைப்பில் ஆய்வு செய்து 1988 ஏப்ரல் திங்களில் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ளார்கள்.

4. தூத்துக்குடி மாவட்டம் புதியம்புத்தூர் முழுக்கு முனிவர் தூய யோவான் மேனிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த ஆய்வாளர் அ. எர்னஸ்ட் பாலசிங் எம்.ஏ.பி.எட்., அவர்கள் - மதுரை காமராசர்

பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து ஐசக் அருமைராசனின் கீறல்கள், ஆர். எஸ். ஜேக்கப்பின் வாத்தியார் என்னும் இரு நாவல்களை மட்டும் எடுத்துக்கொண்டு, 'கீறல்கள், வாத்தியார் நாவல்கள் - ஒரு சமுதாயவியல் பார்வை' என்ற தலைப்பில் ஒப்பாய்வு செய்து 1988 ஏப்ரல் திங்களில் எம்.ஃபில் பட்டம் பெற்றுள்ளார்கள். அன்னார் தற்போது, பாளை - பிஷப் சார்ஜென்ற் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் முதல்வர்.

5. பாளை - சாரள் தக்கர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரியும் ஜே. ஜெயரதி பொன்மலர் எம்.ஏ.எம்.ஃபில் அவர்கள் 'ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகள் ஒரு திறனாய்வு' என்ற தலைப்பில் ஆய்வு செய்து 1997 இல் ஆய்வேடு அளிக்கப் பெற்று 1998 ஜூலை திங்களில் பிஎச்.டி பட்டம் பெற்றுள்ளார்கள்

6. திருமதி. கோ. பொன்ரூபி சுமங்கலா அவர்கள் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகளில் மனிதநேயம்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து 2003 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றுள்ளார்கள். திருவண்ணாமலை அரசினர் கலைக்கல்லூரி தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் வே.நெடுஞ்செழியன் அவர்களின் மேற்பார்வையில் ஆய்வினை முடித்துள்ளார்கள்.

7. திருமதி. தி. விஜயராணி அவர்கள், 'ஆர்.எஸ்.ஜேக்கப் படைத்த, வாத்தியார் புதினத்தில் சமுதாய நோக்கு' என்ற தலைப்பில் ஆய்வு செய்து 2003-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் எம்.ஃபில் பட்டம் பெற்றுள்ளார்கள்.

8. பாளை - சாராள் டக்கர் கல்லூரி விரிவுரையாளர் இ.அன்னத்தாய் அவர்கள், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில், 'புலவர் இராசயா (ஆர்.எஸ்.ஜே) சிறுகதைகளில் பெண்கள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து அக்டோபர் 2002ல் முனைவர் (Ph.D) பட்டம் பெற்றுள்ளார்கள். அவர்களின் ஆய்வு மையம் ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

9. ஆய்வாளர் ஆ.வின்செென்ட் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல் வழிக்கல்வி நிறுவனத்தில் 'மார்க்சிய நோக்கில் மரணவாயிலில்' ... என்ற தலைப்பில் ஆர்.எஸ்.ஜேயின் நாவலை ஆய்வு

செய்து 2004 இல் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளார்கள். அவர்களின் நெறியாளர் க. இளமதி சானகிராமன், புதுவை பல்கலைக்கழகம்.

10. ஆய்வாளர் செல்வி ஹெலன் சோபியா அவர்கள் பாளை - தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி தமிழ்த்துறை ஆய்வு மையத்தில் 'ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகளில் சமுதாயம்' என்ற தலைப்பில் 2003-2004ல் ஆய்வு செய்து எம்.ஃபில் பட்டம் பெற்றுள்ளார்கள்.

டாக்டர் பட்டம்

11. 12.4.04 அன்று மாலை ஆறு மணிக்கு சென்னை இறையியல் & கலைக் கல்லூரி (MTSC) வளாகத்தில் தலைவர், பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள் தலைமையில், ஆர்.எஸ்.ஜேயின் அறுபது ஆண்டுகால தமிழ் இலக்கிய இறையியல் பணிகளைப் பாராட்டி டாக்டர் பட்டம் (The Degree of Doctor of Divinity (Honoris Causa) அருளினார்கள்.

நாவலுக்குப் பரிசு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்றமும், நியூசெஞ்சரி புத்தக நிறுவனமும் இணைந்து நடத்திய 2004ஆம் ஆண்டிற்கான நாவல் பரிசுப் போட்டியில் முதல் தர நாவலாக 'ஆர்.எஸ்.ஜேயின் வாத்தியார் மறுபிறவி மரண வாயிலில்' என்ற புதினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பரிசினை 12.09.2004 பாரதி விழாவன்று எட்டையபுரம் பாரதி மணி மண்டபத்தில் விழா வைத்து விருதினை வழங்கினார்கள்.

எந்தை பற்றி எழுதுகிறேன்...

கவிஞர் தியாரூ

பன்னூறு கவிதைகளை வடித்து வைத்தேன்
பல்வேறு தத்துவங்கள் விளக்கம் செய்தேன்
என்றாலும் என் தந்தை வாழ்வைப் பற்றி
என்றேனும் ஆராய்ச்சி செய்த தில்லை!

கண் காணும் காட்சிகளைக் கதைகளாக்கி
காலத்தின் கோலத்தைக் காட்டுகின்ற
நுண்ணறிவு நல்லறிஞர் ஆர்.எஸ்.ஜேக்கப்
என் தந்தை என்பதிலென் நெஞ்சி னிக்கும்!

ஆறுபத்து ஆண்டுகளில் அன்னார் செய்த
அறிவார்ந்த சாதனைகள் கொஞ்ச மல்ல;
நூறுபத்து வருடங்கள் எனக்கு வேண்டும்
நானவரின் சேவைகளை எடுத்துச் சொல்ல!

சோறுண்ண எண்ணமின்றி, சோர்வே இன்றி,
சிந்தனையில் மூழ்கி மூழ்கி முத்தெடுத்து
ஊறுகின்ற உணர்வுகளை வார்த்தை யாக்கி
உரைப்பதனைக் கேட்குங்கால் உளம்வி யக்கும்!

எழுதிவிட்டு எழுதியதைப் படித்துக் காட்டி
எம்கேள்வி அத்தனைக்கும் பதிலளித்து
முழுவதுமாய் விளக்கியபின் எழுந்து செல்ல
மனமெல்லாம் அவர்பின்னே நடந்து செல்லும்!

உழுகின்ற உழவன் போல் தன்னை மாற்றி
உழவன்கை ஏர்போலப் பேனா ஏந்தி
எழுதுகின்ற இலக்கியங்கள் இறப்பே இன்றி
எந்த நாளும் வாழ்ந்திருக்கும் என்ப துண்மை!

பொன்னாடை பூமேடை வேண்டு மென்றோ,
பூமாலை புகழ்போதை தேவையென்றோ
தன் நெஞ்சில் எண்ணங்கள் சிறிது மின்றி
தன்னைப்போல் பலபேரை எழுத வைத்த

என் தந்தை புகழ்பாடும் துடிப்பினாலே
என்பேனா ஓய்வின்றி ஓடினாலும்
என் கைக்குத் தடைபோட்டு நிறுத்து கின்றேன்
எதிர்காலம் மிச்சத்தை எடுத்துக் கூறும்!

குறிப்பு : ஆர். எஸ். ஜே மணி விழாவின் போது (19.11.1986) கவிஞர் தியாரூ எழுதிய கவிதை

ஆர்.எஸ்.ஜேக்கப் சிறுகதைகள்-தொகுதி நான்கு என்றிருப்பினும், உண்மையில் இந்நூல் பதினைந்தாவது சிறுகதைத் தொகுதியாகும்

[விபரம் காண்க]

1.	மோசம் போன மோதிரம் முதலிய சிறுகதைகள் (ஒன்பது சிறுகதைகள்)	1948
2.	என் வகுப்பு - (ஒரு சிறுகதைநூல்)	1953
3.	தேவராஜ்யம் - (ஒரு சிறுகதைநூல்)	1953
4.	மணமும் குணமும் - (ஒரு சிறுகதைநூல்)	1953
5.	குழந்தைப் பண்பு (ஏழு சிறுகதைகள்)	1956
6.	மௌன தியாகி - தமிழாக்கம் (ஒன்பது சிறுகதைகள்)	1958
7.	நவரத்னக் கதைக் கொத்து (ஒன்பது சிறுகதைகள்)	1958
8.	எங்கிருந்தோ வந்தான்? (ஒன்பது சிறுகதைகள்)	1986
9.	சாட்சிக்கு ஒரு சாட்டை (ஒன்பது சிறுகதைகள்)	1987
10.	ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள் - முதல் பாகம் (25 சிறுகதைகள்)	1985
11.	ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள் - இரண்டாம் பாகம் (25 சிறுகதைகள்)	1991
12.	ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள் - மூன்றாம் பாகம் (20 சிறுகதைகள்)	2000
13.	ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள் - தொகுதி நான்கு (25 சிறுகதைகள்)	2005

14. பாஞ்சைச் சிறுகதைகள் (10 சிறுகதைகள்)
(1946 முதல் 1950 வரை 'தினசரி மடல்' இதழில் வெளியான சரிதைச் சிறுகதைகள்)
நூல் வடிவு பெறாமலே காலம் கடந்துள்ளது.
(மீண்டும் உயிர் பெறும், உலர்ந்த எலும்புகள் பேசும்)

15. கிராமீய மார்க்சீயச் சிறுகதைகள் பத்து
(கைப்பிரதியிலேயே காவல் துறையிடம் சிக்கி 1950 மார்ச் மாதம் அழிந்து விட்ட நூல்)

குறிப்பு : 1. இவை தவிர எம் ஏராளமான எடுத்துக்காட்டுக் கதை-நூற்களில் ஆங்காங்கு சிறுகதைகள் பொதிந்துள்ளன.

2. 1985ஆம் ஆண்டில் சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் 'ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள்' என்ற எம் பெயர் தலைப்பில் முதல் நூலை வெளியிட்டது.

அதன் பின்பு அதே முத்திரைத் தலைப்பில் மூன்று தொகுதிகள் வெளிவரலாயிற்று.

3. 1971ல் வெளியான "நூறு ஜீவனுள்ள கதைகள்" என்ற நூலில் ஐம்பது விழுக்காடு சிறுகதைகளே.

ஆயிரக்கணக்கான பாராட்டுரைகளில் ஒரு சில துளிகள்

ஐயா,

உங்கள் சிறுகதை 'சர்வர் அப்பாத்துரை' என்ற சிறுகதையைப் படித்து இன்பம் மட்டும் அடையவில்லை. மனதுக்குத் தெம்பாயும் தைரியமாயுமிருக்கிறது. சர்வர் அப்பாத்துரை சொல்லும் சேதியின் நம்பிக்கையும், கூடவே அதில் தொனிக்கும் விரக்தியும் உங்கள் எழுத்தின் சாதனை. உங்களைப் பாராட்டுகிறேன் என்பதைக் காட்டிலும், நான் தெரிவிக்க முயலும் நன்றியை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ஈ.எஸ்.டி அவர்கள் நடத்திய (கோவை) முதல் பரிசளிப்பு விழாவில் உங்களைப் பார்த்தேனே தவிர உங்களைச் சந்தித்துப் பேசாதது ஒரு நல்ல வாய்ப்பின் இழப்பு என்று உங்கள் எழுத்தைப் படித்தபின் உணருகிறேன். அதைத் தெரிவிக்கவே இக்கடிதம் எழுதுகிறேன்.

வணக்கம்

அம்பத்தூர், சென்னை — லா. ச. ராமாமிர்தம்
2.6.1994 — (பல விருதுகள் பெற்ற பிரபலமான எழுத்தாளர்)

ஆர். எஸ். ஜேக்கப் சிறுகதைகள்மூன்றாம் பாகம் படித்தேன். கதைகள் யாவும் தங்கள் இயற்கைச் சூழலிலும், பட்டறிவிலுமிருந்து பூத்திருக்கும் வண்ண மலர்கள். இச்சிறு கதைகளினூடே 'என் அக்கா' எனும் கதை நெஞ்சை உலுக்குகிறது. தமிழ் இலக்கிய அன்னைக்கு மற்றுமொரு அணிகலன்.

முன்னாள், தமிழ்துறைத் தலைவர், — பொ. ஆ. சத்திய சாட்சி
24.1.2001 — கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை

ஆர். எஸ். ஜேயின் எழுத்துக்கள்

சீராக ஓடும் நீரோடை போன்ற மொழி நடை. அமைதியான மேற்பரப்பினுள்ளே குமுறி வெடிக்கும் எண்ண அலைகள், கரை புரண்டோடும் காட்டாற்று வெள்ளம்.

சமுதாய அவலங்களைத் தோலுரித்துக் காட்டும் வேகம், சமய நடைமுறைகளைச் சரிசெய்ய முயலும் தாகம்.

ஜன-பிப் - 2002 — அருள்திரு. செல்லத்துரை
கன்மலை இதழ் — (குமரி மாவட்டம்)

".... நன்கு அறிமுகமாகியுள்ள சிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் திரு. ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். தமிழ்ப் பத்திரிக்கைகள் பலவற்றில் அவர்களுடைய எழுத்தோவியங்கள் இடம் பெற்று வருகின்றன. அவைகளுள் அவர்தம் சிறுகதைகள் மிகச் சிறப்பானவையாகும்.

முதல்வர், போப் கல்லூரி — டி.எஸ்.ஜார்ஜ் முல்லர்
சாயர்புரம் — (ஆர்.எஸ்.ஜே. நூலின் அணிந்துரையில்)
29.09.1971

உள்ளடக்கம்

சிறுகதைச் சித்தர் ஆர்.எஸ்.ஜே. அவர்களின் முத்துவிழா தொடக்க நாளின் நினைவாக இந்நூலை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்

- ஆர். எஸ். ஜே. குடும்பத்தினர்
19.11.2005

இலங்காமணித் தாத்தா!

நான் பிறந்த ஊரு ராசாங்கோயில். சிறு கிராமம், கரிசல் பூமி, குடிதண்ணிக்குக் கூப்பாடு. ஆனா அதுக்குன்னு ஒரு பெருமை இருக்கு.

கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக்குப் பக்கத்துப்பட்டி. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த ஒட்டப்பிடாரம் எங்களுக்கு ஓடும் தூரம்தான். புரட்சிக்கவி பாரதி பிறந்த எட்டயபுரம் கொஞ்சம் எட்டின தூரம்.

ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல்லார் கல்விப் பணி ஆற்றிய தூத்துக்குடி எங்களுக்குப் பக்கத்துப் பட்டணம். பகல் ஏற ஏற பாலை வெயில் கொளுத்தும். மாலையில் கடல் காற்று கொஞ்சம் ஊஞ்சலாட்டும்.

என் சிறுவயதில் உப்புத் தண்ணீருக்கு எங்க ஊரு உலகப் பிரசித்தம். நிறைய இறவைக் கிணறுகள் இருக்கு. எல்லாம் உவர் தண்ணீர். குளத்துக்குள்ள ஊத்துத்தோண்டி ஊற ஊற தண்ணி எடுத்துக் குடிப்போம். கண்ணீர் மாதிரி சொட்டு சொட்டா தண்ணி சுரக்கும். அதை சிரட்டையில் வழிச்சி வழிச்சி மண்குடத்துல ஊத்துறது தனிக்கலை.

கரிசல் மண்ணுக்குன்னு தனியா ஒரு மணமுண்டு. ஆண்டுக்கு மூணு மழை பெய்யும் வானம் பாத்த பூமி. அந்த மழையும் பெய்யாட்டா வனாந்தர பூமி. எந்த நதியும் எங்களை நினைத்தது மில்லை, நனைத்தது மில்லை.

உவர் தண்ணிக்கு மிளகாய் நல்லா காய்க்கும், எள்ளுச்செடி துள்ளி வளரும்.

எங்க மொழியே தனி. ‘என்னல, எசக்கி எப்படி இருக்கா?’ இப்படித்தான் நலன் விசாரிப்போம். எங்க பேச்சு மொழி கொச்சையாத்தான் இருக்கும், ஆனா இலக்கியம் கொஞ்சி விளையாடும்.

ஊருக்கு மத்தியில் வேதக்கோயில். மேலக் கடைசியில் அம்மன் கோயில். ரெண்டு கோயில்கள் முன்பும் வேப்ப மரங்கள் அடர்ந்திருக்கும். வேப்பங்காற்று ஜிலுஜிலுவென்றிருக்கும். சோம்பல் முறிப்பது, தூங்கி வழிவது வம்பளப்பது எல்லாம் இரு கோயில்களின் மண்டபங்களில்தான்.

வறண்ட எங்க ஊர்ல அறிவுக்குப் பஞ்சமே கிடையாது. அரசியல் பிச்சி உதறுவாங்க. வீட்டுக்கு ஒருவர் பர்மா, மலேசியா, சிங்கப்பூர்

கொழும்புன்னு திரைகடல் ஓடி திரவியம் தேடப்போயிட்டாங்க. அதனால நாகரீகம் வேகம் வேகமாக ஊடுறுவியது.

எங்க வீடு வேதக் கோயிலுக்கு மேல்பக்கம் தெக்கு வரிசையில் முதல்வீடு. உண்டு முடியவும் கைதுடைக்க வேதக்கோயில் மண்டபத்துக்குப் போயிருவேன். எப்பவும் அங்க கூட்டம் வழியும். வழக்காடு மன்றம், பட்டிமன்றம், பஞ்சாயத்து, குடும்பச் சண்டை, விசாரணை எல்லாம் அந்த மண்டபத்தில்தான்.

மண்டபத்து மகா சந்தடிக்கு மத்தியில் இலங்காமணித் தாத்தா அமைதியா அமர்ந்திருப்பாரு. தொண்ணூறு வயதுன்னோ, தொண்டுக் கிழவருன்னோ யாரும் சொல்ல மாட்டாங்க. இலங்கா மணித் தாத்தா, இலங்காமணிப் போத்தி, இலங்காமணிப் பாட்டயா, இலங்காமணி வைத்தியர் ... இப்படிப் பல பேர்களில் அழைப்பார்கள்.

மண்டபத்து மூணாம்படியில் உட்கார்ந்து, நாலாம்படியில் முதுகைச் சாய்த்து வலக்கையில் தடிக்கம்பைப் பிடித்து அமர்ந்திருக்கும் காட்சி ஒரு குறுநில மன்னன் போன்றிருக்கும்.

நாலு முழ வேட்டி இடுப்பில், மூணு முழ முண்டாசு தலையில் ... இவ்வளவே அவரது ஆடை அலங்காரம். கருகருவென்று வைரம் பாய்ந்த உடல் ஈ, எறும்பு... எதுவும் அவர் பக்கம் அண்டாது. தேள் கொட்டினா கொடுக்குதான் உடையும்.

அவருக்கு வெள்ளை உள்ளம். பொறாமை, பூசல், சூது வாது எதுவும் கிடையாது.

ஒரு பிரச்சினையைச் சொன்னா அமைதியா கேப்பாரு. பதில் ஒரு பழமொழியாகவோ, உவமையாகவோதான் இருக்கும். தம் கருத்தை பிசிறு தட்டாம தெளிவா சொல்வாரு.

1945 முதல் 1950 வரை நான் ஊரில் இருக்கும் போது அவரோடு உரையாடுவேன். மண்டபத்தில் நடக்கும் வாதப் பிரதிவாதங்கள், அடிபிடி சண்டைகள் ஒன்றையும் கண்டு கொள்ளமாட்டார்.

அவரோடு பேசுவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

எங்க ஊருக்குக் கிழக்கே மூணுகல் தொலைவிலுள்ள பண்ணை யூரில் (நயினாபுரம்) நான் வாத்தியாரு. அன்னக்கி சனிக்கிழமை. லீவ் நாள். காலை பத்து மணிக்கு தாத்தா பக்கத்தில் அமர்ந்தேன்.

கைத்தடியை ஒரு குத்து குத்தி என்னை வரவேற்றார். நான் பேசினேன்.

தாத்தா, நம்ம ஊர்ல ஒரு அசிங்கம். நம்ம ஊருக்கு புதுசா ஒரு பிச்சக்காரி வந்திருக்கா. அவா அநாதை. நிறை கர்ப்பிணி. ஆர் கொடுத்த புண்ணியமோ! பரிதாபமா இருக்கு. அம்மங்கோயில் மண்டபத்தில படுத்து கிடக்கா. பாவப்பட்டு யாராவது கொண்டு கஞ்சி கொடுக்காங்க. எந்த ஊரு, என்ன ஏது ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிறா. கேட்டா அழுறா...

நம்ம ஊரு கிறுக்குப் பய சோதிமுத்து இருக்கான்ல அவன் அவாட்டப் போயி சரசம் பண்றான். தொடுறான். முத்தம் கொடுக்கிறான். அவா அடிச்சா தொடச்சிகிறான். வீடுகளில் சோளக்கஞ்சி வாங்கிக் கொடுக்கான். ஒரே சிரிப்பு, ஒரே அசிங்கம், ஊரே நாறுது தாத்தா!

அவரது பதிலை எதிர்பார்த்தேன். உதட்டுக்குள்ளே சிரித்தபடி தடிக்கம்பை ஓங்கி ஒரு குத்துக் குத்தினார். கல் தரையில் தணார் என்று ஒலி எழுந்தது.

தாத்தா பேசினார்:

“அடே, சீவனத்த கழுதைக்கு சினக்கழுதை வைப்பாட்டி,” அப்படியாவது அவங்க சந்தோஷமா இருக்கட்டுமே, ஒண்ணுக்கொண்ணு துணை. ஊர் ஒண்ணும் நாறாது. பாவம் அதுகள்” என்றார்.

வேறு பேச்சே கிடையாது. அப்பொழுது மாணிக்கம் அண்ணன் வந்து “தாத்தா, இடது கால் முட்டு வாதம் போல வலிக்கு” என்றார்.

இலங்காமணித் தாத்தா சொன்னார்; அம்பதுவயசுக்குள்ள வாதமால, குப்பைமேனி இலையில் இரண்டை வதக்கி சோத்தோடு சேத்து மூணு வேளையும் சாப்பிடு. வாதம், கீதம் எல்லாம் காத தூரம் ஓடிடும்... போ...போ... என்றார்.

நானும் எழுந்து சென்றேன். வீட்டில் போய்தான் தாத்தா சொன்ன பழமொழியின் ஆழத்தை சிந்தித்தேன். ஊர் முழுவதும் கேலியும், கிண்டலுமாகப் பேசுகிற ஒரு காரியத்தைக் குறித்து அவர் எவ்வளவு அனுதாபத்தோடு பார்க்கிறார். அவரது பழமொழியில் உயிர் துள்ளுவது போன்று எனக்குத் தோன்றியது. இலங்காமணித் தாத்தாவை மனத்தால் பூஜித்தேன்.

மாதங்கள் பல கடந்தன. சுதந்திரத்திற்குப் பிறகும் பண்ணையூரில் தலைவிரித்தாடிய கொத்தடிமைத் தனங்களையும் - ஏழை எளிய மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதையும் எதிர்த்துப் போராட வேண்டி இருந்தது.

ஞாயிறு நாட்களில் மாலை மூன்று மணிக்குப் பிறகுதான் தாத்தா கோயில் மண்டபத்திற்கு வருவார்.

அவருக்காகக் காத்திருந்தேன். கையில் கோலுடன், தலையில் பாகையுடன் அவர் வந்த தோற்றம் என்னை அசத்தியது. மண்டபப் படியில் சாய்ந்து சாய்ந்து அவர் முதுகு தேய்ந்து காய்ப்பேறி இருந்தது.

யோபு வந்து, "போத்தி உமக்கு வயது என்ன ஆவுது?" என்று கேட்டான்.

அதுக்கு அவர் சொன்ன பதில், "இம்மட்டாக என்னை தூக்கிச் சுமக்கும் காலப்பறவையை நான் காட்டிக் கொடுக்க மாட்டேன்" என்றார்.

யோபுவுக்கு ஒன்னும் புரியாமல் போய் விட்டான்.

வயசக் கேட்டா தாத்தாவுக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும்.

நான் பேச ஆரம்பிச்சேன்: நம்ம வயணன் பயலுக்கு இப்ப நல்ல துட்டு. தூத்துக்குடியில் ஒரு வைப்பாட்டி வச்சிருக்கானாம். இங்க வீட்ல ஒரே சண்டை. பொண்டாட்டி சோறு கொடுக்காம வெளக்கமாறை தூக்குறா ..... ஒரே சண்டைக்காடு. ஊருல அவனுக்குச் சப்போட்டு. வருமானம் பாக்றான். வப்பாட்டி வச்சா என்னன்னு கேக்குறானுக.

தாத்தா சாந்தமா இருந்தாரு. தடியை தூக்கி இரு ஓரங்களையும் வருடியவாறு வீரத்தோடு பேசினார்.

"ஆம்பளை சேறு கண்ட இடத்தில் மிதிப்பான், தண்ணி கண்ட இடத்தில் கழுவுவான். ஆம்பளைக்குக் கற்பு கிடையாது, என்று ஒரு சொலவிடையை சொன்னான் பாரு, அவனையும் அந்த சமூகத்தையும் பழைய செருப்பால அடிக்கணும்" என்று கண்களில் கனல் பறக்கச் சென்னார்.

அவர் சொல்லின் ஆழம் கண்டு திகைத்துப் போனேன். பழமொழிகள் மக்கள் வழங்கும் நாணயங்கள் போல எனக்குத் தோன்றின.

முப்பது வயது நடராஜன் வயித்தத் தடவிக் கொண்டே வந்தான்.

"பாட்டயா, வயிர் இரயிது, ஊதுது, வலிக்குது" என்றான்.

இலங்காமணியார் சொன்னார் : "ஏல, குட்டப்பயல கலியாண வீட்ல கிடச்சிப் போச்சின்னு அள்ளி அடஞ்சியோ? மாட்டுப்பயல, தின்னது சீரணிச்ச பிறகுதான் சாப்படணும். அப்படிச் செய்தா மருந்தே வேண்டாம். இன்னிக்கு முழுதும் பட்டினி கிட பச்சத்தண்ணிய நிறைய குடி ... சுகமாயிரும் போ" என்றார்.

என் வாத்தியார் வாழ்க்கையில் புயல் வீசியது. சுதந்திரம் சோறு போடாததை கண்ட இளம் உள்ளங்கள் வீறுகொண்டு கொதித்து எழுந்தன.

பொதுஉடைமை இயக்கம் தடை செய்யப்பட்டது. பலரை சித்திரவதை செய்து சிறையில் தள்ளினர். தலைமறைவுத் தோழர்களின் தலையைக் காப்பாற்ற வேண்டி இருந்தது.

1950 ஆம் ஆண்டு "கம்யூனிஸ்ட்" என்று கைது செய்யப்பட்டேன். கொடிய அடிபாடுகளுக்குப் பிறகு சிறைவாசம். அதன் பிறகு சதி வழக்கில் இணைப்பு - மூன்று ஆண்டுகளாக விசாரணைகளும், சிறைக்கொடுமைகளும்.

சத்தியம் என்னை விடுதலை செய்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஊருக்கு வருகிறேன். மனதிற்குள் ஓர் ஆசை. இலங்காமணித் தாத்தாவின் கல்லறையில் அஞ்சலி செலுத்த வேண்டும் என்பது. வத்தி, பத்தி, தீப்பெட்டி, மாலை இவ்வளவையும் வாங்கி பைக்கு அடியில் ரகசியமாக வைத்துக் கொண்டேன்.

நான் சிறையிலிருக்கும் போது எங்க வீட்ல போலீஸ் ரெய்டு பண்ணி என்னுடைய புத்தகங்கள், நோட்டுகள் அனைத்தையும் அள்ளிக்கொண்டு போய்விட்டார்கள். வீடு நொறுங்கிப் போயிருந்தது.

"ரெண்டு பயல்களுக்கும் கலியாணத்த கட்டி வச்சிட்டு சாகணும்" என்று மகிழ்ச்சியோடு தந்தை சொல்லுகின்றபோது, அவர்களது வெற்றிலைக் காவிப்பற்கள் மினுங்கின. தம்பியின் விடுதலைக்காகக் கவலையோடு காத்திருந்த அண்ணன் கோயில்பிள்ளை வாத்தியார் கலியாணம் கட்டிக் கொள்ள சம்மதித்தார்.

மேலத்தெருவில் செத்த கொட்டு சத்தம் கேக்குது, என்னன்னு ஐயாவிடம் கேட்டேன்.

இலங்காமணி வீட்டில் என்று எந்தை சொல்லி முடிக்குமுன் எனக்கிருந்த மகிழ்ச்சி சொல்லி முடியாதிருந்தது.

"இலங்காமணியர் இவ்வளவு நாளும் உயிரோடிந்தாரா? நான் கொடுத்து வச்சவன். அவரது இறப்பு நிகழ்வை பார்க்க முடிந்ததே...!" அவர் இறந்த

துக்கத்தை விட மகிழ்ச்சியே அதிகமாயிருந்தது. அவருக்கு இறுதி மரியாதை செய்யலாமே என்ற ஆவல் மேலிட்டது.

அவர் வீட்டை நோக்கி நடந்தேன். என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் உருண்டோடியது.

இலங்காமணித் தாத்தா கையில் தடியுடன் மெதுவாக வந்து கொண்டிருந்தார் என்னை தழுவிக் கட்டியவாறு, "நம்ம கொள்ளைக்காரங்களைவிட வெள்ளைக்காரங்க தேவலைன்னு சொன்னேனே கேட்டியா? நீ விடுதலையாகி வந்திருக்கன்னு கேள்விப்பட்டு வாறேன்" என்றார்.

"தாத்தா, கொட்டுச் சத்தம் கேட்டுச்சே" என்றேன். "கோட்டிக்காரப் பயலுக... ஏம் பேரமாறு... எனக்கு இன்னக்கோட நூறு வயசு முடியுதுன்னு கண்டு பிடிச்சிட்டங்களாம். மாம்பழத்துக்குள்ள எப்படி வண்டு புகுந்ததுன்னு இவன்களுக்குத் தெரியுமா? மடப்பயல்க செத்த கொட்டப் போட்டு முழக்குறான்க... சின்ன இலங்காமணி திருநெல்வேலியில கட வச்சிருக்கான். அவன் வேலைதான் இது" என்றார் தாத்தா.

தேய்ந்து நறுங்கிப் போன அவரது பற்களிலிருந்து பிரகாசம் பளிச்சிட்டது.

குறிப்பு : 2004 ஆகஸ்ட் 'தாமரை'



கட்டு உடைந்தது

தினத்தாள் படித்துக் கொண்டிருந்த டாக்டர் நளினி மயக்கம் போட்டு சோபாவில் சாய்ந்தாள்.

ஓடிவந்து தம் மார்போடு அணைத்துக் கொண்டார் டாக்டர் எபனேசர்.

"நளி, என்ன ஆச்சி?" பரிவுடன் கேட்டார் கணவர் எபி. மாமியார் குளிர்ந்த தண்ணீரை முகத்தில் தெளித்து கைக்குட்டையால் துடைத்தாள். அதனைத் தடுத்த நளினி 'என்னை அமைதியாக இருக்க விடுங்கள்' என்று சொல்லி எழுந்தாள். சூடாக ஒரு தம்ளர் பால் கொண்டு வருவதற்குள் மாடிக்குச் சென்று விட்டாள்.

சிறிது நேரம் கழித்து அவள் நன்கு தூங்குவதைக் கண்ட டாக்டர் எபி மேலே யாரையும் அனுமதிக்கவில்லை.

பத்திரிக்கையில் அப்படி என்ன செய்தி இருந்தது?

கட்டம் கட்டி முக்கிய செய்தியாக ஒரு மாணவியின் பேட்டி இருந்தது. அதனைப் படித்த நளினியின் உடல் சிலிர்த்தது, வேர்வை கொட்டியது. மயக்கமானாள்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநிலத்தில் முதல் மதிப்பெண் பெற்றிருந்த மாணவியின் படம் மூன்று வண்ணங்களில் அழகாக முதல் பக்கத்தில் இடம் பெற்றிருந்தது. 'நான் பெரிய டாக்டராகி ஏழைகளுக்கு இலவச சிகிச்சை செய்வேன்' என்று கூறியது முத்திரைச் செய்தியாக முக்கியத்துவம் பெற்றிருந்தது.

நளினியின் மனத்திரையில் கடந்த காலக் காட்சிகள் பல பளிச்செனத் தோன்றின.

சரியாகப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு-பள்ளி இறுதித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றேன். புகைப்படக்காரர்கள் வந்து பல கோணங்களில் 'கிளிக்' செய்தனர். பத்திரிக்கைக்காரர்கள் பல கேள்விகள் கேட்டார்கள்.

நீங்கள் என்ன வேலைக்குப் போவீர்கள்?

டாக்டராவேன்?

உங்கள் இலட்சியம் என்ன?

பிளஸ் டூ தேர்விலும் முதல் மதிப்பெண் எடுப்பேன்,

டாக்டராகி ஏழை எளிய மக்களுக்கு இலவச மருத்துவம் செய்வேன்.

இச் செய்தி அனைத்து இதழ்களிலும் ஒளிமயமாக வெளியாயின.

பல அமைப்புகளிலிருந்து பரிசுகள் குவிந்தன. உள்ளூர் பொதுநலச் சங்கத்திலிருந்து பாராட்டும், பரிசும் பெற அழைத்தார்கள். படித்த பள்ளியிலிருந்தே பணமுடிப்புக் கொடுத்தார்கள். ஒரு தினப் பத்திரிக்கையிலிருந்து திரண்ட தொகை கிடைத்தது. சக மாணவர்கள் அகம் குளிர்ந்து பாராட்டினர். பெற்றோர் பூரித்துப் பொங்கினர், நான் திக்கு முக்காடிப் போனேன்.

பன்னிரண்டாம் வகுப்பிலும் முதல் தரமாக வந்தேன். மருத்துவக் கல்லூரிகளிலிருந்து மாலைபோட்டு அழைத்தனர்.

டாக்டர் நளினி எம்.பி.பி.எஸ் முடித்து இதயநோய் பிரிவில் வல்லுநர் ஆனார். டாக்டர் எபனேசர் எம்.டி.அவர்களை நளினியின் பெற்றோர் பல இலட்சங்கள் கொடுத்து விலைக்கு வாங்கினர். அதற்காக நளினி நிறைய சம்பாதிக்க வேண்டி இருந்தது.

எப்போதாவது இதயத்தின் அடி ஆழத்தில் ஏழைகள் நினைவு வந்து மறையும். திருமணம் மிகச் சிறப்பாயிருந்தது. அதுவும் கூட பெரிய வசூல் விழாவாயிற்று.

இருவரின் ஒருமித்த உழைப்பால் மருத்துவ வருமானம் பெருகியது.

ஒருநாள் கணவனிடம் கிசுகிசுத்தாள்:

'இதய நோயால் அவதிப்படும் ஆழ்வாருக்கு சற்று ... சலுகை காட்டுவோம். பாவம், ஏழை வர்த்தகக் குமஸ்தா' என்றாள்.

நளினி, பொருள் இல்லார்க்கு இவ்வுலம் இல்லை,கார் வாங்கி விட்டோம். மூவாயிரம் சதுர அடியில் வீடுகட்டிக் கொண்டிருக்கிறோம். இன்னும் நவீன கருவிகளுடன் கூடிய பெரிய மருத்துவமனை கட்ட வேண்டும். நமக்கு இன்னும் கோடாகோடிக்குத் தேவைகள் உள்ளன. நோயாளிகளிடமிருந்துதான் பணத்தைக் கறக்க வேண்டும். தயவு தாட்சணயங்கள் நயா பைசாவுக்கும் செல்லுபடி ஆகாது என்று ஈவு இரக்கமற்றுப் பேசினார் டாக்டர் எபி.

பணக்கணக்கு டாக்டர் எபியின் கண்டிப்பான கண்ட்ரோலில் இருந்தது. தேவைகளின் அடிப்படையில் டாக்டர் நளினி, டாக்டர் எபியின் செல்லப் பிராணியாகவும் பொருளாதார அடிமையாகவும் ஆகி விட்டாள்.

ஆணாதிக்கம் கொடிகட்டிப் பறந்தது.

வருடா வருடம் மாநில அளவில் மதிப்பெண் பட்டியல்களும் - மாணவர்களின் பேட்டிச் செய்திகளும் வந்து கொண்டே இருந்தன.

'நான் கலெக்டராகி நீதி செய்வேன்'

'நான் மந்திரியாகி சுத்தமாக வாழ்ந்து காட்டுவேன்'

'நான் பொறியியல் வல்லுநராகி பொதுப்பணித் துறையில் ஊழல் இல்லாமல் மாதிரி காட்டுவேன்'.

'நான் நரம்பியல் டாக்டராகி அனைவருக்கும் இலவச மருத்துவம் செய்வேன்'. இப்படிச்சய்திகள் வருடாவருடம் வந்து வந்து மரத்துப்போயின.

எபி மருத்துவமனை பற்றி...

பிரசவவேளையில் அவசியமில்லாமல் ஆயுதகேஸ் ஆக்கி விடுகிறார்கள்.

ஏழைகள் புகமுடியாதவாறு பீஸ் அதிகம் வாங்குகிறார்கள்

டாக்டர் நளினிக்கு நல்ல மனம் உண்டு, ஆனால் அவர்களால் ஒன்றும் பண்ண முடியாது. இப்படி மக்கள் பரவலாகப் பேசினார்கள்.

எபி மருத்துவ மனையின் ஆடம்பரத் தேவைகள் பெருகின. இரண்டு கார் போதாது, நான்கு வேண்டும். அனைத்தையும் கம்ப்யூட்டர் மயமாக்கல் அவசியம். இப்படியாக அனுமார் வால்போல் தேவைகள் நீண்டன.

அவர்களின் மருத்துவமனையில் ஒரு பரிதாபமான கேஸ். அண்ணாமலை என்ற ஒரு தொழிலாளிக்கு இருதய நோய். இரண்டு வாரத்திற்குள் லட்சத்திற்கு மேல் செலவாயிற்று. இன்னும் பத்து நாட்கள் சிகிச்சை செய்தால்தான் சுகம் கிடைக்கும்.

பணம் காரணமாக நோயாளிக்கு மருத்துவம் நிறுத்தப்பட்டது. விடிந்தால் அண்ணாமலையை வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள். அண்ணாமலை வீட்டார் டாக்டர் எபி காலில் விழுந்து கெஞ்சி வேண்டினார்கள்.

"பணம் இல்லாமல் ஒன்றும் நடக்காது, வீட்டிற்குப்போய் கைப் பக்குவமாப் பாருங்க" என்ற சொல்லி ஒரே மறுப்பு,

அன்று இரவு நளினிக்குத் தூக்கமேயில்லை.

அண்ணாமலையின் உயிரை நாம் காப்பாற்றலாம், வீட்டிற்கு அனுப்பினால் உயிர்போய்விடும், பாவம் அவருக்கு ஐந்து பிள்ளைகள் நளினி கணவனிடம் வேண்டினாள்.

இரக்கம், கருணை என்று பார்த்தால் ஆஸ்பத்திரியை நடத்த முடியாது. அந்த ஆளுக்கு இன்னும் இரண்டு இலட்சம் ஆகும், நாம் செலவிட முடியுமா? டாக்டர் எபி இரைந்து விழுந்தார்.

நளினிக்குத் தூக்கம் வரவில்லை. தலையணை நனைந்தது. தன் மாணவப்பருவத்தில் பத்திரிக்கைகளுக்குக் கொடுத்த பேட்டிச் செய்தி மனக்கண் முன் பூதாகரமாகத் தோன்றின.

ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்வேன் என்று சொன்ன செய்தி கண்முன் நின்று ஈட்டி போல் பாய்ந்தது.

மறுநாள், காலைவேளை; பத்திரிகையைத் திறந்தால் அதே செய்திகள்.

டாக்டராகி இலவச மருத்துவம் செய்வேன்

டாக்டர் நளினிக்கு எரிச்சல் மூண்டது. கண்கள் இருண்டன. மயக்கமானாள் - மாடிக்கு வந்து சற்று ஓய்வெடுத்து எழுந்து உட்கார்ந்தாள்.

டக் டக் ஒலியுடன் மாடிக்கு வந்த டாக்டர் எபி,

நளி, கார் ரெடியாயிட்டு, சீக்கிரம் டிபன் பண்ணிட்டு உடனே புறப்படு. இன்று நம் கிளினிக்கில் பெரிய சீரியஸ் கேஸ்கள் இருக்கே... எபி அவசரப்படுத்தினார்.

டாக்டர் நளினியின் முகம் இறுக்கமானது. குற்ற உணர்வுடன் இதயம் கனத்தது. 'டாக்டர் நீங்க போங்க, நான் நடந்து வருவேன். அண்ணாமலையின் உயிரைக் காப்பாற்றுவேன். மற்றும் பாவப்பட்ட நோயாளிகளுக்குக் கருணை காட்டுவேன். நாம் சம்பாதித்தது போதும்' என்று உறுதியாகக் கூறி நடந்து கிளினிக்கிற்குக் கிளம்பினாள்.

டாக்டர் எபி, தம் கட்டுப்பாடு உடைவது கண்டு எரியும் அக்கினிபோல் சீறினார்.

மியாவ் ... மியாவ்...

அன்று உபவாச ஒடுக்கக் கூட்டம். காலை ஒன்பது மணி முதல் மாலை மூன்று மணிவரை பாட்டு, பைபிள்-படிப்பு, மன்றாட்டு, சாட்சி கூறல் ... அப்படியே தொடர்ந்து அல்லேலூயாக்கள், ஆர்ப்பாட்டங்கள், ஆரவாரங்கள்...

யாருக்கும் தூக்கம் வராது.

பாஸ்டர் முன்னிலையில் பிரசங்கியார் சிறப்புச் செய்தியை முடிக்கும் போது செய்யும் ஜெபத்தில் அனல் மூண்டு எரியும்.

கை தட்டல்கள், உடலைக் குலுக்கல்கள், பல பாஷை பேசுதல்... இப்படி விறுவிறுப்பாயிருக்கும். உணர்ச்சி வசப்பட்டு உடல் உறுப்புகளை வருத்துவோரும் உண்டு. இவைகளினூடே தங்கள் நியாயமான பிரச்சனைகளுக்காக பாரத்தோடு அழுது மன்றாடி வேண்டல்கள் ஏறெடுத்து பரிகாரம் தேடிக் கொள்ளும் ஆத்துமாக்களையும் காண முடியும். உலக சமாதானத்திற்காகவும், வன்முறைகள், வறுமைகள் இல்லாத ஒரு புது உலகம் காணவும் ஊக்கமாக ஜெபிக்கும் உத்தமர்களும் உண்டு. ஆவிக்குரிய வரம் பெற்ற பலர் பல பாஷை பேசுவதையும்-அர்த்தம் புரியாத கூச்சலாய் இருப்பதையும் காணலாம்.

சிறப்புச் செய்திக் கொடுக்க வந்திருக்கும் பிரசங்கியார் பலபாஷை பேசுவதில் வல்லவர். அதாவது வல்லமையான ஜெபத்தினூடே அர்த்தம் இல்லாத ஓர் உளறல் குரல் வாயிலிருந்து ஒரு சீராக உருண்டு வரும். அதனை 'அந்நியபாஷை' என்றும் சொல்வார்கள். அந்த மொழிக்குப் பொருள் கிடையாது.

அந்நிய பாஷைபேசுவோர் அபூர்வ வரம் பெற்றவர்களாக 'விசுவாசிகள்' கருதுகிறார்கள். தங்களுக்கு அந்நியபாஷை வரம் வேண்டும் என்று பலர் காத்திருந்து ஜெபிப்பார்கள்.

செய்தியாளர் இடையிடையே கொடுக்கும் பிரேய்ஸ்தலாட், ஆமென், அல்லேலூயா, நன்றி போன்ற குரல்களும், ஒன்றிரண்டு வரிகளில் பாடும் பாடல்களும் மேலும் மேலும் பக்தி பரவசத்தைத் தூண்டும்.

அன்று பலர் புதிதாகப் பலபாஷை பேசியது பிரசங்கியாருக்கு பெருத்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர் அந்நியபாஷை பேசுவதில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்.

"மியாவ் ... மியாவ்"

பல பாஷை கூச்சல்களுக்கு மத்தியில் 'மியாவ், மியாவ்' என்ற ஒலியும் ஓங்கி ஒலித்தது.

பல பாஷையின் பரிணாம வளர்ச்சி கண்டு பிரசங்கியார் பூரித்துப் போனார்.

"மியாவ் ... மியாவ்"

பலபாஷை சித்தாந்தத்தில் பிரசங்கியாருக்கும், பாஸ்டருக்கும் கருத்து வேறுபாடு உண்டு.

'பிரார்த்தனையில் பொருள் இல்லாமல் அலப்பக் கூடாது, அது போலித்தனமானது. என்பது பாஸ்டரின் கருத்து.

சபை மக்கள் சிலரின் கட்டாயத்தின் பேரில் பாஸ்டர் இந்தப் பிரசங்கியாரை அழைத்திருந்தார். எனவே உபவாசக் கூட்டத்தினுள் பூனை புகுந்து விட்டதோ என்றெண்ணிய பாஸ்டர் கூர்ந்து கவனித்தர்.

மியாவ், மியாவ் என்று உரத்த குரல் கொடுக்கும் ஓர் அம்மாவைக் கண்டு கொண்டார். அந்தம்மாவைக் கூப்பிட்டு, 'பரிசுத்தக் குறைச்சலாக ஏன் இப்படி பூனைக் கூச்சல் போடுகிறீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு அந்தம்மா 'அது ஒரு சாட்சி பாஸ்டர்' என்று கூறி கைகளையும், தலையையும் அதிகமாக ஆட்ட ஆரம்பித்தார்கள்.

மன்றாட்டுகள் முடிந்து சாட்சிவேளை வந்தது. பாஸ்டர் மியாவ் அம்மாவை சாட்சி சொல்லும்படி அழைத்தார்.

'பாஸ்டர் ஐயா, எனக்குக் கூட்டத்தில் பேசிப் பழக்கமில்ல, நான் சாச்சி சொன்னதுமில்ல, நா ஒண்ணும் படியாதவா. இன்னிக்கு துண்டு மீன் குழம்பு வச்சி அவசரமா ஜெபக் கூட்டத்துக்கு வந்துட்டேன்.

'எனக்கும் பாலபாஷை பேசனும்னு ஆசை. ஏசப்பாட்ட கேட்டேன். திடீர்னு மீன் குழம்புச் சட்டி நினைவுக்கு வந்துட்டு. அதன் பக்கத்துல பூனை ஒண்ணு நின்னுக்கிட்டிருப்பதை ஞானதிருஷ்டியினால் பார்த்துட்டேன். மீன் குழம்புச் சட்டியை உருட்டித் தின்னுட்டுப் போயிருமேன்னு பயந்துட்டேன் - உடனே மியாவ் ... மியாவ்னு சத்தமிட்டுக் கத்திட்டேன். பலமுறை கத்தினேன் பூனை ஓடிட்டு. திரும்பத் திரும்பக் கத்தினது எனக்கு பல பாஷை போலத் தோணிட்டு, சந்தோசம் பொங்கிட்டு... கர்த்தருக்கு ஸ்தோத்திரம், ஆமென், அல்லேலூயா ... என்று சொல்லி கைகளை உயர்த்தி மியாவ் ... மியாவ் ... என்றார்கள். குதூகலத்தில் குதித்து ஆடினார்கள்.

பாஸ்டர் முகம் சுளித்தார்; பிரசங்கியார் வாயில் 'அல்லேலூயா' வரவில்லை.

மக்கள் பலர் சிரித்தனர், இன்னும் சிலர் சபித்தனர்.

ஆதரவாளர்களின் ஆழம்

பாளை-ஜான்ஸ் மேனிலைப்பள்ளி ஆசிரியர்களாகப் பதினெண்மர் பம்பாயைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருந்தோம்.

பம்பாயில் பலதுறைகளில் பரவியுள்ள நெல்லை மக்களை நினைத்து வியந்தேன்.

தாராவி என்ற பகுதி ஒரு குட்டித்தமிழ்நாடு போன்று எனக்குத் தோன்றியது. அதிலும் நெல்லை மக்களின் தடம் பலமாகப் பதிந்துள்ளது.

அது 1980 ஆம் ஆண்டு அதிகாலை ஆறு மணி இருக்கும். சாய்... சாய்... நாலணா... என்று சாயா விற்பனையாளர்களின் சத்தம் எங்கள் காதுகளில் ரீங்காரமாகத் தொனித்தது. நானும் நண்பர் ஜட்சனுமாகச் சேர்ந்து டீ குடித்துவரச் சென்றோம்.

அங்கு கண்ட ஒரு காட்சி எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

ஏழுமாடிக் கட்டிடம் ஒன்றில் நாலாவது மாடியிலிருந்து ஒரு நார்ப்பெட்டி கீழே இறங்கிக் கொண்டிருந்தது. மேலே ஏறிட்டுப் பார்த்தேன். ஓர் அம்மா பெட்டியை கயிற்றினால் கீழே இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

பெட்டி தரையிறங்கவும் அதிலிருந்து கோழியும் குஞ்சுகளும் பொலு பொலு வென தரைக்குத் தாவின. உடனே அவைகள் இரை பொறுக்கச் சிதறிச் சென்று விட்டன. எனக்கு ஒரே வியப்பு.

நண்பரிடம் சொன்னேன்.

“இந்தக் கோழிக்கு உரிய வீட்டுக்காரங்க நிச்சயம் திருநெல்வேலி ஆசாமிகளாத்தான் இருப்பாங்க” என்றேன்.

நண்பர் ஆமோதிப்பது போல் சிரித்தார்.

‘நாட்டுக்கோழி வளர்த்து முட்டை சாப்பிட்டவங்க சும்மா இருப்பாங்களா’ என்றேன்.

இருவரும் தேனீர் பருகிவிட்டு விடுதிக்குச் சென்றோம். ஆசிரியர் குழாமுடன் தொங்கு தோட்டம் முதலிய இடங்களைச் சுற்றிப்பார்த்து மாலை ஐந்து மணிக்கு வீட்டிற்கு வந்தோம்.

மாலை ஆறு மணிக்கு என் கால்கள் ஏழுமாடிப்பக்கம் விரைந்தது. நாலாவது மாடியிலிருந்து கயிற்றில் தொங்கிய நார்ப் பெட்டி கீழே இறங்கியது. அது நெல்லை நாட்டின் வண்ணப் பெட்டி. பனை ஓலையில் செய்தது.

பெட்டி தரையிறங்கவும் தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த கோழியும்-குப்பைகளை கிளறிக் கொண்டுடிருந்த குஞ்சுகளும் விரைந்து ஓடி வந்தன. கொக், கொக் என்று இன்ப ஒலிகளை எழுப்பின.

எட்டு உருப்படிகளும் நொடிப்பொழுதில் பெட்டியில் ஜம்மென்று ஏறிக்கொண்டன.

பெட்டி உயர ஏறியது.

நாலாவது மாடியின் பால்கனியில் நின்று, கயிற்றை இழுத்த அம்மா கோழியை மேலே ஏற்றி விட்டார்கள்.

பம்பாய் பட்டணத்தில் கோழி வளர்க்க இத்தனை ஆசையா, குப்பைகளைக் கிளறும் கோழிகள் குறிப்பிட்ட நேரத்தில் பெட்டியில் வந்து ஏறிக்கொள்வது எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

எனக்கு அந்த அம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அறிமுகம் இல்லாதவர்களிடம் போய் எப்படிப் பேசுவது? என்று சற்று வெட்கப்பட்டேன்.

துணிந்து லிப்டில் ஏறி நாலாவது தளத்தில் இறங்கினேன். கோழி அம்மா வீட்டை எளிதில் கண்டுபிடித்து விட்டேன்.

அந்தம்மாவிடம் என்ன பேசுவதென்று தெரியாமல் நின்றேன்.

அந்த அம்மாவே 'யார் வேண்டும்?' என்றார்கள்.

'ஐயாவைப் பார்க்க வேண்டும்' என்று சொல்லி வைத்தேன். 'அவங்க மாதுங்காவில் ஜவுளிக்கடை வச்சிருக்காங்க, இரவு ஒன்பது மணிக்குத்தான் வருவாங்க,'

அப்படியா, அம்மா உங்களை ஒன்று கேட்க வேண்டும். நீங்க உங்கள் கோழிகளை, பெட்டியில் ஏறவும் இறங்கவும் எப்படிப் பழக்கினீர்கள்!

உடனே அந்த அம்மா சிரித்துக் கொண்டே சொன்னார்கள்.

“அதென்ன, சாதாராணக் கோழியா? ஐ.எம்.எஸ் கோழி, கோழியும் குஞ்சுமா பலுகிப் பெருகும். அவை முழுவதும் ஐ.எம்.எஸ் காணிக்கைக்குப் போகும். ஐஎம்.எஸ் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இந்திய மிஷனெரி சொசைட்டி என்று பொருள்.

நான் திணறிப் போய் நின்றேன்

தூத்துக்குடிப் பக்கமுள்ள அந்த அம்மா இந்திய மிஷனெரி இயக்கத்தின் மீதும், அதன் மகத்தான பணிகள் மீதும் மிகுந்த பற்றுள்ளவர்கள். வருடா வருடம் அந்த சங்கத்திற்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுப்பார்கள்.

மலைவாழ் மக்களிடையே அவர்கள் கரிசனையோடும், தரிசனத்தோடும் செய்து வரும் ஊழியங்கள் பற்றி, அந்த அம்மா பிரசங்கமே செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

மனிதர்களை பிடித்துத் தின்ற ஆதிவாசி மக்களை அன்புள்ள மனித நேய மக்களாக மாற்றி இருப்பது பற்றி நீங்கள் படிக்கவில்லையா? என்று கேள்வி கேட்டு திணறடித்தார்கள்.

எனக்கும் திருநெல்வேலியில் பாளையங்கோட்டைதான் என்ற போது அவர்கள் சிரித்தேவிட்டார்கள்..

ஐ.எம்.எஸ். சங்கத்தின் வேர் பாரதம் எங்கும் சென்று ஆழமாக வேரோடியிருப்பது கண்டு கடவுளுக்குத் துதி செலுத்தினேன்.

குறிப்புகள் :

1. ஐ.எம்.எஸ் நூற்றாண்டு மலரில் வெளியானது

2. ஐ.எம்.எஸ். என்று அழைக்கப்படும் இந்திய மிஷனெரி சங்கம், 1903 ஆம் ஆண்டு பிப்ரவரி 12ஆம் தேதி பேராயர் வேதநாயகம் சாமுவேல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மலைவாழ்-ஆதிவாசி மக்களுக்குக் கல்வி அறிவோடு சமூக, சமய ஞானத்தையும் ஊட்டி ஊழியம் செய்து வருகிறார்கள். சமத்துவம் - சகோதரத்துவத்திலும் பயிற்சி பெறுகிறார்.

புதுவருட டைரி

பளிங்கு நெற்றி, சித்திரச் சிற்பம், பட்டுக் கன்னங்கள், பச்சிளம் பதினாறு வயது, மருத்துவ மனையில் உள்ளிருப்பு நோயாளி.

ஹலோ கவீ,

குட்மானிங் டாக்டர், எப்பத்தான் என்னை டிஸ்சார்ஜ் பண்ணலாம்னு நினைக்கிறீங்க?

இப்ப, என்னம்மா அவரசம்?

அவசரமா? வந்து ஒரு மாசமாச்சி. அநாதை விடுதியில் என் சிநேகிதிகள் என்னைத் தேடுவாங்க.

கவீ, கிறிஸ்மஸ் அன்று, கண்டிப்பா உன்னை டிஸ்சார்ஜ் பண்ணி விடுவேன், ஓ.கே..!

டாக்டரிடமும், வக்கீலிடமும் பொய் சொல்லக் கூடாதுதான், ஆனா அவங்க பொய் சொல்வாங்க, இல்லியா டாக்டர்?

இளமை ததும்பும் முப்பது வயது டாக்டரின் முகம் சிவந்தது. இரத்தப் புற்றுநோய்ச் சிலுவையில் அறையுண்டு தவிக்கும் எந்த நோயாளியிடந் தான் உண்மையைச் சொல்ல முடியும்?

டாக்டர் கிறிஸ்மஸ்க்கு இன்னும் ஐந்து நாட்களே இருக்கு

அடுத்த நாள் வார்டு ரவுண்ட்ஸ்க்கு நுழைந்தபோது கவிதாவின் படுக்கை அருகே நர்ஸ் நின்று கொண்டிருந்தாள். டாக்டரைக் காணவும் எதிர்கொண்டு விரைந்து வந்தாள்.

பாருங்க டாக்டர், மெடிக்கல் சார்ட்டில் கண்டதையும் கிறுக்கி வைத்திருக்கிறாள், சார்ட்டை நீட்டினாள்.

இதோ

எல்லா ஜனத்துக்கும்

மிகுந்த சந்தோஷம்,

குடும்பத் தலைவர்களைத் தவிர,

கவீ, இதென்ன?

என்னை மன்னிச்சிருங்க டாக்டர்

நீயோ வித்தியாசமான பிள்ளை

கவிதாவின் இமைகள் சிறகடித்தன, முகம் எழிலோவியமானது.

மறுநாள் காலை

கிளினிக்கில் மீட்டிங் முடிந்து தன் அறைக்குத் திரும்பிய டாக்டரின் கண்களில் அந்த கிறிஸ்துமஸ் வாழத்துமடல் பட்டது.

அதைப் பிரித்தார்.

"ஸ்டாம்பு, கார்டு, கவர்

விலை ஏற்றம்

ஏசிக்கொண்டே

அனுப்பிடும்

கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்"

புல்லரித்துப் போனார் டாக்டர்.

மறுநாள், அதென்ன கூட்டம்?

"கவிதா, இதோ வர்றேன்" ஓடினார் டாக்டர்.

அங்கே கவிதாவின் படுக்கையைச் சுற்றி நர்ஸ்களும், ட்யூட்டி டாக்டரும் போராடிக் கொண்டிருந்தனர். டாக்டர் ராஜேஷ் வந்ததும் அனைவரும் வழி விட்டனர்.

கவிதா துடித்துக் கொண்டிருந்தாள்.

கவிதா டாக்டரின் கையை பலமாகப் பிடித்துக் கொண்டாள்

டாக்டர் விறு விறுவென மருத்துவக் குறிப்புகளைக் கட்டளையிட்டார். நர்ஸ்களும், ட்யூட்டி டாக்டரும் கால்களில் சக்கரம் மாட்டிக் கொண்டு செயல்பட்டனர். சூறாவளிச் சூழ்நிலை.

ஒரு மணிநேரம் கழித்தே கவிதா அரைச் சிரிப்பை அவிழ்த்தாள்.

கவிக்குயிலே, கொஞ்ச நேரத்தில் பயங்காட்டிட்டியே?

டாக்டர், பயமா இருக்கு?

பயப்படாதேம்மா, இன்னிக்கு நம்ம ஆஸ்பத்திரியில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை.

மருத்துவமனை அலங்காரம் பூண ஆரம்பித்தது.

நட்சத்திரங்கள், ஜிகினா தோரணங்கள், பலூன்கள்... என கண் கொள்ளாக் காட்சி. அன்று கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு கொடுக்க வரப்போகிறாராம்.

கவிதாதான் நோட்டீஸ்களை வினியோகித்தாள்.

மதிய உணவுக்குப் பின் பைக்குள் கையைவிட்ட டாக்டர் நோட்டீஸ் ஒன்று தட்டுப்படவே அதை எடுத்துப் பிரித்தார்.

கவிதா கொடுத்த நோட்டீஸ்தான் அது. நோட்டீசின் பின்பக்கம் ஏதோ எழுதி இருந்தது டாக்டரின் கண்களில் பட்டது.

“கிறிஸ்மஸ் தாத்தாவுக்குக்

கிடைக்கும்

வரவேற்பு கூட

கிறிஸ்துமஸ் குழந்தைக்கு

இல்லையே” !

டாக்டர் பிரமிப்புடன் படித்தார், பெருமூச்சு விட்டார்.

இரவில் கவிதாவை டாக்டர் சந்தித்தபோது அவள் கையில் ஒரு டைரி இருந்தது.

"கிறிஸ்துமஸ் தாத்தா எனக்குத் தந்த பரிசு இந்த டைரி”.

"நீ கவிதை எழுதறது தெரிஞ்சே கிறிஸ்துமஸ் தாத்தா உனக்கு சரியான பரிசு கொடுத்திருக்கார்”

"டாக்டர் ஒன்று சொல்லட்டுமா?”

"என்ன சொல்லப்போறே”

"ஜனவரி ஒண்ணை நான் தொட்டுட்டேன்னா, இந்த டைரியை எடுத்துக் கொள்கிறேன். இல்லேன்னா இதை நீங்களே என் நினைவா எடுத்துக்குவீங்களா?”

வீணா, உளறாதே

கிறிஸ்துமஸிற்கு முந்திய நாள் மீண்டும் கவிதாவிற்கு மூச்சுதிணறல் ஏற்பட்டது.

"டாக்டர் நான் பிழைப்பேனா?"

"நீ பிழைக்கணும்."

எழுந்து உட்கார்ந்தாள். டாக்டர் கையிலிருந்த பேனாவை எடுத்து அவரின் உள்ளங்கையில் எழுதினாள்.

"வருடா வருடம்

எம் ஆலயத்தில்

கிறிஸ்துமஸ் பிறக்கின்றன...

கிறிஸ்துதான் இன்னும்

பிறக்கவேயில்லை"

டாக்டர் நெகிழ்ந்து போனார்

"கவிக்குட்டி, நிம்மதியா தூங்கு, குட்நைட்"

கிறிஸ்துமஸ் ஆராதனையின் பாதி வேளையில் வார்டு பாய் வந்து காதில் போட்ட செய்தியைக் கேட்ட டாக்டர் சரேலென வெளியேறி ஓடினார்.

கவிதா அடங்கிப் போனாள்.

டாக்டரின் வயிற்றுக்குள் ஒரு ராட்சஸப் புயல்

"கவீ".. டாக்டரின் உள்ளம் ஓலமிட்டது.

டாக்டர் மெல்ல எழுந்தார். அவர் கண்களில் பட்டது புதுவருட டைரி.

அதை எடுத்துப் புரட்டினார்

"குட் பை டாக்டர்"

குறிப்பு : எம் இலக்கிய மாணவர் ராஜ்கமல் எழுதிய பெரியதோர் சிறுகதையின் சுருக்கம்.

'விழியே விழியேன்' என்ற நூலிலிருந்து...

உன்னத பாத்திரம்

"ஒரு தகப்பன் என்ற முறையில் உங்கள் கவலையை நான் நன்கறிவேன். ஆனால் ஒரு மனநோய் நிபுணர் என்ற முறையில் ஒரு மன நோயாளி ஓர் உடைந்த பாத்திரம் தான். பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியாது" என்று மிகவும் அசிரத்தையோடு சொன்னார் மருத்துவர் மனோகரன்.

"இறைவன் பரம வைத்தியன். அவர் உடைந்த பலகைகளை ஒன்று சேர்க்கும் உலகத்தச்சன் மட்டுமல்ல, உடைந்த உள்ளங்களை ஒன்றிணைக்கும் ஆத்மீகத் தச்சனும் ஆவார். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை" என்று சொல்லிச் சவால் விட்டுச் சென்றார், இரண்யன்.

டாக்டர் மனோ ஏளனமாகச் சிரித்தார்.

பேராசிரியர் இரண்யனின் மகன் ஜெகன், "பிஞ்சிலே மிஞ்சிய ஞானி" என்று வீட்டிலே அவனைக் கேலியாகப் பேசினார்கள்.

ஜெகன் வீட்டாரே அவனுக்கு எதிரியாயினர். அவன் மனதில் படிந்திருந்த ஆயிரக்கணக்கான வேத வசனங்களைக் கொண்டு உலகியலை எடைபோட ஆரம்பித்தான். ஒரு நாள் முதலில் வந்த பிச்சைக்காரனுக்கு அப்பா காசு போட்டார். அடுத்து வந்த பிச்சைக்காரனிடம் சில்லறை இல்லை என்றார். உடனே ஜெகன் சினந்து எழுந்தான். சில்லறை வேண்டாம், பணமாகப் போடலாம் என்று சொல்லி அப்பா பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துப் போட்டான்.

"நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருங்கள்" என்று அப்பாவுக்குப் புத்தி சொல்வான். அவனுடைய நண்பன் காதல் வலையில் வீழ்ந்த போது "நெருப்பை மடியில் கட்டிக் கொள்ளாதே, நரக தண்டனைக்கு இரையாகாதே" என்று நேருக்கு நேர் எச்சரிப்பான். அவனது அம்மா, அப்பாவை எதிர்த்துப் பேசினால், "பெண்ணானவள் புருஷனுக்குக் கீழ்ப்படியக்கடவள்" என்று ஏகத்தாளமாகச் சொல்வான். அவன் தங்கை டி.வி. போட்டுப் பார்ப்பாள். "விஷத்தை விழுங்காதே" என்று சொல்லி டி.வி.யை ஆப் செய்வான். அவன் இதயம் முழுவதும் வேதவாக்குகளால் நிறைந்திருந்தன.

இந்தக் கொடுமையான சமூக அமைப்பை ஜெகனால் ஜீரணிக்க முடியவில்லை. கிறிஸ்தவர்களை அவனால் மன்னிக்கவும் முடியவில்லை.

அகோரமாகச் சிரித்தான். தூக்கமில்லாமல் தகித்தான். மருத்துவ சிகிச்சைக்கு மறுத்தான். 'கோயிலுக்குப் போவோம்' என்று சொல்லி ஏமாற்றி அவனது பெற்றோர் மனநோய் மருத்தவரிடம் கொண்டு சென்றார்கள்.

மருத்துவ ஊழியர்கள் அவனை வலுக்கட்டாயமாகத் தூக்கிப் படுக்கையில் போட்டுக் கிடத்தினர். "பிணியாளிகளுக்குத்தான் வைத்தியம் வேண்டும், எனக்கு வேண்டாம்" என்று சொல்லித் திமிறி எழுந்தான் ஜெகன்.

சமூக நீதி பேசியதால் தலைமை மருத்துவர் அவனைப் பகை உணர்வோடு பார்த்தார். 'நூறோடு நூற்று ஒன்று; அத்தோடு இது ஒன்று' என்று அசிரத்தையோடு மயக்க ஊசி போட்டார். ஜெகன் சுருண்டு விழுந்தான். அடுத்து கரண்ட் ஷாக் கொடுத்தார். பின்பு கடினமான தூக்க ஊசிகளை ஏற்றினார்.

மறுநாள் ஜெகன், டாக்டரிடம் சென்று உள்ளம் கொதிப்பேறி அனல் கொண்டு பேசினான். "டாக்டர் ஸார், மன நோயாளிகளை மயக்க ஊசி போட்டு, தூக்க மாத்திரைகளைக் கொடுத்து நினைவிழக்கச் செய்து நிலைத் தடுமாற வைப்பது ஒரு வைத்தியமா? பாதிப் பைத்தியத்தை முழுப்பைத்திய மாக்குவதுதான் உங்கள் சிகிச்சையா? டாக்டர் ஸார்! நீங்கள் செய்வது பெருத்த அநியாயம். உள்ளேயே மெடிக்கல் ஷாப் வைத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு மாத்திரைகள் வாங்க வைப்பதுதான் உங்கள் தொழிலா?

பிணியாளியோடு பிரார்த்தனை செய்து பேசணும். அன்பு காட்டணும், உள்ளத்தில் தைத்திருக்கும் முள்ளை எடுக்க முயற்சிக்கணும், இங்கு வருகிற எல்லோருமே மனநோயாளிகள் அல்ல. அப்படியே இருந்தாலும் மனதோடு பேசி குணமாக்க முடியும். அளவுக்கு மிஞ்சிய ஞான ஞாயிறுகளை, அறிவுச்சுடர்களை இந்த உலகம் பைத்தியமாகக் கருதுகிறது. அவர்களோடு நீங்கள் கவுன்சிலிங் செய்யக் கூடாதா? நோயாளிகளிடம் தெய்வ பயத்தோடும், மானுட நேயத்தோடும் அணுகி நோயின் கூறுகளை ஆராயக்கூடாதா?

டாக்டர் கர்வத்தின் உச்சிக் கொம்பில் நின்றார்.

பெற்றோர் அவனை வீட்டிற்குக் கூட்டிச் சென்று விட்டார்கள். ஜெகனின் மூளை கொதிப்பேறி இருந்தது. மறுநாள் ஜெகனின் தந்தை மருத்துவரிடம் வந்து பேசியபோதுதான் மனநோயாளியை உடைந்த பாத்திரத்துக்கு உவமித்துச் சொன்னார்.

ஜெகன் கொஞ்சம் கொஞ்சமாக வேத உண்மைகளோடு உலகியலையும் உணரலானான். அவன் சகோதரன் அவனுக்கு உறுதுணையாக உதவி செய்தான். "ஜெகன், எதற்கும் உணர்ச்சி வசப்படாதே. அன்பு சகலத்தையும் தாங்கும்!" இப்படியாக சமயத்துக்கேற்ற ஆலோசனைகளைக் கூறி வந்தான்.

"மிதமிஞ்சிய ஞானியாயிராதே. உன் காலத்திற்கு முன் நீ ஏன் சாக வேண்டும்?" என்ற வேத வசனம் ஜெகனை வெகுவாகச் சிந்திக்க வைத்தது.

அன்று இரவு குடும்ப வழிபாட்டில் வாசித்த ஒரு தியானப்பகுதி இப்படி இருந்தது.

"குயவன் வனைந்தான் ஒரு பாத்திரம்,

கெட்டுப் போயிற்று அந்தப் பாத்திரம்,

திரும்ப வனைந்தான் வேறு பாத்திரம்,

குயவன் செய்ததைக் கடவுள் செய்யாரோ?

உடைந்ததைக் கட்ட கடவுளால் கூடாதோ?

இந்த வாசகம் ஒவ்வொருவர் உள்ளத்தையும் தொட்டது. அன்று இரவு ஒரு மணி நேரம் முழங்காலில் நின்று அழுது ஜெபித்தனர். ஜெகன் இரவு நன்கு சாப்பிட்டுத் தூங்கி விட்டான். பெற்றோரும் சகோதரனும் அன்று இரவு நடுநிசிவரை கடவுளோடு போராடினர். 'நீர் ஜெகனை ஆசீர்வதித்தாலொழிய உம்மை விடமாட்டோம்' என்று கடவுளோடு வாதாடினர்.

நடுநிசிக்குப் பிறகு கடவுள் ஜெகனுக்குத் தரிசனமானார். 'அந்தக் குயவன் செய்தது போல நான் உனக்குச் செய்ய மாட்டேனோ?' என்று கேட்டுப் புன்முறுவலித்துச் சென்றார். மகிழ்ச்சியுடன் விழித்தெழுந்து மண்டியிட்டுக் கனவுக் காட்சியை ஜெகன் ஆவிக்குள் நிறைந்து பேசினான்.

பன்னிரெண்டாம் வகுப்பில் எனக்குக் கணக்குப்பாடம் எடுத்த ஆசிரியருக்கு என் மீது கனத்த கோபம். என் நேர்மையையும், பக்தியையும் பரிகசிப்பார். வகுப்பில் பாதிக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு "ட்யூஷன்" எடுப்பார். அந்த மாணவர்களிடம் மட்டுமே கொஞ்சிப் பேசுவார்; கேள்விகளை இரகசியமாகச் சொல்லிக் கொடுப்பார். மற்ற மாணவர்களை மதிக்கவே மாட்டார். ஒரு நாள் அவரை ஒரு பிடி பிடித்தேன்.

"ஸார், இந்த வகுப்பில் படிக்கிற அறுபது மாணவர்களுக்கும் கணக்குச் சொல்லித் தருவதற்குத்தான் அரசு உங்களுக்குச் சம்பளம் தருகிறது. உண்மையிலேயே கணக்கு வராத மாணவர்களுக்கு தனிப் பயிற்சி கொடுங்கள்; பணம் வாங்குங்கள். மற்றப்படி வலுக்கட்டாயமாக ட்யூஷன்ல கிடைக்கிற பணம் லஞ்சம் போன்றது. ட்யூஷன் படிக்காத மாணவர்களுக்கு நீங்கள் துரோகம் செய்கிறீர்கள். ஒரு நாள் நீங்கள் கணக்குக் கொடுக்க வேண்டி வரும்" என்றேன்.

என்னை கடித்துத் தின்று விடுவது போல் பார்த்தார். அன்றிலிருந்து என்னைப் பகைத்தார். நான் நன்றாகப் படித்தது அவருக்கு இன்னும் பொறாமையைக் கிளறியது.

ரிவிஷன் டெஸ்ட் வந்தது. அன்று கணக்குப் பரீட்சை. கணக்கு வாத்தியார்தான் மேற்பார்வை. என் பெஞ்சிக்குப் பக்கத்தில் கிடந்த ஒரு கிழிந்த தாளை எடுத்து, நான் 'பிட்' அடித்ததாக ஒரு கதையைக் கட்டி என்னை அவமானப்படுத்தினார். உண்மையில் 'பிட்' அடித்த பையனை நான் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. நான் விடைத்தாளை மடித்துக் கொடுத்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டில் இதுவரை விஷயத்தை யாரிடமும் சொல்லவில்லை.

அது என் உள்ளத்தில் பலத்த வடுவாகப் பதிந்தது. தலைமை ஆசிரியரிடமும் ரிப்போர்ட் செய்திருந்தார். மறுநாள் அவர் என்னை கூப்பிட்டபோது கணக்கு வாத்தியாரின் முறைகேடுகளை தலைமை ஆசிரியரிடம் முறையிடாமல் அவர்கொடுத்த பிரம்படியை வாங்கிக் கொண்டேன்.

என் மனத்தில் ஓர் ஆத்திரப் புயல் எழுந்தது. உணர்ச்சிவசப்பட்டேன். உலகையே திருத்தி விட ஒரு வெறி கொண்டேன். நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டது. பல நாட்கள் சரியாகச் சாப்பிடவில்லை. தூக்கம் வரவில்லை. அந்த வாத்தியாரை நினைக்கும் போதெல்லாம் 'டென்ஷன்' ஏற்பட்டது. நல்ல வார்த்தை, கெட்ட வார்த்தை, பைபிள் வசனம், குறள் நெறி... இப்படி எல்லாவற்றையும் குழப்பிப் பேசி ஊரையே திரட்டினேன்.

என் பெற்றோர் அதிகமாக விரக்தியடைந்து மனநோய் மருத்துவரிடம் கூட்டிச் சென்றார்கள். அவர் மூளையை உபயோகிக்காமல் முரட்டு வைத்தியம் செய்தார். ஓர் இளைஞனின் இதயத்தைக் கனிவோடு காணாமல், இரும்பால் அடித்தார். அவருக்கு உபதேசம் செய்தேன்.

அவர் ஒரு பிரசித்திபெற்ற மனநோய் மருத்துவரே! ஆனால் அவருடைய செயல்கள் என்னைக் கொதிக்கச் செய்தன. எனக்காக என் குடும்பம், 'குயவன்' தியானப் பாடலை தினமும் பாடியது.

இன்று அதிகாலை இரண்டு மணிக்கு ஓர் இறை வாக்குக் கிடைத்தது.

"அந்தக் குயவன் செய்ததுபோல நான் உனக்குச் செய்ய மாட்டேனோ?" என்று சொல்லிச் சிரித்துச் சென்றார்.

நான் சிரித்து எழுந்தேன். களித்து மகிழ்ந்தேன் என்று ஜெகன் சொல்லி முடிக்கவும் 'நன்றி, நன்றி' என்ற வார்த்தைகள் அனைவர் உதடுகளினின்றும் உதிர்ந்தன.

பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை

வருடங்கள் உருண்டன.

ஜெகன் ஒரு சிறந்த நற்செய்தித் தொண்டன் ஆனான். பிழைப்பிற்கு ஒரு சிறு கடையை நடத்தினான். பொழுது போக்கிற்கு புதுக்கவிதைகள் புனைந்தான்.

அமைதியின்றித் தவிக்கும் அநேக இளைஞர்களுக்கு ஆறுதல் கூறி, வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுத்தி வருகிறார். அநேகரின் மனநோய் தீர்க்கும் ஆன்மீக வைத்தியனாகவும் விளங்கி வருகிறார்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகி, கணவனும் மனைவியும் மகிழ்ச்சியோடு மருத்துவர் மனோகரனைச் சந்திக்கச் சென்றனர்.

இப்பொழுது மருத்துவமனை ஒளியிழந்து காணப்பட்டது. நோயாளிகளின் வருகை மிகவும் குறைந்திருந்தது. பாகப்பிரிவினையின் இழுபறியினால் அவருடைய பிள்ளைகளாலேயே அவமானப்பட்டார்.

சொத்துக்கள் வீண் என்று அங்கலாய்த்தார். பிரித்துக் கொடுப்பதில் தலையைப் பிய்த்துக் கொண்டார்.

மருத்துவர், ஜெகனைக் கட்டித் தழுவி ஆனந்த முத்தமிட்டார். "உடைந்த பாத்திரம், உருப்படியான உன்னத பாத்திரமாயிற்று" என்றான் ஜெகன்.

மருத்துவர் புரிந்து, சிரித்தார்.

சலேசியச் செய்திமலர், நவம்பர் 2002

பூ கிடைக்குமா?

உஷா மாணிக்கம் தம்பதியினருக்கு மன உளைச்சல் அதிகமானது.

'பூ கிடைக்குமோ கிடைக்காதோ?' ஏக்கப் பெருமூச்சு விட்டனர்.

மூன்று நாட்களாகப் பிடித்த மழை இன்னும் விடவேயில்லை. பூ கிடைக்காவிட்டால் என்ன செய்வது?-உஷா கலங்கினாள்.

நெல்லையிலிருந்து புறப்படும் இரவு ஒன்பது மணி பேருந்தில் ஏறிப் பயணிக்கிறார்கள். மறுநாள் காலை ஐந்து மணிக்குத்தான் பஸ் பொள்ளாச்சி போய்ச்சேரும். எனவே அங்கு இறங்கியவுடன் புதிய பூவாக வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணினார்கள்.

ஆனால் இடைவிடாத மழைத்தூரல், சிறுதுளி பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்தது. டிரைவருக்கு அடுத்த பக்கத்து சீட்டில் இருவரும் உட்கார்ந்திருந்தனர்.

வெள்ளத்தின் காரணமாகப் பழனியிலிருந்து பஸ் போக முடியாமல் கொஞ்ச நேரம் நின்றது. டிரைவரிடம் சொல்லிவிட்டு உஷா தம்பதியினர் பூமாலைக்கு அலைந்தனர்.

'இந்த மழை நேரத்தில் பூ எப்படிக் கிடைக்கும்?' - இதே பதில்தான் எங்கும் கிடைத்தது.

திருவள்ளுவர் பஸ் டிரைவருக்கு அவர்கள் மீது ஒரு கரிசனை பிறந்தது. ஆயினும் என்ன செய்ய முடியும்?...

தனியார் கம்பெனியில் பணி புரியும் தங்கள் மகன் சேகருக்கு முப்பத்து மூன்று வயதாகிறது. இன்னும் பெண் கிடைக்கவில்லை.

அரசு வேலை... என்ற மோகத்தில் மாப்பிள்ளை தேடுவதில் வெறி பிடித்துத் திரிகிறார்கள். மாப்பிள்ளைக்கா பெண் கிடைக்கவில்லை? என்று சிலர் வியந்து கேட்கிறார்கள். ஆனால் அது உண்மை.

பணிபாதுகாப்பு இல்லாத சிறு நிறுவன வேலையும், தலையில் உள்ள சிறுவழுக்கையும் சேர்ந்து சேகருக்குப் பெண் கிடைக்காமல் செய்தன.

ரோடு முழுவதும் வெள்ளம் ஓடியது. பேருந்து மெதுவாக ஓடி உடுமலைப்பேட்டை வந்து சேர்ந்தது. மாணிக்கம் தம்பதியினர் அங்கும் பூவுக்கு அலைந்தார்கள். பூ கிடைக்கவில்லை.

ஒன்பது மணிக்குள் சென்று பெண்ணுக்குப் பூ வைத்து, திருமண நாளை உறுதி செய்து வரவேண்டும் என்பது தீர்மானம். பெண் வீட்டார் காலம், குலம், சாஸ்திரம், சம்பிரதாயங்களில் அழுத்தமான நம்பிக்கை யுடையவர்கள். அபூர்வமாகக் கிடைத்த 'இந்தப் பெண்ணையாவது நழுவ விடக் கூடாதே' என்ற கவலை அதிகமாக எழுந்தது.

இப்போதே மணி பத்தாயிற்று. பொள்ளாச்சி வழியில் மழையினால் பாதிப்பு ஏற்பட்டதால் பஸ் பல்லாடம் வழியாகத் திருப்பி விடப்பட்டது. எங்கும் பூ கிடைக்கவில்லை.

மாணிக்கம் தம்பதியினர் அலைமோதினர். பூவும் கிடைக்கவில்லை; நேரமும் பிந்திவிட்டது; இடமும் புதிது.

கோவை சிறுவாணி அணைக்கு ஆபத்து; பொள்ளாச்சி ஆளியாறு நீர்மட்டம் உயர்ந்து விட்டது; வால்பாறை ரோட்டில் நிலச்சரிவு, நிறைய உயிர்ச்சேதம் பேருந்து முழுவதும் இதே பேச்சுகள்தான்.

பகல் பன்னிரெண்டு மணிக்குப் பேருந்து பொ்ள்ளளச்சி வந்து சேர்ந்தது. மாணிக்கம் தம்பதியினர் மூச்சுத் திணறினர்.

டிரைவர் கணபதி, மாணிக்கத்தைக் கூப்பிட்டு ஒரு பார்சலை கையில் கொடுத்துப் பேசினார்:

'ஐயா, இது திருநெல்வேலியில் வாங்கிய குண்டு மல்லிகைப்பூ, குளிர் நேரமாகையால் பூ வாடாமல் புதிதாக இருக்கிறது. பஸ்ஸில் தொங்கவிட்ட பழைய பூ என்று சாஸ்திரம், கீஸ்திரம் பார்த்துக் காரியத்தைக் கெடுத்து விடாதீங்க, நல்லபடியா முடித்து வாங்க...

மாணிக்கத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. 'சாமி படத்திற்கு நிறைய பூ வாங்கிப் போட்டு பஸ் ஓட்டுவதில் நம்ம டிரைவருக்கு ரொம்பப்பிரியம்' என்றார் கண்டக்டர்.

மாணிக்கம் தம்பதியினர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

டிரைவர் செய்தது சிறிய காரியம் தான். ஆனால் அது எத்தனை பெரிய மகிழ்ச்சிக்கு ஆரம்பமாயிருந்தது.

. சுலேசியச் செய்திமலர், ஏப்ரல் 2002

கலியுகப் பெருங்காவியம்

பாஞ்சாலங்குறிச்சிக்குத் தெற்கே மிக அண்மையிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவன் நான். எனது நண்பர் முத்தையா ரெட்டியார் பழங்கால ஏட்டுச் சுவடியொன்றை கையில் வைத்துப் பாடிக்கொண்டிருந்தார்.

காருலாவிய கலியுகப் பெருங்காவியத் தொடு காந்தமும்
பாரதா கதை ராமாயணமும் பாடினோர் மொழி சேரவே
சேரபாண்டியர் சோழர் மூவர் தினந் தினந் தொழுஞ் செக
வீரபாண்டியப் பிள்ளையார் வெகு மேன்மையாய் வந்து காக்குமே

செகவீரபாண்டியர் என்று வரவும் நான் ஆர்வத்தோடு அவரண்டையில் உட்கார்ந்து, கட்டபொம்மு கதையா? என்றேன் ஆர்வத்தோடு.

அவர் என்னை ஏறிட்டுப் பார்த்து, நீர் ஒரு எழுத்தாளராச்சே, மேலும் கட்டபொம்முவைப்பற்றி நிறைய எழுதி இருக்கிறீரே... அதிலெல்லாம் படிச்சவனின் ஒட்டுச் சரக்குண்டு; இது ஜீவன் நிறைந்த உண்மை ஏடு, இது உமக்கு மிகவும் பயன்படும் என்று கொண்டே பாக்கை வாயில் போட்டு கடக்கென்று கடித்தார்.

இதை எழுதியது யார், எப்படி கிடைத்தது? என்று கேட்டுத் துடி துடித்தேன். அவர் உடங்குடி வெற்றிலையை உதப்பிக்கெண்டே சொன்னார்.

பாஞ்சைப்பதிமீது மிக விசுவாசம் காட்டிய வீர வயோதிபர் வீரண்ண மணியாரர். தொண்ணூற்றாறு வயதுள்ள தொண்டுக் கிழவரேயாயினும் கண்ணுறங்காது கட்டபொம்மு-ஊமைத்துரையைக் காவல் புரிந்து வந்தார். அவர்தான் அரண்மனையின் அந்தரங்கக் காவல்காரர்.

புலிக்குப் பிறந்தது பூனையாய்விடுமா? அவர் மகன் நமச்சிவாயம் தொட்டில் பிராயத்திலே துடியும் துடுக்குமாய் இருந்தான். சிறு பையனாய் இருக்கும் போதே அரண்மனை ஆடுமாடுகளை மேய்க்கும் பொறுப்பேற்றான். ஊமைத்துரையின் அஞ்சாமையையும் குழந்தைப் பிராய முதலே கூர்ந்து கவனித்துக் குயுக்தியாகப் பேசக் கற்றுக்கொண்டான்.

நூறு வயதாகியும் சுரிப்பு விழாத வீரண்ணமணியாரரின் முகம் கயத்தாறு கட்டைப் புளியில் கட்டபொம்முவைத் தூக்கியபோது (1799) கருத்துச் சுருங்கியது. குளிக்குள் கிடந்து கண்கள் ஒளிவீசின.

ஊமைத்துரை அவருக்கு மீண்டும் உயிர்கொடுத்தார்.

ஒரு துரும்பை எடுத்து உள்ளங்கையில் வைத்து அலட்சியமாக ஊதிக் காட்டி 'இப்படியே வெள்ளைப்பரங்கிகளையும் ஊதிடுவேன்' என்று சைகை மூலம் ஊமைத்துரை தோள் தட்டி சூள் உரைக்கும் போது வீரண்ணமணியாரர் தன் திருக்கு மீசையை முறுக்கி விடுவார். கையிலுள்ள நெற்றி மட்டக்கம்பை வைத்து சிலம்ப முறையில் ஒரு துள்ளு துள்ளுவார்.

குச்சி நாய்கள் போன்று எச்செலும்புகளுக்காக கும்பினியரை பச்சைக் கொடி காட்டி வரவேற்கும் நச்சுக்கூட்டங்கள் நிறைந்திருந்தன.

ஊமைத்துரையையும், உடன் வீரர்களையும் பிடித்து பாளையங் கோட்டை சிறையில் வைத்தனர். தன்மானத் தமிழ் மக்கள் கட்டிய கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கினர்.

வெள்ளையரின் மண் ஆசையில் வெறுப்புக்கொண்ட தென்பாண்டி மக்கள் வேல் பாய்ந்த வேழங்கள் போல் வெருண்டெழுந்து வேல் கம்புகளோடு சென்று சிறைக் காவலைத் தகர்த்து நொறுக்கி தென்னாட்டுச் சிங்கங்களை மீட்டு வந்தனர். (2.2.1801) வியாரபாரம் செய்ய வந்த வெள்ளையனுக்கு அடிமையாவதை விரும்பாத பாஞ்சைப் பகுதி மக்கள் அதி அற்புதமாக ஒரு சில நாட்களில் ராட்சஸக் கோட்டையை மீண்டும் உருவாக்கினர், கோட்டை உயர்ந்து விட்ட செய்திகேட்டு வெள்ளைப் பட்டாளம் நடுங்கியது.

அன்றொரு நாள் கடும்போர். சுதந்திர தாகத்தால் துடிக்கும் தோள்களுக்கும், நாடு பிடிக்கும் சுரண்டல் வெறியால் துப்பாக்கி ஏந்திப் போர்புரியும் இரும்புக் கரங்களுக்கும் போர்நிகழ்ந்தது. பீரங்கிக் குழாய்களுக்கு முன்னால் பாஞ்சை மக்கள் வெஞ்சமர் புரிந்தனர்.

பீரங்கிகளுக்கு முன்னால் புஜபல பராக்கிரமம் எத்தனை நாளைக்கு? கோட்டைக்குள் பலர் குற்றுயிராய்க் கிடந்தனர். வெளியில் பிணமலைகள் குவிந்தன. ஊமைத்துரையும் சாய்ந்து விட்டார். என்ற செய்தி சூரைத் தீயாகப் பரவியது. காட்டிக்கொடுத்த எட்டையபுரத்தான் களிப்பு மிகுதியால் பேய்ச்சிரிப்பு சிரித்தான்.

அப்பொழுது, ஊமைத் துரையின் தர்ம பத்தினி வெள்ளையம்மாள் நிறை கர்ப்பிணி. வீரண்ணமணியர் மிகக் கலவரமுற்றார். புதியதொரு கவலை அவரை பலமாகப் பிடித்தது. பாஞ்சை மன்னர்களின் பரம்பரையே இல்லாமல் போய்விடுமோ? என்றெண்ணும் போது அவர் உள்ளத்தில் தீக்கனல்களை அள்ளிக் கொட்டுவது போன்றிருந்தது.

ஆனால் அவருக்கு தன் மகன் நமச்சிவாயத்தைப்பற்றி பரம திருப்தி. அவன் ஆடு மேய்க்கும் போதே பூனைக் கண் வெள்ளையரையும், யானைப் பலமுள்ள ஊமைத்துரையையும் பற்றி சுவைப்படப் பேசுவான். கட்டபொம்மு சண்டையைப்பற்றி அவன் சில வேளையில் சுயம்பாடுவதைக் கேட்ட பலர் வீரண்ணரிடம் வந்து, 'உம்ம மகன் சீக்கிரம் புலவர் ஆகிவிடுவான். பாஞ்சைச் சண்டையைப்பற்றி புதியதொரு பாரதமே' பாடிவிடுவான் போலும்! என்பர்.

அப்பொழுது வீரண்ணமணியாரரின் வாயெல்லாம் பல்லாகும்.

தன் பெயர் சொல்ல தன் மகன் வந்து விடுவான் என்பதில் அவருக்கு சந்தேகமில்லை. ஆனால், பாஞ்சைச் சிங்கங்களின் பரம்பரையல்லாவா பிரதானம்? ஊமைத்துரையின் நேரடியான வாரிசை வேரறுக்க விட்டுவிடக் கூடாதே! பாஞ்சைக்கொடியை வெள்ளைப் பரங்கிகள் வந்து மேய்ந்துவிடக் கூடாதே, இதுதான் வீரண்ணரின் ஒரே ஏக்கம்.

அவசரமாக வீரண்ணரைக் கூப்பிட்டு வெள்ளையம்மாளிடமிருந்து ஆள் வந்தது. தொண்டு கிழவர் துள்ளிப்பாய்ந்து ஓடினார்.

வெள்ளையம்மாள் தன்தோழி சக்கம்மாளை கையில் பிடித்துக்கொண்டு இரகசியமாகத் தப்பிவிடத்தயாராய் நின்றாள். வீரண்ணரை உடனடியாகப் புறப்பட்டு துணைக்கு வரும்படி வேண்டினாள்.

கரும்பு தின்னக்கூலியா வேண்டும். வாழைத்தோட்டங்கள் நிறைந்த கோட்டையின் தெற்குவாசல் பக்கமாய் மறைந்தனர். பாஞ்சாலங்குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள இப்போது ஆவரங்காடு என்று வழங்கும் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் அந்தக் கிராமத்தில் தங்கினர். ஊமைத்துரையின் வீரபத்தினியை தங்கள் குலதெய்வமாகக் கருதி மறைத்து பாதுகாத்தனர்.

ஊமைத்துரையும் உயிர் தப்பிவிட்டார் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. இருவரும் இறக்கவில்லை என்ற உண்மை இங்கிலீஷ்காரர்களை இஞ்சி தின்ற குரங்கு போலாக்கியது.

சுற்றிச் சூழ்ந்துள்ள கிராமங்களுக்கு பயங்கர ஆபத்து நேரவிருந்தது. கோட்டைக்குள் நின்ற பசுமாட்டைப் பிடித்துவரும்படி ஒரு ஆதிதிராவிடப் பெண்ணிடம் கூறிவிட்டு மூவரும் அங்கிருந்து பத்துமைல் தூரமுள்ள பேரூரணி என்ற கிராமத்திற்குச் சென்று விட்டனர்.

ஒரு மாதம் கழித்து இரட்டைக் குழந்தை பிறந்தது. இரண்டும் ஆண் குழந்தைகளே!

கும்பினியாரின் கொடுமுடியெல்லாம் குறையும் தருவாயில் கோட்டைக்குள் நின்ற பசுமாட்டை பிடித்துக்கொண்டு அந்தப்பெண் பேரூரணிக்குச் சென்றாள். பால் வேண்டிய நேரத்தில் கொண்டு வராமல் இப்பொழுது வந்திருப்பதைக் கண்டு வெள்ளையம்மாளுக்கு அந்த அரிஜன பெண்மீது ஒரே ஆத்திரம் எழுந்தது. ஆத்திரத்தில் என்னவெல்லாமோ பேசிவிட்டாள்.

ஊரை மூட முடியுமா? குசு குசு பேச்சுக்கள் குமைந்தன. கும்பினியாரின் காதிற்கும் எட்டியது. பாஞ்சாலங்குறிச்சி பரம்பரையா? என்ற வெஞ்சினத்தில் ஐவரையும் பிடித்து திருச்சி சிறைக்குக் கொண்டு போயினர். இரு சிங்கங்களையும் 'கம்பெனிச் செல்வம்' என்றே அழைத்தனர்.

பருந்து பறக்காத பாஞ்சாலையில் பரங்கி மேஜர் மக்காலேவுக்கு விருந்து பரிமாறினர். கோட்டை தரைமட்டமாக்கப் பட்டது.

வானம் பொழியுது, பூமி விளையுது
வெள்ளையனுக்கேதடா தீர்வை?

என்று கேட்ட மானாபிமான மக்கள் ஈனமுறையில் அழித்தெடுக்கப் பட்டனர். காகம் பறக்காத கட்டபொம்மு சீமை கட்டமண் ஆகி வேட்டைக் காடானது.

நமச்சிவாய்ப் புலவர் தகப்பனைத் தேடித்திரிந்தார். அப்பாவி போன்று அனாதையாய்த் திரிந்ததால் ஆங்கில ஆசாமிகளிடம் அகப்படவில்லை.

நமச்சிவாயப்புலவர் பிச்சைவாங்கிச் சாப்பிட வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது. பாஞ்சைப் போரைப்பற்றி யாராவது கேட்டால் தண்ணீர் குடியாமல் கவிமழை பொழிவார். கஞ்சிக்கும், வற்றலுக்கும், வெங்காயத்திற்கும், வேர்க்கடலைக்கும் பாஞ்சைப் புகழ் பாடினார்.

பாஞ்சைக்கு மேற்கே ஐந்துமைல் தூரத்திலுள்ள சண்முகபுரம் என்ற ஊரில் சென்னப்ப ரெட்டியார் என்பவர் சிறந்த தோசாபிமானி. அடிமை வாழ்வை அறவே வெறுப்பவர். பாஞ்சைப் போரைப்பற்றிக் கேட்பதே அவருக்கு வெகு வாஞ்சையாயிருந்தது. நமச்சிவாயப் புலவருக்கு தினம் ஒரு படி கம்பம் புல் தருவதாகக் கூறி ஏடு எழுதும்படி சொன்னார். பச்சை மிளகாயைக் கடித்து கம்பங்கஞ்சியைக் குடித்துக் கொண்டே பனை ஓலையில் கவிமழை பொழிந்தார். மூவாயிரம் பாடல்களில் கலியுகப்பெருங்காவியம் பாடினார். அதில் முதல் பாட்டுதான் ஆரம்பத்தில் பாடியது.

திரேதா யுகத்தில் கம்பர் ராமாயணம் பாடினார்.. துவாபர யுகத்தில் வேதவியாசர் பாரதம் பாடினார். கிரேதா யுகத்தில் கச்சியப்பர் காந்தபுராணம்

பாடினார். கலியுகத்தில் நமச்சிவாயப்புலவர் கலியுகப் பெருங்காவியம் பாடி இருக்கிறார் இதுதான் பாடற்பொருள்.

இரண்டாம் பாடலில் அவருடைய தாழ்மையை பாருங்கள். சங்க காலப்புலவர்களைப் புலியாகவும் தம்மை எலியாகவும் கூறும் அவை அடக்கப்பாடல் எத்தனை அருமையானது. என்று சொல்லி கொண்டே பாடலைப் பாடலானார்.

கலியுகப் பெருங்காவிய மேன்மையை
வலிய செந்தமிழ் வாணர் முன்னோதினேன்
புலி புடைத்து முழங்கப் பொறாமையால்
எலிபுடைத்து முழங்கிய தென்னவே

'இந்த ஏடும் சண்முகபுரத்தில் ஒரு பழங்கால பானைக்குள் பத்திரமாய் இருந்தது. இதனைப் பெறுவதற்கு உங்கள் பிரயாசை அதிகம் இது உங்களிடம் இருக்க வேண்டிய ஏடு' என்று கூறும் போது புகையிலை கலந்த வெற்றிலை துப்பிணியை இருவிரல் இடுக்கு வழியாய் நாஸீகமாகத் துப்பினார்.

இந்நிகழ்வு என் நெஞ்சை அசைத்தது. பாஞ்சை மண்ணுக்கடியில் இன்னும் மறைந்து கிடக்கும் கூர்மையான ஆயுதங்கள் போன்று, ஜீவன் நிறைந்த எத்தனை எத்தனை இலக்கியப் புதையல்கள் மறைந்து கிடைக்கின்றனவோ? தமிழருமையை தரணியிலுள்ளோரைவிட நீரும் நெருப்பும் தானே நன்கறியும்?

நெல்லைக் கம்யூனிஸ்ட் சதி வழக்கில் என்னையும் பின்னிப்பிணைத்து இறையியலிருந்த போது 1950ல் நான் பிறந்த வீடு போலீசாரால் சோதனைக்குட்பட்டது.

தூத்துக்குடித் தோழர்கள் ஐசக், முருகானந்தம் ஆகியோரின் முன் எச்சரிக்கை காரணமாக என் தந்தை மாட்டுத் தொழுவுக்குள் ஒளித்து வைத்திருந்தார்கள்.

எந்தையைக் கொண்டு ஏட்டிலிருந்து 300 பாடல்களை நோட்டில் எடுத்தெழுதினேன். தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக்கழகம் தோன்றிய பின்பு அங்கே அனுப்பினேன். நமச்சிவாயப்புலவர் நினைவாக 200 ஆண்டுகளுக்கு பிறகாவது கலியுகப் பெருங்காவியம் மறுபிறவி எடுக்குமா? தமிழுக்குப் புது வரவு கிடைக்குமா?

குறிப்பு : ஆகஸ்ட் 15, 1957 ஜனசக்தி சுதந்திரப்போர் மலரிலிருந்து

எச்சிலை முன்

அது ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி. உள்ளே இடமில்லை, 'ஏய், உன்னைத் தேடினேன் என்ற என் நண்பன் சாம் என்னைக் கட்டிப்படித்து ஒரு உலுக்கு உலுக்கினான். 'எனக்கும் போரடிச்சிப் போச்சிடா', என்று கூறி அவனது பிடியில் மகிழ்ந்தேன்.

மணப்பெண் டாக்டர், மாப்பிள்ளை என்ஜினியர் பெரிய இடத்துக் கல்யாணம். மாபெரும் நகராட்சிக் கல்யாண மண்டபம். கூட்டம் நிரம்பி வழிந்தது.

என் நண்பன் எப்படியோ இரு நாற்காலிகளைப் பிடித்துக் கொண்டான். இருவரும் உட்கார்ந்தோம். ஒரே அரட்டை, வீணான விமர்சனங்கள். வேண்டாத உரையாடல்கள். என்ன செய்வது? மாட்டிக் கொண்டேன்.

பக்கத்திலிருந்த ஒருவரிடம், 'மாப்பிள்ளை பையன் அரசாங்க என்ஜினியரா, அல்லது...' ? என்று கேட்டான் சாம். கேள்வியை முடிக்குமுன் அவர் மாப்பிள்ளையை கண்டதார்? பெண்ணைக் கண்டதார்? கல்யாண கார்ட் வந்தது. நான் கவர் கொண்டு வந்தேன் சாப்பிட வேண்டியது. கவரை கொடுக்க வேண்டியது அவ்வளவுதான் என்றார் விரக்தியோடு.

வரவேற்பு நிகழ்ச்சிகளை இருவரும் இணைந்தே இரசிக்க ஆயத்தமானோம். அதற்குள் ஒரு கூட்டம் சாப்பாட்டு அறையை முற்றுகையிட்டது. வேறுவழியில்லாமல் சாப்பட்டுப் பந்தியும் ஆரம்பமானது.

மண மேடையில் ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிகள் யாவும் சிதைந்து சிதறின, வாய் ருசிக்கு முன் கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் வாய்பொத்தி நின்றன.

நண்பனின் அரிப்பினால் நாங்களும் 'பந்திக்கு முந்தப் படை எடுத்தோம். முதற்பந்தி முடிந்ததும் முடியாததுமாயிருந்தது. கூட்டு குழம்புகளின் நறுமணம் மூக்கை நெருடியது.

கூட்டத்தோடு கூட்டமாக இருவரும் ஒன்றாகச் சாப்பாட்டு அறையினுள் நுழைந்து கொண்டிருந்தோம். திடீரென்று நண்பன் சாமைக் காணவில்லை. அங்கும் இங்குமாய்ப் பார்த்தேன். ஆள் அகப்படவில்லை.

ஜேக்கி என்று சத்தம் கேட்டுத் திரும்பினேன். சாம் தான் எனக்குத் 'திக்' என்றது 'எனக்கொரு இடம் கிடைத்து விட்டது' என்று கூறி இரு கைகளையும் ஆனந்தமாக ஆட்டினான். யாரோ சாப்பிட்டு எழும்பிய எச்சிலை முன் உட்கார்ந்திருந்தான்.

ஆத்தோடு போனாலும் சோத்துக்குள் இருக்கான் சொக்கப்பன் என்ற பழமொழி நினைவிற்கு வந்தது.

நண்பனை எடைபோடலானேன்.

என் முன்னால் ஓர் அம்மாவும், மகளும் நின்று கொண்டிருந்தனர். அந்தம்மா தன் மகளைள் பார்த்து, தாயும் பிள்ளையுமனாலும் வாயும் வயிறும் வேறே 'உனக்கு ஓர் இடத்தை ஓடிப்பிடிச்சிக்கோ' என்றாள்.

ஆளுக்கொரு பக்கம் பறந்து ஓடினார்கள்

மகளுக்கு ஒரு இடம் கிடைத்து விட்டது.

அதாவது அவள் ஓர் எச்சிலையின் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

பாயாசம், சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு நபரின் பின்னால் நின்று நாற்காலியைப் பலமாகப் பிடித்து கொண்டாள்.

'நான் தயிர் சாதம் சாப்பிட வேண்டாமா? பன்றிக் கூட்டங்கள்' என்று முணு முணுத்தார் பாயாச ஆசாமி.

நாற்காலி ஆடிய ஆட்டத்தில் அவர் அரைகுறையாக விழுங்கி அவசர அவசரமாக எழுந்தார். இலையில் நிறைய மிச்சங்கள் அளைந்து கிடந்தன. இன்னொரு பெண் அடுத்த பந்திக்காக எச்சிலை முன் தவம் இருந்தாள். அவளுக்கு ஓர் இடம் கிடைத்து விட்ட இனிப்பில் நாக்கில் நீர் சொட்டியது.

மெதுவாக நண்பனை ஏறிட்டுப் பார்த்தேன். இலையிலுள்ள ஒரு எலும்பை எடுத்துக் கடித்து மூளையை உறிஞ்சிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் ஓர் உயர் அதிகாரி பரிதாபமாக இடம் பிடிக்க நின்று கொண்டிருந்தார். வீட்டில் சாப்பிட்டு சலித்துப் போன அநேகருக்குக் கல்யாண விருந்து ஒரு 'சேஞ்ச்' மாதிரி.

கல்யாண வீடுகளின் அன்பு, அன்னியோன்யம், பரிவு, பாசம் எல்லாம் காற்றோடு போய், கவர் கொடுப்பதும், வயிர் நிரம்புவதுமாக அன்னியோன்ய ஐக்கியம் அந்நியமாகப் போயிற்று.

மணமக்களின் பெற்றோர்களைப் பார்த்து பணக்கவர்களைத் திணித்தனர். ஆனால் அவர்களோ சாப்பாடு தட்டி விடுமோ என்ற அச்சத்தில் ஜுரம் தலைக்கேறி நின்றனர்.

தாம்பூலம், சந்தனம் போன்ற மங்கலப் பொருட்கள் ஏதும் அங்கில்லை மட்டன் மிச்சங்களும், எலும்புத் துண்டுகளுமாகச் சிதறிக் கிடந்தன.

'ஜேக்கி தெக்கு முனையில் ஒரு இடம் இருக்கு, அங்கே ஓடு' என்று சாம் கூச்சலிட்டான்.

'நீ உணவுப் பிரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை' என்ற திருமறைக் கூற்றை நன்கு ஜீரணித்தவனாய் வெளியே நடந்தேன்.

மே,1994 நிருபம்

இனிய கிண்டல்

வேலு ஒரு முரட்டு மாணவன், பெண்பிள்ளைகளைக் கேலி பண்ணுவதாக அவன் மீது பல புகார்கள் வந்தன.

தலைமை ஆசிரியர் மிகவும் கண்டிப்பான பேர்வழி. பிரம்படி ஒன்றுதான் அவரின் சர்வரோக நிவாரணி.

மாணவர்களின் பொது வழிபாட்டின் போது வேலுவை நிறுத்தி பிரம்படி கொடுத்தார். ஒவ்வொரு அடியாக ஆரம்பித்து ஒரு டஜன் அடிவரை வளர்ந்தது. பயல் திருந்துவதாயில்லை.

'எத்தனை அடி கொடுத்தாலும் அவனுக்கு உரைக்காது' என்றார் கணக்காசிரியர்.

'இன்னும் நூறு அடிக்கு அட்வான்ஸ் வாங்குவான்' என்றார் ஆங்கிலாசிரியர்.

'பிரம்படியை பிச்சிப்பூ மாதிரி தொடச்சி எறிவான்' என்றார் தமிழாசிரியர்.

வேலுவுக்கு மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக்கொடுக்கும் ஆசிரியர்கள் அங்கில்லை.

பெண்பிள்ளைகள் அவனை ஒரு வீரனாகக் கருதினர். ஏனெனில் நன்கு படித்தும் விடுவான்.

வேலு மீது மீண்டும் மீண்டும் புகார்கள் வந்தன. தலைமை ஆசிரியர் மிகவும் துக்கங்கொண்டார். தண்டனையை மாற்றியமைக்க விரும்பினார்.

ஆணும் பெண்ணுமாகக் கூடி இருந்த அஸெம்ப்ளியின் முன்பாக வேலுவை நிறுத்தி, தலைமை ஆசிரியர் பிரம்பை ஆட்டியவாறு சிம்மகுரலில் கேட்டார்:

'நான் இனி தப்பு செய்ய மாட்டேன்' என்று நூறு தடவை எழுதிக் காட்டுகிறாயா? அல்லது இருபது பிரம்படி வாங்கிக் கொள்கிறாயா?'

வேலு, மிகவும் அலட்சியமாக, அடிகளை வாங்கிக் கொள்கிறேன் ஸார்' என்று சொல்லி வலக்கையை விரைப்பாக நீட்டினான்.

தலைமை ஆசிரியரின் தலை சுற்றியது. மாணவியர் வரிசையிலிருந்து பெருமூச்சும், குறுஞ்சிரிப்பும் எழுந்தன. சிலர் அழுதனர். வேலு பிரம்படிகளை வாங்கி 'தூ' வெனத் துடைத்தான்.

பரீட்சைகள் பருவங்களாக வந்து பறந்தன. பதினெட்டு வயதுக் கட்டிளங்காளையாகக் கல்லூரியில் கால் வைத்தான் வேலு. கண்காட்சிகளில் திரியும் பெண் லோலன் ஆனான்.

ஒருநாள் டவுண் பஸ்ஸில் போனான். அவன் பக்கத்தில் மட்டும் ஒரு சீட் காலியாக இருந்தது. அடுத்து ஏறிய ஒரு நடு வயதுப் பெண், 'கூடப் பிறந்த தம்பி மாதிரி' என்று சொல்லி அவன் அருகில் அமர்ந்தாள். 'அக்கா நல்ல அழகு' என்று ரசித்த வேலு மனதிற்குள் மகிழ்ந்தான்.

மெதுவாகத் தன் குறும்பு வேலையை ஆரம்பித்தான். அந்த அம்மாவிற்கு நாற்பது வயதிற்கு மேலிருக்கும். ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. 'கன்னத்தில் ஒரு இழுப்பு இழுப்போமா? அல்லது பஸ்ஸை நிறுத்தி அனைவர் முன்பாகக் கேவலப்படுத்துவோமா?' என்று ஒரு கணம் சிந்தித்தாள்.

மறுநொடியில் அவனைத் திருத்த விரும்பினாள். மெல்ல பேசி நல்லவனாக்க நினைத்தாள்.

தாய்மையுள்ளம் கொண்ட அப்பெண் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் அவனைப் பார்த்து மெதுவாகச் சொன்னாள்.

'தம்பி, எங்கம்மா என்னைவிட ரொம்ப அழகா இருப்பாங்க, அவங்களை இங்கே வரச்சொல்லட்டுமா?' என்றாள் சிரித்தவாறு.

வேலு வெட்கிப்போனான், மனம் தடுமாறினான், நல்லவனாக மாறினான். இடத்தைக் காலி செய்தான். இதயத்திற்குள் கண்ணீர் வடித்தான்.

தண்டனைக்குத் திருந்தாத வேலு, ஒரு பெண்ணின் இனிய கிண்டலுக்கு அடிபணிந்தான்.

1995



பாடம் படித்தார்

தங்கப்பல் டேனியலுக்குப் பணம் சேர்ந்தவுடனே குணம் கெட ஆரம்பித்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர் கொழும்பு சென்று வந்த போது மேல் தாடையிலுள்ள முன் பல்லுக்குத் தங்க முலாம் பூசி இருந்தார். அப்போதெல்லாம் அவர் பல்லுக்குக் கடும் கிராக்கி. தங்கப்பல் டேனியல் நாடார் என்றால் நல்ல பேர் இருந்தது. பெரிய இடத்துப் பெண்ணும் கிடைத்தது.

கொழும்பை முடித்து தமிழ்நாடு வந்த பிறகு ஒரு லாரி வாங்கி விட்டார். அது உப்பு முதல் குப்பை வரை அனைத்தையும் அள்ளிச் சுமந்தது. பணம் சேர்ந்தது. ஒரு வேன் வாங்கி வாடகைக்கு அடித்தார்.

அரசாங்கப் பொதுத்தேர்தலில் நிற்கிற அளவுக்கு கோடி சேர்த்து விடத் துடித்தார். இப்பொழுதுள்ள இலட்சங்களை வைத்துக் கொண்டு தேர்தலை சந்திக்க முடியுமா? என்று தமக்குத் தாமே அலட்டிக் கொண்டார்.

அன்று ஆலய ஆராதனைக்குச் சென்றபோது, அவர் காதில் விழுந்த செய்தி அவருக்கு இனிப்பாக இருந்தது.

"திருச்சபைத் தேர்தல் வருகிறது".

தேர்தல் என்ற வார்த்தை அவர் வாயில் தேன் சொட்டுவது போலிருந்தது. அரைகுறைப்படிப்பான அவர், ரிட்டயர்ட் வாத்தியார் பிரின்சை பைக்குள் போட்டுக் கொண்டார். வாத்தியார் கொஞ்சம் விவரமான ஆள்.

ஊரில் இரு கட்சிகள் உருவாயின. ஒன்று தற்போதைய ஆளுங்கட்சி மற்றும் ஒன்று எதிர்க்கட்சி. தங்கப்பல் டேனியல் எதிர்கட்சித்தலைவர்.

'வே, காலங்கெடக்கிற கிடையில நீர் வாயைத்திறந்து தூங்கினா எவனும் தங்கப்பல்லை தட்டிக்கொண்டு போயிடுவான், வாயை மூடும், பணத்தை வெளியே எடும்' என்று வாத்தியார் நன்கு கிண்டலாகப் பேசுவார்.

'ஞாயிறு நாளில் ஒரு மணி நேரத்தை கோயிலில் செலவிட்டு காணிக்கை போட்டு வந்தால் அதுவே பெரும் புண்ணியம்' என்றுதான்

பெரும்பாலான பொது ஜனம் எண்ணியது. அதனால் அவர்கள் தேர்தல் பற்றி அக்கறையே கொள்ளவில்லை.

தங்கப்பல் கட்சி தேர்தலில் வென்றது, அவர் முக்கிய புள்ளி ஆனார். தென்இந்தியத்திருச்சபையின் சினாட் உறுப்பினர் தேர்தலிலும் வென்றார்.

திருச்சபை நிர்வாகத்தைத் தலைகுப்புற மாற்றி சீர்திருத்தம் செய்வேன் என்று சொல்லித்தான் ஓட்டு வேட்டையாடி இருந்தார்.

குரு சேகரத்தின் புதுக்கமிற்றி கூடியது. முன்பு காப்பியும் வடையும் என்றால் இப்பொழுது டீயும், பஜ்ஜியுமாக மாற்றினார்கள். காணிக்கை எண்ணுகிறவர்களுக்கு முன்பு ஓதுவார்க்கடை மெதுவடையும், நர்சூஸ் காப்பியும் என்றிருந்ததை - ஆபிரகாம் கடை ஆமைவடையும் போன்விட்டாவும் என்று அப்புர குப்புற மாற்றினர்.

காப்பியில் கிளர்ச்சியும், வடையில் புரட்சியும் செய்தார்கள்.

மனிதனை மனிதனாக மதிக்கும் உன்னத சமுதாயத்திற்கு மக்களை அழைத்துச் செல்லும் புரட்சிகரமான சபைத்திட்டங்கள், சமுதாய மாற்றங்கள் பற்றி அவர்கள் சிறிதும் சிந்திக்கவேயில்லை. வன்முறைகள், பெருகி வரும் இந்நாட்களில் ஆதித்திருச்சபை போன்று ஒருவருக்கும் ஒன்றும் குறைவில்லாத நிறைவான மனித மாண்பை வளர்ப்பது குறித்து அவர்கள் நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. இட்லிக்குப் பதில் தோசையும், சட்னிக்குப்பதில் சாம்பாருமாகப் புழுதிப்போர் செய்தார்கள்.

பொதுஜனம் வேடிக்கை பார்த்தது.

பக்தர்களின் பரவசத்திற்கு 'சூடு' பிடித்தது.

ஆலய ஆராதனயில் வேதவசனங்களை பழைய ஏற்பாட்டிலிருந்தும் - புதிய ஏற்பாட்டிலிருந்தும் இரு பாடங்களாக வாசிப்பார்கள். வழக்கமாக முதல் பாடம் வாசிக்கும் நபர் தேர்தலில் தோற்றுப்போனார். அவருக்குப் பதில் தங்கப்பல்லார் வாசிப்பதென தீர்மானமாயிற்று.

அன்று ஞாயிற்றுக்கிழமை

'எங்க வீட்டையா கோயிலில் பாடம் வாசிக்கப்போறாங்க என்று மிஸஸ் தங்கப்பல் தெருமுழுதும் தம்பட்டம் அடித்திருந்தது. அவர் பிள்ளைகள் மைனர் பட்டாளங்களிடம் பறைசாற்றி இருந்தார்கள்.

ஆலையவாசிகள் புதுக்குரலைக் கேட்க ஆர்வத்தோடிருந்தார்கள்.

மஞ்சள் நிறப்பட்டு வேட்டி, சந்தனக்கலர் சில்க்சேட் மினுங்கும் மைனர்செயின் பளபளக்கும் நிக்கல் பெல்ட் இத்யாதி... பழைய சிலோன் சிங்கள பாணியில் கோயிலுக்குப் புறப்பட்டார் தங்கப்பல் டேவிட்.

'வேதாகமப்பகுதியை முன்னதாகப் பார்த்துக்குங்க, சத்தமாய் தெளிவாய் வாசியுங்க' என்று அறிவுரை கூறின மனைவியிடம், பைபிளில் பாடம் வாசிப்பதென்ன பெரிய மலையா? அதைத்தான் இரண்டாம் வகுப்புப்பயல் படிப்பானே என்று மமதையோடு சொல்லி வீராப்போடு நடந்தார்.

அவருக்குக் குறிக்கப்பட்ட வேதபாகம்:

இரண்டு நாளாகமம் 17ஆம் அதிகாரம் என்பதாகும்.

வேதவாசிப்புப்பீடத்தின் முன் செல்லுமுன் அவரின் வேட்டி வேர்வையால் நனைந்தது. நாளாகம புத்தகத்தைத் தேடியதில் சட்டை உடலோடு ஒட்டிக்கொண்டது.

விவிலிய நூல் அறுபத்தாறு புத்தகங்களைக் கொண்ட ஒரு நூல் நிலையம். அவைகளில் ஒன்றான நாளாகமம் அவருக்கு வேதனையான ஆகமம் ஆனது.

தாள் தாளாகத் துளாவினார். மக்களுக்கு அலுப்புத் தட்டியது. பைபிள் பகுதியை சொன்ன மாத்திரத்தில் எடுக்கும் வேதாகம சமர்த்தர்கள் பலர் அங்கிருந்தார்கள்.

எப்படியோ படிக்க வேண்டிய பகுதியைத் தேடி எடுத்துக்கொண்டார்.

பதினொரு நாளாகமம் பதினேழு அதிகாரம் என்றார்.

கோயில் சிரிப்பொலியால் சிந்தியது

இரண்டு (II) என்ற ரோமன் இலக்கத்தை புரியாதவராகப் பதினொன்று என்றார். இரண்டுக்கு மேல் நாளாகமப் புத்தகம் கிடையாது என்ற உண்மையும் அவருக்குத்தெரியாது. பதினேழாம் அதிகாரம் என்று சொல்வதற்குப் பதில் பைபிளில் எழுதி இருக்கிறபடி 17 அதிகாரம் என்றார்.

தினப்பத்திரிகைகளான கசங்கிய காலைத்தாள், மாலைத்தாள்களின் தலைப்பை மட்டும் படித்து தரை மட்ட அரசியல் பேசும் அனுபவம்தான் அவருக்கிருந்தது.

தட்டுத்தடுமாறி மூன்றாம் வசனத்திற்கு வரும் போது 'கர்த்தர் யோசேப்போடே இருந்தார்' என்று படித்தார். மீண்டும் கேலிச்சிரிப்பொலி கோயில் கோபுரத்தை முட்டியது.

கர்த்தர் யோசேப்போடே இருந்தார் என்ற ஆதியாகம வசனம்தான் அவர்கேள்விப்பட்ட செய்தி. ஆனால் இங்கே வரும், 'கர்த்தர் யோசபாத்தோடிருந்தார்' என்ற வசனத்தை அவர் பிறந்த நாள் தொட்டு கேள்விப்பட்டதே இல்லை. எனவேதான் யோசபாத்தை தவறுதலாக யோசேப்பு என்று படித்து விட்டார்.

குருவானவர் மேசையில் ஓங்கி அடித்து சபையை அமைதிப்படுத்தினார்.

தங்கப்பல்லார் எட்டாம் வசனத்திற்கு வரும்போது அவர் கண்கள் நீர் நிறைந்து எழுத்துக்களை மறைத்தன. எழுத்துக் கூட்டிப் படிக்கப் படிக்க அது கிரந்த எழுத்துக்கள் போன்றிருந்தன; திணறினார், திக்குமுக்காடினார்.

பரிகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்த மக்களில் சிலருக்கு அவர் மீது இரக்கம் பிறந்தது.

ஓர் இளம்பெண் அந்த எட்டாம் வசனத்தை கணீரென்ற குரலில்,

"இவர்களோடே கூடச் செமாயா, நெதனியா, செபதியா, ஆசகேல், செமிரமோத், யோனத்தான், அதோனியா, தொபியா, தோபத்தோனியா என்னும் லேவியரையும், இவர்களோடே கூட ஆசிரியரான எலிஷமாவையும், யோராமையும் அனுப்பினான்" என்று எவ்வித நிரடலுமின்றி அழகாக வாசித்து முடித்தாள்.

செறுக்குடன் சென்றவர் வெட்கத்துடன் தலை தாழ்த்தி வந்தார். அவருக்கு இது முதல் பாடமாக இருந்தது.

பெப்ருவரி 1994 'விடிவெள்ளி'



என்ன மா தவமோ?

இலங்கை யாழ்ப்பாணம், தமிழுக்குச் செய்த சேவை மிகப்பெரிது. யாழ் மக்களிடையே இப்பொழுதும் செந்தமிழ் பேச்சுமொழியாய் விளங்குவதைக் காணலாம். யாழ்ப்பாணத்திலிருந்து பிறந்ததுதான் 'இயேசு நேசிக்கிறார்' என்ற இனிய பாடல். மிகப்பிரபலமான கிறிஸ்தவக்கீதம்...

யாழ் மக்கள் வீரத்திலும், தீரத்திலும் சிறந்து விளங்குவதை சமீப காலங்களில் கண்கூடாகக் காண்கிறோம். உடல் வீரத்தில் மட்டுமல்ல, தமிழ் இசை வீச்சிலும் வல்லவர்கள் என்பது வரலாறு. யாழ்ப்பாணம் என்ற ஊர்ப்பெயரே அதற்குச் சான்று.

யாழ்ப்பாணத்தில் 'பிரெக்கன் ரிஜ்' ஒரு முரடன்; ஆனால் நியாயவாதி. சமூகம் நன்றாயிருக்க வேண்டும் என்று விழையும் ஒரு சண்டியன். பொது நோக்கிற்காக எதையும் செய்வான். சுயநலம் என்பது சிறிதும் இல்லாதவன், கடவுள் நம்பிக்கை கிடையாது. ஆனால் மனித நேயம் உண்டு.

சமூக துரோகி ஒருவனை பிரெக்கன் ஆத்திரத்தில் கொலை செய்து விட்டான். சிறையில் அடை பட்டான்.

அவன் விசாரணைக் கைதியாயிருந்த நாளில் சிறைக்கைதி களிடையே இறை ஊழியம் செய்யும் ஒரு சகோதரரால் பிடிக்கப்பட்டான். பைபிள் படிக்க ஆரம்பித்தான். தீவிரமாகப் படித்து முடித்தான். ஆழமான சத்தியங்களையும் எளிதில் ஜீரணிக்கலானான்.

'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் இறைஅரசில் பிரவேசிக்க மாட்டான்' என்ற யோவான் மூன்றாம் அதிகாரம் மூன்றாம் வசனத்தைப் பலமுறை படித்துத் தியானிக்கலானான்.

சமூக உணர்வோடு தெய்வ பயமும் வேண்டும் என்று கண்டு கொண்டான். 'பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்.; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்' என்ற நீதிமொழிகளின் கூற்று அவனைப் பலமாக எச்சரித்தது.

மறுபிறப்புடன் புதிய அனுபவத்திற்குள் வந்தான். தன் வக்கீல் மூலம் 'நிரபராதி' என்று பொய்யாக வாதிட்டு வந்த அவன் வக்கீலை விலக்கி விட்டு தன் தவறுகள் அனைத்தையும் எழுதி அறிக்கை செய்தான்.

பிரெக்கனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அவன் புதுவாழ்வு பெற்ற பிறகு சிறைச்சாலை துதிதோத்திரக் கூடமாயிற்று. ஆடுவதும், பாடுவதும் குதிப்பதுமாக இருந்தான். இரவு முழுவதும் கடவுளோடு உறவாடினான்.

தூக்குதண்டனைக்கு முந்திய நாள் முழுவதும் பாடிக்கொண்டும் எழுதிக்கொண்டுமிருந்தான். தூக்கில் தொங்குவதற்கு சிலமணித்துளிகளுக்கு முன்னால் ஓர் அழகானபாடல் எழுதினான். இனிய இராகம் அமைத்துப் பாடினான்.

தண்டனையை நிறைவேற்றுமுன் 'உன் கடைசி ஆசை என்ன?' என்று வழக்கப்படி சிறை அதிகாரிகளால் கேட்கப்பட்டது. 'தூக்குக்கயிற்றைத் தொட்டவாறு நான் எழுதிய பாடலைப் பாட வேண்டும்' என்று கேட்டு அனுமதி பெற்றான்.

"இயேசு நேசிக்கிறார். இயேசு நேசிக்கிறார் இயேசு என்னையும் நேசிக்க யான் செய்ததென்னமா தவமோ" என்ற பாடல் இனிய தொனியில் தூக்குக் கொட்டடியில் ரீங்காரித்தது.

'ஆசை இயேசுவென்னை...' என்ற வரிகளை மகிழ்ச்சியோடு பாடி ஆரவாரித்தான். 'ஆவலாய்ப் பறப்பேன்' என்னும் வரிகளைப் பாடும் போது மரணத்திற்குப் பின்புள்ள பரலோக வாழ்வை எண்ணி குதூகலத்துடன் குயில் போலக் கூவினான். "ஈசன் இயேசு எனைத்தான் நேசித்தார் என்ற இணையில் கீதஞ் செய்வேன்" என்ற கடைசி வரிகள் சிறை முழுவதுமாக எதிரொலித்தது. இன்று நாடெங்கும் இப்பாடல் ஒலிக்கிறது. மீட்கப்பட்ட பாவிகளின் இதயத்தில் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நீதிமானோ தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன். நீதி. 14:32.

(இயேசு நேசிக்கிறார் என்ற 217ஆம் கீர்த்தனைப்பாட்டு பிறந்த கதை)

நாடே, நீ எங்கே போகிறாய்?

பாளையம்பதியில் மாம்பழச்சங்கம் என்றொரு விந்தையான விழா வருடந்தோறும் நடைபெறும். நெல்லைத் திருமண்டில இறைமக்களின் துதி தோத்திரப் பண்டிகையாகும். நாலாதிசைகளிலும் உள்ள கிராம மக்கள் மாட்டு வண்டிகளிலும், கால் நடையாயும் வந்து குவிவர். மூன்று நாட்கள் தங்கி இருந்து தாமிரபரணியில் குளித்து பண்டிகை கொண்டாடிச் செல்வர்.

இது மாம்பழம் நிறைந்து வழியும் காலமாதலால் மாம்பழச்சங்கம் என்பர். நூறு ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் பெண் பிள்ளைகளுக்கு மாப்பிள்ளை பார்க்கும் இடமாகவும் பயன்பட்டமையால் "மாப்பிள்ளைச் சங்கம்" என்பது "மாம்பழச் சங்கம்" என்று மருவிற்று என்பாருமுளர்.

இரண்டும் உண்மைதான்.

எவ்விதத்திலும் இது ஓர் விசேஷித்த மக்கள் பண்டிகையே.

இந்தப் பண்டிகையின் மிகச்சிறப்பு, திரள் திரளான பிச்சைக்காரர்களின் வருகைதான். ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் மூன்று நாட்களுக்கு முன்பே வந்து இடம் பிடித்து முகாமிடுவார்கள்.

பண்டிகை நடக்கும் நூற்றாண்டு மண்டபத்தின் முன்பு தங்கள் தங்கள் இடங்களுக்குத் துண்டு விரித்து எல்லை போட்டு முந்திக்கொள்வார்கள். பிச்சைக்காரர்களில் பெரும்பாலோர் வேடிக்கையான வேஷதாரிகள், போலிகள், பரம்பரையல்லாத பண்டிகைப் பண்டாரங்கள்.

கிராமங்களிலிருந்து வரும் எண்ணற்ற மக்கள் அந்தப் பிச்சைக்காரர் களுக்கென்று அரிசி, காய்கறி, காசுகளைக் கொண்டு வந்து ஒவ்வொரு வருடமும் பத்துப் பேருக்காவது பங்கிட்டுக் கொடுத்து ஏழைகளிடம் இயேசுவைக் காண்பார்கள். மனநிறைவு பெறுவார்கள். சராசரி ஒவ்வொருவருக்கும் நான்கைந்து படி அரிசியும், சில்லரையாக முன்னூறு ரூபாய் வரையும் சேர்ந்து விடும். எனவே வருடா வருடம் பரம்பரை அல்லாத பண்டிகைப் பண்டாரங்கள் அதிகமாக அலை மோதுவர்.

பிச்சையர்களில் ஒருவர் தம் இரு இடங்களிலும் இராமல் மிகச்சௌடாலாக அங்குமிங்கும் சுற்றி வந்தார். அவரைப்பற்றி விசாரித்தேன். அடுத்த பிச்சைக்காரர் சொன்னார்.

'அவனுக்கென்ன மகாராசா. மூன்று பயல்கள். ஒருவன் மெட்ராசில் பிச்சை எடுக்கான். அடுத்தவன் பம்பாயில் பிச்சை எடுக்கான். கடக்குட்டிப் பயல் டில்லியில் பிச்சை எடுக்கான். பயல்க மாதாமாதம் பணம் அனுப்புறான்க; இவன் பேங்கில பணம் போடறான்' என்றார்.

பிச்சை எடுப்பது ஒரு கௌரவமான தொழிலாகி விடுமோ என்ற அச்சம் எனக்குள் எழுந்தது.

"நாடே, நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?" என்று புலம்பலானேன்.

தக்க சமயத்தில்...

தென்கோடி நெல்லை சீமையிலிருந்து வடக்கே காஷ்மீர் வரை சுற்றுலா போகிறோம். அந்த ஆண்டு 1984.

ஆக்ரா, தில்லி, காஷ்மீர்-

தாஜ்மகால், செங்கோட்டை, படகுவீடுகள் - ... எல்லாம்

மனக்கண் முன்தோன்ற உள்ளம் கிளுகிளுத்தது.

பாளையம்பதியிலுள்ள ஜான்ஸ் மேனிலைப்பள்ளி ஆசிரியர்களாகிய எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி!

அப்பப்பா! எத்தனை நாள் ஆயத்தம். அடடா! எவ்வளவு ஆனந்தம்!

அடுத்த வீட்டு அன்பர் பால்ராபர்ட் இன்சூரன்ஸ் ஏஜெண்ட்

ஆயுள் இன்சூரன்சில் சேராததினால் அவருக்கு என் மீது அன்பின் கோபம்.

"இன்சூரன்சில் சேர்வதினால் என்ன ஆதாயம்? சீக்கிரம் செத்தால் நமக்கு முழுத்தொகையும் கிடைக்கும். அப்படி ஒரு பணம் எனக்கு வேண்டாம். நான் இன்சூரன்சிற்குப் பரம எதிரி, ஆளை விடுங்கள்". என்று சொல்லி வருகிறவர்களை விரட்டி விடுவேன்.

கடந்த 15 ஆண்டுகளாக விடாக்கண்டர்களான ஏஜெண்ட்களிடமிருந்து தப்பி விட்டேன்.

திரு. பால்ராபர்ட் வயதானவர், கண்ணியம் மிகுந்தவர், நல்ல பக்திமான்.

காஷ்மீர் செல்ல வீட்டை விட்டுப் புறப்பட ஆயத்தமானேன். பால்ராபர்ட் வந்தார். ஓர் ஆழமான பிரார்த்தனை ஏறெடுத்தார். ஆசீர்வதித்தார். பின்பு 'ரூபாயை எங்கே வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

தோளில் தொங்கும் பையைக் காட்டினேன்.

அவர் சொன்னார்;

"ரூபாயை மூன்று பிரிவாகப் பிரித்து சூட்கேஸ் அடியில் ஒரு தொகை உள் கால்சட்டை பையில் ஒரு தொகை, தோளில் தொங்கும் பையில் ஒரு தொகை. இப்படியாக மூன்று இடங்களில் வைத்துக் கொள்ளுங்கள். கால்சட்டையில் இருப்பதை காஷ்மீர் போய் எடுக்க வேண்டும். சூட்கேசில்

இருக்கும் பணத்தை திரும்பி வரும்போது சென்னை வந்து எடுக்க வேண்டும். தோளில் தொங்கும் பையிலுள்ள தொகை வழி நெடுகச் செலவிற்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்பிற்கு இது நல்லது.

இன்சூரன்சும் இப்படித்தான்.

“ரிஸ்க் கவர் ஆகும்” என்று சொல்லிச் சென்று விட்டார். காலம் கெட்டுக்கிடக்கிறது. எனவே-

அவர் சொன்ன ஆலோசனை எனக்குச் சரியெனப் பட்டது.

உல்லாசமாக ஊர்சுற்றி - நாடு வளம் கண்டு நற்சுகத்துடன் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தோம். வந்தவுடன் முதல் வேலையாக இன்சூரன்சில் சேர்ந்தேன். ‘கடவுளே, இந்தப் பணத்தை முழுமையாகக் கட்டி முடிக்க வேண்டும்; உயிருள்ள காலத்திலேயே அனுபவிக்க வேண்டும்!’ என்று வேண்டிக் கொண்டேன்.

பத்து ஆண்டுகள் கழித்து என் பிள்ளைகளின் திருமணங்கள் வரிசையாக வர ஆரம்பித்தன. ஒவ்வொரு திருமணத்திற்கும் இத்தொகை கொஞ்சம் கொஞ்சம் வலுவான கைகொடுத்தது இன்னும் வரவிருக்கும் திருமணங்களுக்கும் ஊன்றுகோலாக உள்ளது.

தக்க சமயத்தில் சொல்லிய ஆலோசனை பக்குவமாகப் பழுத்தது.

அரசு எத்தனையோ திட்டங்களை வகுத்தாலும், அரசியல்வாதிகள் வாய்கிழியப் பேசினாலும் நமது சேமிப்பே, நமக்குக் கைகண்ட மருந்தாகும்..

கடவுள், எங்கள் காப்பீட்டுப் பணத்தை முழுமையாக எங்கள் காலத்திலேயே அனுபவிக்க உதவி செய்தார்.

ஜனவரி 1996 ‘நல்ல நல்ல கதைகள்’ என்ற நூலிலிருந்து...

பனம்பால்

மந்திர நகரில் மேற்கு நோக்கி நடந்தேன். நகருக்கு மேற்கே கூட்டப்பனைகள். அதன் பக்கமுள்ள ஒற்றையடிப் பாதையில் நாலைந்து பெண்கள் பதநீர் விற்றுக்கொண்டிருந்தனர்.

'ஐயா, இங்க வாங்க, நல்ல பதனீர்' என்று போட்டி போட்டு என்னைக் கூவி அழைத்தனர்.

வாய்நிறைய வெற்றிலைக் காவியுடன் மஞ்சள் முகத்தோடு என் கையில் ஓலைப்பட்டையைத் திணித்துக் கெஞ்சி வேண்டின ஓர்அம்மாவிடம் பதநீர் குடிக்க நின்றேன்.

தோளில் முறுக்குத்தடியும், இடுப்பில் அரிவாள் பெட்டியுமாக அங்கு வந்த திருகு மீசைக்காரர் 'ஐயாவிற்குக் குடிக்கு மட்டும் கொடு' என்றார் மிக இனிப்பாக. அவர்தாம் அவளுடைய கணவர் காளிமுத்து.

'பதநீர் குடிக்கும்போது ஈ, எறும்புகளை அரிப்பதற்காகத்தான் நான் அரிப்பு மீசை வைத்திருக்கிறேன்' என்று கூறி தம் பெரிய மீசையை மிடுக்குடன் ஆட்டினார்.

கால்படி பதநீரில் மூன்று நுங்கு போட்டுக் குடித்தேன். வாயும் வயிறும் பூரண திருப்தி, உடல் குளிர்ந்து மனம் மகிழ்ந்தது.

கற்பக விருட்சங்கள் எனக்கு தேவதாரு மரங்கள் போல் தோன்றின. பனைமரத்தொழிலாளிகள் தேவாமிர்தத்தைக் கொண்டு தரும் தேவ தூதர்களைப் போன்று காட்சியளித்தார்கள்.

நன்றி கூறிவிட்டு நடந்தேன்.

'ஜீவாமிர்தம் போன்ற பனம்பால் - கடின உழைப்பில் சுரக்கும் கற்பகக்கனிரசம் - இவ்வளவு மலிவாய், காப்பி டீ யிலும் விலை குறைவாய் இருக்கக் காரணம் என்ன? மக்கள் உண்மையான சத்துணவை உணராததினால்தானே? அல்லது உண்மை உழைப்பிற்கு உயர்வு கொடுக்காததினால்தானோ? பல்லைச் சொத்தையாக்கும் ஐஸ் பானத்திற்கு இருக்கும் மதிப்புக்கூட பதனீருக்கு இல்லையே' என்று எண்ணியவாறு உள்ளம் வெந்து நொந்து வீடு நோக்கிச் சென்றேன்.

மாலைப் போதில் என் கால்கள் மீண்டும் பனங்காட்டையே நோக்கி நடந்தன.

காலையில் மலர்ந்த முகத்துடன் பதநீர் விற்ற அந்த அம்மாள் இப்பொழுது மஞ்சள் அழிந்து குங்குமம் சிதைந்து மாலை மாலையாகக்

கண்ணீர் வடித்துக்கொண்டே மாலைப் பதநீர் விற்றாள். கூந்தல் அவிழ்ந்து கண்கள் வீங்கி இருந்தன. அந்த அம்மாளிடம் பேசினேன்.

'ஏம்மா அழுகிறீர்கள்?'

'வயிற்றில் மண்ணை போட்டுட்டாங்கையா?'

'என்னம்மா சொல்றீங்க?'

'எங்க வீட்டுக்காரரை போலீஸ்காரங்க புடிச்சிட்டுப் போராங்கையா, கடவுளுக்கு ஏற்காத பெருத்த அநியாயம் ஐயா.....' ஒப்பாரி வைத்து அழுதாள்.

காளிமுத்து பனை ஏறுவதில் பெரிய கில்லாடி. அவர் பனை ஏறும்போது பனஞ்சிறாய்கள் அவரைக் கண்டு நடுங்கும். பச்சை மட்டைகள் அவரைக்கண்டு அச்சமுடன் பணியும். பனை மண்டையில் பம்பரமாடுவார். ஏழு பிள்ளைகள். கணவன், மனைவி மாமி ... ஆகப்பத்து ஜீவன்கள். தினமும் ஐம்பது பனைகளாவது ஏறினால் தான் வாழ்க்கை நடத்த முடியும்.

பனை ஏற்றுத் தொழிலும், பனைகளும் அருகிக் குறைந்து வருவதால் தம் மூத்த மகனைக் கல் உடைக்க அனுப்பி விட்டார். அடுத்த பெண்பிள்ளை பீடி சுற்றச் செல்கிறது. அவர் மனைவியும் கூட கருப்புக்கட்டி காய்க்காமல் பதநீரை விற்று விட்டு மாலையில் பீடிதான் சுற்றுகிறாள்.

ஐம்பது ஏற்றுப் பனைகளிலும் நாள் ஒன்றுக்கு இருமுறை வீதம் இருநூறு முறைகள் ஏறி இறங்க வேண்டும். இக்கடின உழைப்பிற்கு டானிக் அவரே தயாரிக்கும் கள்ளுப் பதநீர்தான். அதில் ஒரு கலையம் சாப்பிட்டால் தான் உடல் உலையாமல், உறுதி குலையாமல் பனை ஏறுவார். வெறி தரும் வேறு எந்த மது வகை பற்றியும் அவருக்குத் தெரியாது. அவரது குடியினால் சமூகத்திற்கு இலாபமே தவிர நஷ்டமில்லை. குடித்துத் தடம் புரளும் ஏடே அவரது அகராதியில் கிடையாது. அவர் குடிப்பது சுண்ணாம்பு தடவாத சுத்தமான பனம்பால்.

ஆக்க வேலைக்குப் பயன்படும் அணுசக்தியைச் சில வல்லரசுகள் அழிவு வேலைக்குப் பயன் படுத்தியது போன்று சுண்ணாம்பு தடவாத சுத்தமான வெள்ளைப் பதநீரை சிலர் வெறிதரும் பானமாக மட்டும் பயன் படுத்தினர். பலர் அளவுக்கு மீறிக் குடித்துக் குடும்பத்தை நட்டாற்றில் விட்டனர்.

எனவே, அரசாங்கம் மதுவைத் தடை செய்தது.

சமீபத்தில்தான் இரட்சா பெருமானை ஏற்றுக்கொண்டு புதிய ஜீவியத்தில் காலடி எடுத்து வைத்திருப்பவர் காளிமுத்து. அரசு ஆணைக்குக்

கீழ்ப்படியும் அவர் கள்ளை மறப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். கள்ளை மட்டுமன்று, பொடி, பீடி, புகையிலை யாவையும் அடியோடு நிறுத்தி விட்டார். அவைகளை வெறுக்கவும் ஆரம்பித்தார்.

காளிமுத்து காப்பி குடித்துப் பழகினார். காது அடைத்துக் கால்கள் தளர்ந்தன. கடின வேலைக்குக் காப்பி கட்டுப்படியாக வில்லை. பத்துப் பனைக்கு மேல் ஏற முடியவில்லை. கள்ளுக்கு நிகரான பானம் அவருக்குக் கிடைக்கவில்லை. பத்துப் பனை ஏறினாலே போதும் என்ற வாழ்க்கை உத்தரவாதமும் இல்லை. காப்பியை நிறுத்தி சுண்ணாம்புப் பதநீரையே குடித்துப் பழகி, பழையபடி பனை ஏற ஆரம்பித்தார்.

கடந்த இரு தினங்களாகக் காளிக்கும் அவர் தம் மகளுக்கும் ஒரே காய்ச்சல். சாரல் மழை வேறு தூறிக்கொண்டே இருந்தது. எனவே அன்றையப் பதநீர் விற்கவில்லை. காய்க்கவும் காணாது. குடித்தது போக ஒரு கலயத்தில் அரைக்கலையம் பதநீர் மீதி இருந்தது. அதை மறந்து அப்படியே வைத்து விட்டார்கள்.

இரண்டு நாட்கள் விரைந்து ஓடின.

இலவசப் பதநீர் குடிக்க வந்த ஒரு போலீஸ்காரரை காளிமுத்துவின் மனைவி கடிந்து பதனீர் விட மறுத்து விட்டாள். கள்ளம், கபடமின்றிப் பிழைக்கும் அவர்கள் ஏன் போலீசுக்குப் பயப்படவேண்டும்?

ஆத்திரம் கொண்ட போலீஸ்காரர் கண்ணில் அந்தக் கலையம் பட்டு விட்டது. இருநாட்களுக்கு முன்புள்ள பதநீர் புளித்துப் போயிருந்தது. கள் என்பதற்குக் கையுமெய்யுமான சாட்சி கிடைத்து விட்டதென்று குதித்து ஆடினார்.

சளித்துப் புளித்துக் கள் மணம் தட்டிய கலையத்தையும், காளிமுத்து வையும் கைது செய்து காவல் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றார். காளியைக் கம்பி எண்ண வைக்க வேறு சாட்சியங்கள் தேவையில்லை.

பதநீர் சொட்டுகள் பாழாயின. பனை ஏறுவதற்கு ஆள் கிடைக்க வில்லை. பனை சொந்தக்காரர் பனைகளை வெட்டி விட்டுப் பீடிக்கம்பெனி நடத்தத் தீர்மானித்தார்.

பனை செத்து பீடி பிழைத்தது. பனம்பாலாம் பதநீர் குடிபோய் சாராய குடியும், பீடி சிகரெட், கஞ்சாக் குடிகளும் வலுத்தன.

குறிப்பு : மதுவிலக்கு அமுலில் இருந்த காலத்தில் (1949) எழுதிய நிகழ்ச்சிச் சித்திரமாகும் இக்கதை.

14.4.1998 'ஜனசக்தி சித்திரை மலர்'

வரவேற்கப்படாத விருந்தாளி!

ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையை முடித்து விட்டு மாங்குளத்து உபதேசியார் திரித்துவதாஸ் வழக்கம்போல் கோயில் மண்டபத்தில் அமர்ந்தார்.

உள்ளூரில் கடை வைத்திருப்பவரும், ஊருக்கு வாயாடியுமான சர்க்கிள் கமிட்டி மெம்பர் திரு. சத்தியம்-

'என்ன வாத்தியாரே, நம்ம கடையில நிறைய வெள்ளைப் பேப்பர் இருப்பு இருந்து போச்சி. முதலாம் வகுப்பிலிருந்து எல்லாப் பயல்களையும் பேப்பர்ல பரீட்சை எழுதச் சொல்லுமே' என்று பிஸினஸ் நேக்காகக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்தார்.

நெல்லையில் தன் பெயரில் நாலைந்து லாரிகள் ஓடிக்கொண்டிருக்கும் சர்ச் கவுன்சில் மெம்பர் சந்தோஷம்-

'என்ன செப்டம்பர்ல நம்ம சர்ச் எலக்ஷன் ஆரம்பிக்குதாமே' என்று சொல்லிக்கொண்டே மடிப்புக் கலையாத துண்டை மண்டபத்துப் படியில் போட்டு உட்கார்ந்தார்.

பர்மா பென்ஷனரும், உள்ளூர்க் குட்டிப் பண்ணையாரும் அத்தியட்சாதீன கவுன்சில் உறுப்பினருமான திரு.நேசமணியும், ரிட்டயர்ட் சப் இன்ஸ்பெக்டர் திரு. ரிச்சர்டும்கூட அங்கு வந்து சேர்ந்தது ஆச்சரியமாய்த்தானிருந்தது.

அவிந்து புழுங்கும் கொடிய வேனல் காலம். கிறிஸ்தவக் கோயில் மண்டபத்தைச் சுற்றி மூன்று வேம்புகள் நிற்பதால் ஊரில் எந்த இடத்தையும் விட அங்குதான் அழகான காற்று வரும்.

பங்குனிப் புழுக்கத்தைவிட அங்குக் கூடியிருந்த பிரமுகர்கள் ஒவ்வொருவருக்கும் மனப்புழுக்கம் அதிகம் உண்டு. ஆனால், அதைக் காட்டாமல் உள்ளுக்குள் கறுவிக்கொண்டு மேலுக்கு வேண்டா வெறுப்பாகத் தங்கள் தங்கப் பற்களையும், தந்தப்பற்களையும், காவிநிறப் பற்களையும், புகையிலை படிந்த கறுப்புப் பற்களையும் காட்டிச் சிரித்துக்கொண்டார்கள்.

அங்கே உட்கார்ந்திருந்த யாவரும் பேச்சுவாக்கில் நெல்லை ஆதீனத்திலுள்ள பல பெரிய மனிதர்களின் இரகசியங்களைப் பரகசியமாக்கினர்.

பக்கத்தில் நின்ற ஒன்றிரண்டு விவசாய மக்கள் திறந்த வாய் மூடாமல் விந்தையோடு கேட்டு நின்றார்கள்.

உபதேசியார் திரித்துவதாஸ் மட்டும் என்ன பேசினாலும் குற்றம் என்ற பயத்தில் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

இந்நேரம் திடீரென்று அங்குவந்து நின்ற ஒரு ஜீவன் அனைவரையும் வணங்கியது.

எல்லோர் கண்களிலும் பரிகாசப்பார்வை நிறைந்தன.

'என்ன பிரசங்கியார்வாள், பெரிய மூட்டை?' என்றார் பர்மா பென்ஷனர். ஒடிந்த குரலில் 'ட்ராக்ஸ்' என்றார் பிரசங்கியார். 'பிரசங்கிமாரைத் திறந்துதான் விட்டிருக்கிறது' என்று அலுத்துக் கொண்டே அவர் கொடுத்த இலவச துண்டுப் பிரசுரங்களைப் பார்வையிட்டார் கடைக்காரர் சத்தியம்.

'வரவேற்கப்படாத விருந்தாளி' என்று மகுடமிட்டு இயேசுவைக் குறித்து எழுதியிருந்த அந்தப் பிரசுரம், எல்லோர் கைகளிலுமிருந்து ஏககாலத்தில் நகைத்துக் கொண்டிருந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் மட்டும் அர்த்த புஷ்டியுடன் மனதிற்குள் சிரித்துக் கொண்டே பிரதியைப் படித்தார்.

வீட்டில் பழையது இல்லாமல் காலை பத்து மணி ஆகியும் இன்னும் சாப்பிடாதிருக்கிற உபதேசியார், பிரசங்கியார் இங்கே தங்கிவிடுவாரோவென்று பயந்து, 'நீங்கள் இங்கு வந்து நாலு மாதம் கூட ஆகல்லியே, வேறு சபை கிடைக்கல்லியாக்கும்' என்றார் விரக்தியோடு.

பிரசங்கியார் அவசர அவசரமாகத் தம் கோட்டுப் பையிலிருந்த டைரியை எடுத்து 'சரியாய் இன்றோடு ஆறுமாதம் முடிகிறது.. ஒவ்வொரு ஊருக்கும் ஆறு மாதத்திற்கு ஒரு முறைதான் போவேன். முந்தின உபதேசியாரையா சோறும் போட்டு ஒரு ரூபாயும் கொடுத்து அனுப்புவார்கள், என்றார் மிக மரியாதையாக.

லாரி முதலாளி சந்தோஷம் தமது இலண்டன் நேவிகட் சிகரெட் புகையைச் சுண்டிவிட்டுத் தொண்டைக்கு மேலே சிரித்தார். திருவாளர் ரிச்சர்ட் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தார்.

'நம்ம பிஷப் இப்படி மாமூல் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் ஏன் லைசன்ஸ் கொடுக்கிறார்?'

பிரசங்கியார் பரிதாபமாக விழித்தார்.

அவரின் மருண்ட பார்வையும், வெருண்ட தோற்றமும் தனக்குச் சாதகமாக முடியலாம் என்றெண்ணிய உபதேசியார், 'எங்கே உங்கள் லைசன்ஸ்?' என்றார்.

ஏழெட்டுத் துணிகள் போட்டு சுற்றி மிகப்பத்திரமாகப் பொதிந்து வைத்திருந்த பல ஒட்டுகள் உள்ள ஒரு கிழிந்த கடுதாசியை எடுத்துக் கொடுத்தார்.

பண்ணையார் இடது கையில் வாங்கி அலட்சியமாகப் பிரித்துப் பார்த்தார்.

‘லைசன்ஸ் காலாவதியாகி ஒரு வாரம் ஆகிவிட்டதே’ என்றார் பண்ணையார்.

உபதேசியாருக்கு ஒரே உற்சாகம்

வரவேற்கப்படாத விருந்தாளியோ மிரள மிரள விழித்தார்.

குயுக்தியாக ஒரு பொருத்தமான காரணத்தைச் சொன்னார் பிரசங்கியார்.

‘நம்ம பிஷப் அமெரிக்கா போயிருக்கிறார்; வந்த பிறகு தான்...‘

‘லைசன்சை புதுப்பித்த பின்பு வாரும் - இப்போ போரும்‘ என்றார் கடைக்காரார் முரட்டுக்குரலில்.

‘உபதேசியாரைய்யா, வீட்டிற்குப் போய் ஒரு ஜெபம்பண்ணி விட்டுப் போகிறேன்’ என்று பிரசங்கியார் அழாக்குறையாகச் சொன்னார். கூட்டம் கலைந்தது.

பிரசங்கியார் பேரின்பத்திற்கு வயது நாற்பத்தெட்டாகிறது. பதினெட்டு வயதிலிருந்தே தனி உபதேசியாராகப் பல சபைகளில் இருபது வருடங்கள் ஊழியம் செய்தார். அந்தச் சபைகளிலெல்லாம் இப்பொழுது கிறிஸ்தவப் பள்ளிகள் தோன்றி - ‘ஆடு மேய்த்தாற் போலும் அண்ணனுக்குப் பெண் பார்த்தாற்போலும்‘ அந்தந்த ஊர் உபாத்திமாரே பள்ளி வேலையோடு சபைகளையும் கவனித்துக் கொண்டதால் பேரின்பம் உபதேசியாருக்கு வேலை இல்லை.

இருபது வருடங்களாக மரத்துப்போன தொழிலை விட்டு அவருக்கு வேறு என்ன தொழிலைச் செய்ய முடியும்? பாவம், அவர்களுக்கு ஒய்வூதியமும் கிடையாது.

உழுகிறவனுக்குச் சாட்டைக் கம்பும் - கிறிஸ்தவப்பிரசங்கிக்குப் பைபிளும் தானே மிச்சம்!

பைபிளைத் தூக்கிக்கொண்டு சுயேச்சைப் பிரசங்கியாராகக் கிளம்பினார்.

‘பிடி சாதம் கொடுங்கள்‘ என்ற உள் அர்த்தத்தில் அத்தியட்சர் அனுமதியும் கிடைத்தது. ஏதாவதொரு திசையை நோக்கிக் கிளம்பினால் இரண்டு மூன்று மாதங்கள் கழித்துத் தான் மீண்டும் வீடுவந்து சேருவார்.

வயிற்றுப்பாடு போக ஏதோ பத்து, இருபது ரூபாயுடன் வருவார். அதுதான், துணிமணி, நன்மை தீமை, பிள்ளைகள் படிப்பு முதலிய வீட்டுச் செலவுகளுக்கு...

கிறிஸ்தவ ஆரம்பப் பள்ளிகளும், பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரியர்களும் குவியக் குவியப் பிரசங்கிமாரும் குவிந்தனர்.

அவர்களை விசாரித்து அனுமதி வழங்குவதே அத்தியட்சருக்குப் பெரும் வேலையாய் விட்டது. பிரசங்கிமார் பெருகினர்; பிரசங்கங்கள் மலிந்தன; பிரசங்க மார்க்கட் மந்தமானது! பல தினங்கள் பச்சைத் தண்ணீரைக் குடித்துப் படுத்து உருள வேண்டியதாயிற்று. பசியும் நிர்வாணமும் அவரை இயேசுவின் அன்பிலிருந்து பிரித்துவிடுமா?

இப்பொழுதெல்லாம் அவருக்குப் 'பின்னால் வேண்டுமே பிள்ளைகளுக்கு வேண்டுமே' என்ற பேராசை கிடையாது.

நாளைக்கு வேண்டுமே என்ற நப்பாசை கூடக் கிடையாது.

'இன்றைக்குரிய ஆகாரத்தை இப்பொழுதே தாரும்' என்பதுதான் அவரது விடாப்பிடியான வேண்டுகோள்.

அவர் தோளில் தொங்கும் தோல் பையில் முன்பெல்லாம் பைபிள், பல்பொடி, பவுடர், எண்ணெய், ஒருமாற்று உடுப்பு இவையெல்லாம் இருக்கும். இப்பொழுது அவைகளை யெல்லாம் தள்ளிவிட்டுத் திருமறையும், துண்டுப்பிரதிகளும் மட்டுமே உள்ளன.

இலவசத் துண்டுப்பிரசுரங்களை இமயமளவாய் அமெரிக்கப் பக்தி நிறுவனம் ஒன்று அனுப்பிக்கொண்டிருந்தது.

ஒருநாள், நம்பிப்பாறை என்ற ஊருக்கு ஒரு ரூபாய் கொடுத்து பஸ்ஸில் ஏறிப் போயிருந்தார். அன்று ஞாயிற்றுக் கிழமை. அந்த ஊர் உபதேசியார் கடுவம் பூனைபோல் சீறி விழுந்தார். இரவு ஜெபத்திலாவது பிரசங்கத்திற்கு இடம் கொடுக்கும்படி கெஞ்சினார்.

உபதேசியார் மிகப் பரிதாபமாகச் சொன்னார்;

'பிரசங்கியார்வாள், இரவு ஜெபத்திற்கு ஒன்றிரண்டு பெண்கள் மட்டுமே கோயிலுக்கு வருவர். மலேசியாவிலிந்து ஒரு சகோதரர் நேர்ச்சையாக முன்னூறு ரூபாய் அனுப்பினார். அதை வைத்து மின்சார இணைப்பு எடுத்து கோயிலை விளக்குகளால் அலங்கரித்து விட்டோம். எரிந்தாலும் எரியாவிட்டாலும் குறைந்த பட்ச மின்சாரக் கட்டணம் வருகிறது. அதற்காகக் கோயிலைத் திறந்து விளக்கைப்போட்டு மணி அடித்து கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி விட்டு கதவை மூடிவிடுவோம். வேண்டுமானால் இன்று மத்தியான ஆராதனையில் பேசுங்கள்; என் மனைவி பேறு காலத்திற்குத் தாய் வீட்டிற்குப் போயிருக்கிறதால் சாப்பாடு போட முடியாது' என்றார் துக்கம் நிறைந்த தொனியில்,

பிரசங்கியாரும் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்காமல்,

'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என்ற வேத வாக்கிய மேற்கோளில் பிரசங்கம் செய்து விட்டு நடையைக் கட்டினார்.

இந்தப் பிரசங்கத் தொழிலுக்கே முற்றுப்புள்ளி வைத்து விட்டுப் பீடி சுற்றப் போய்விடலாமென்று பலமுறை நினைத்தார். ஆனால், சிலவேளைகளில் அவருக்குக் கிடைக்கும் மகத்தான வரவேற்பையும், கொழுத்த விருந்தையும் நன்றி மறந்து விட முடியுமா?

எப்படியோ பத்து வருடங்கள் உருண்டுவிட்டன. எத்தனை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினாரோ, ஆண்டவருக்கே வெளிச்சம்.

நேற்று இரவு விளக்குக்கூடப் பொருத்தாத ஓர் அணைந்த கோயிலினுள் அகப்பட்டுக்கொண்டார். பசி செவியைப் பிய்த்தது. கண்ணை உள்ளே தள்ளியது. கையில் ஒரு பைசா கிடையாது. நல்ல வேளை படுக்கவாவது இடம் கிடைத்ததே!

காலையில் எழுந்து மாங்குளத்துக்கு வருகிற வழியில் ஒரு கிணற்றில் கருங்கடல் போல் தண்ணீர் கிடந்தது.

குளித்து மூன்று நாட்களாகி விட்டன.

'கர்த்தர் நீதிமான்களைப் பசியால் வருந்த விடார்' என்ற துணிவில் நன்கு குளித்துவிட்டு மாங்குளம் வந்தடைந்தார்.

மண்டபத்து மகான்களிடம் அவருக்கு 'மாபெரும் வரவேற்பு' கிடைத்தது!

குளித்து விட்டதால் பசி குடலைச் சுருட்டியது. கஞ்சி ஊற்றிக் கொண்டிருக்கும் பிஷப் லைசன்ஸ் காலாவதியாகி விட்டதால் கால்கள் பின்னலாடி நடுங்கின.

தோள்பட்டையில் தொங்கிய தோல்பையைத் தாங்கத் திராணியற்று நின்று கொண்டிருந்தார்.

வாத்தியார் வீட்டிற்கு ஜெபம் பண்ணப் போனாலாவது ஒரு தம்ளர் காப்பித் தண்ணீர் கிடையாதாவென்ற ஏக்கத்தில் 'ஒரு ஜெபம் செய்துவிட்டுப் போகிறேன்' என்றார்.

உபதேசியார் மனைவி ஓலைப்பாயை விரிக்க - பிரசங்கியார் தோல் பை சுமையைக் கீழே இறக்கி வைத்து விட்டு ஜெபித்தார். தோல் பையின் பளுவைக் குறைக்க வேண்டி 'வரவேற்கப்படாத விருந்தாளி' என்ற பிரசுரங்கள் அடங்கிய மூன்று பெரிய கட்டுகளைத் தூக்கி உபதேசியாரிடம் கொடுத்துவிட்டு எழும்பினார்.

கருணை வடியக் கனிந்து நின்ற உபதேசியாரின் மனைவி ஒரு கப் காப்பி கொண்டுவந்து பிரசங்கியாருக்குச் சுடச்சுடக் கொடுத்தாள்.

கச்சிதமாகக் குடித்துவிட்டு நம்பிக்கை வீண்போகாமல் கிளம்பினார். பிரசங்கியார் வாசல்படியைக் கடக்குமுன் உபதேசியார் தம் மனைவியிடம், 'உன்னைக் காப்பி கொடுக்கச் சொன்னது யார்? இப்படிக் கொடுத்துப் பழக்கினால் மாதம் மூன்றுமுறை ஆளை அரிக்க வருவான்க' என்று கண்களில் கனல் கக்க எரிந்து விழுந்தார்.

அவர் மனைவி ஓடிவந்து கணவனின் வாயைப் பொத்திக் கொண்டு 'ச்ச்சூ... சும்மா இருங்க, அந்த மனுஷன் தந்திருக்கிற தாளே எட்டணாவுக்குப் போதும்' என்றாள்.

இவ்வார்த்தை சுவர் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த பிரசங்கியார் பேரின்பம் காதில் விழுந்து விட்டது.

அவர் நடந்துகொண்டேயிருந்தார். காப்பித் தண்ணீர் உள்ளே போய் கடும்பசியைக் கிளப்பியது.

'பசி வந்திடப்பத்தும் பறந்து போம்' என்பார்கள்.

ஏன் நாமும் அந்த யுக்தியைக் கையாளக்கூடாது?' இவ்விதம் தம்மையே கேட்டுக் கொண்டார் பிரசங்கியார்.

'கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு ஏன் நெய்க்குத் திரிய வேண்டும்?'

ஆம், அதுதான் சரி.

தலையில் தராசுடனும் - பழைய கடுதாசுடனும் அவ்வழியே வந்துகோண்டிருந்த நபரிடம்,

'பேப்பர் கிலோ எவ்வளவு?' என்றார்.

'ஒரு ரூபாய்' என்றார், பேப்பர் வியாபாரி.

தோல்பை துவண்டது.

மூன்று ரூபாயைக் கைநிறைய எண்ணிக்கொண்டு அந்த வரவேற்கப்படாத விருந்தாளி, முனியாண்டி விலாஸ் ஓட்டலை நோக்கி நடந்தார்.

குறிப்பு : 1. ஓய்வூதியம் பெறாத 1950களில் உபாத்திமாரும், உபதேசிமாரும் பட்ட பாடுகளை இக்கதை படம் பிடித்துக் காட்டுகிறது.

2. 1959, 'வாலிபர் தோழன்' இதழிலும், 1971 ஆகஸ்ட் "நூறு ஜீவனுள்ள கதைகள்" என்ற நூலிலும் பிரசுரமான கதை.

பட்டுப் பாவாடை

நத்தும் கிராமத்தில் நல்லம்மாள் குடும்பம், 'வெந்ததைத் தின்போம், விதி வந்தால் சாவோம்' என்றெண்ணும் வெந்துயரக் குடும்பம். பூர்வீகக் கிறிஸ்துவர்கள் தாம். அவள் கணவன் செல்லத்துரை கடைசி முறையாகக் கொழும்பிற்குப்போய் நான்கு வருடங்கள் முடிந்து விட்டன. கடந்த இருபது ஆண்டுகளாகக் கொழும்பிற்கும் தமிழ்நாட்டிற்கும், மாறி மாறி ஆண்டுமாறியாக அலைகிறார்; கையில் நாலு காசு சேர்ந்தபாடில்லை.

நான்கு பிள்ளைகளையும், நல்லம்மாள் மாடாய் உழைத்து வளர்த்தாள். ஒரு மாதத்திற்கு முன்பே 'நாளை புறப்படுகிறேன்' என்று கடிதம் வந்துவிடும். எழுட்டுக் கொழும்புப் பெருட்கள் தவிர நூறோ, இருநூறோ கொண்டு வருவார். ஒன்றிரண்டு மாதங்கள் அனுபவித்து விட்டு, கப்பல் பட்டணத்திற்குக் கையிலுள்ள கடிகாரத்தையும், கொழும்புக் குடையையும் விற்று விட்டு கொழும்புக்கு ஓடி விடுவார்.

கொழும்பில் தேத்தண்ணீர் கடைகளுக்கு அடுப்பு எரிக்க சிரட்டைக்கரி போடுவது அவரது தொழில். அதில் ஓரளவு மிச்சமுண்டு. ஆனால் அனைத்தையும் சூதாடி இழப்பதாகக் கேள்வி. கொழும்பில் ஏற்பட்ட கொடுமையான வெள்ளத்திற்குப் பிறகு (1957) அவரிடமிருந்து கடிதமோ, பணமோ எதுவும் கிடையாது. அவர் இருந்த கண்டிநகர்ப் பக்கம் வெள்ளச்சேதம் அதிகம் என்று பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தன.

பாவம், நல்லம்மாள் பிள்ளைகளுக்காக உயிர் வாழ்ந்தாள்; கடின உழைப்பால் அவள் உடல் உடைந்த ஓட்டைப்போல் ஒட்டிப்போயிற்று. ஒவ்வொரு முறையும் அவள் புருஷன் கொழும்பிலிருந்து வந்து போகும்போது ஒரு பிள்ளைச் செல்வத்தைத் தந்துபோவார். செல்லத்துரையின் செல்வம் இதுவே!

இரண்டு பெண், இரண்டு ஆண். தாய்க்குத் தலைமகள் தானியேல் சீனி மிட்டாய் விற்றுத் தினம் நாலணா கொண்டு வருவான். அடுத்த பையனுக்கு எட்டு வயது. கடைசி இரண்டும் பெண் குழந்தைகள். கடைக்குட்டி குழந்தைக்கு நான்கு வயதாகிறது. செல்லத்துரை சிலோனுக்குப்போன ஆறாவது மாதம் பிறந்த குழந்தை. அவள் பெயர் இரத்தினம். பிறந்த மேனியாய், தூசிபடிந்த கையாய், புழுதியில் புரண்டு திரியும். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் நாட்களைக் கழிக்கும். அவள் தன் பிள்ளைகளின் ஆடையணிகளைப் பற்றிக் கவலைப்பட முடியுமா?

2

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இன்னும் இரு தினங்கள் கூட இல்லை. தங்கள் தகுதிக்குத் தகுந்தபடியெல்லாம் வீடுகளை அலங்கரித்தனர். கோவிலுக்கு மேளக்கச்சேரியும், வாணவேடிக்கையும் வருவதாகக் குழந்தைகள் குதூகலத்துடன் பேசிக்கொண்டனர். பெண் பிள்ளைகள் வளையல் போடுவதிலும், கோடி உடுப்புகளைத் தோழிகளிடம் காட்டி மகிழ்வதிலும் முனைந்திருந்தனர். நல்லம்மாள் மட்டும் எதுவும் தோன்றாமல் ஏங்கிய உள்ளத்துடன், கலங்கிய கண்களுடன் பண்டிகையை எதிர் பார்த்தாள்.

இவ்வருடம் மழை குழையடித்து விட்டது. புன்செய் பயிர்கள் காய்ந்து கருகி விட்டன. உழைப்பை மட்டும் நம்பி வாழும் மக்கள் முகத்தில் மலர்ச்சி இல்லை. நல்லம்மாளுக்கு யார் கடன் கொடுப்பார்கள்? அவளுக்குக் கடனே தேவையில்லை. யாராவது இரண்டு நாட்களுக்கு வேலை கொடுத்தால் அதுவே போதும்.

கடந்த மாதம் முழுவதும் சோளக்கஞ்சிதான். பண்டிகையன்றாவது பிள்ளைகளுக்கு நெல்லுப் பருக்கை கொடுக்க வேண்டாமா? அவளின் ஏமாற்றம் நிறைந்த கண்கள் சிலவேளைகளில் ‘தபால்காரன் தன்னை நோக்கி வரமாட்டானா?‘ என்று தேடும்; மறுகணம் கண்ணீரைக் கொட்டும்.

கொழும்பில் ஏற்பட்ட கொடிய வெள்ளத்தில் அல்லது அதைத் தொடர்ந்து அங்கு நடந்த மொழிக் குழப்பத்தில் உயிருக்கு ஏதாவது.... இப்படி நினைக்கும் போதே அவள் கண்கள் குளமாய்ப் பெருகின.

3

அன்று இறைவன் பிறப்புப் பண்டிகை, தலைமகன் தானியேல் ஐந்தாறு கிராமங்கள் சுற்றி சீனிமிட்டாய் விற்றுவிட்டு நாலணா மிச்சம் கொண்டு வந்தான். சோளம் வாங்கிக் குத்தி சமைத்துச் சோறு போட்டாள்.

கோவில் மண்டபத்தில் கொட்டு அடித்ததுதான் தாமதம், குழந்தைகள் தங்கள் கோடி உடுப்புகளை மாட்டிக்கொண்டு கோவிலுக்குக் கிளம்பினர். மேளம் வந்த நேரத்திலிருந்துதானே குழந்தைகளுக்குப் பண்டிகை ஆரம்பிக்கிறது?

ஓய்வுபெற்று சொந்தக் கிராமத்தில் வந்து சகல வசதிகளோடு குடியிருக்கும் டிப்டி கலெக்டர் தேவதாசின் பேத்தி மேரியும், இரத்தினமும் தெருவில் நல்ல பழக்கம். மேரிக்கும் நான்கு வயதுதான் இருக்கும். அவள்

கட்டிக்கொண்டு வந்திருந்த நைலான் லேஸ் கவண் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது. புழுதி மயமாய் பிறந்த மேனியாய் நிற்கும் இரத்தினத்திற்கு அவள் பக்கம் நெருங்கவே அச்சமாய் இருந்தது. அவள் உடுப்பைப் பிடித்துப் பார்க்க இரத்தினத்தின் விரல்கள் துடித்தன. ஏதோ கூச்சத்தால் அவள் தன் கண்களை மூடிக்கொண்டாள்.

பட்டுப் பாவாடைகள், ஜப்பான் சில்க்குகள், ஜரிகை ஜாக்கட்டுகள், கர்நாட்டிக்துணிகள், பாப்ளிங் சர்ட்டுகள்.... இத்தியாதி கோடி உடுப்புகள் முரமுரத்தன. கெட்டி மேளம் முடுக்கி முழங்கின.

இரத்தினம் வீங்கிய முகத்தோடு வீட்டிற்கு ஓடினாள். ஏங்கிக் கொண்டிருந்த தாயிடம் போய் சிணுங்கினாள். தாயின் ஐந்து விரல்களும் இரத்தினத்தின் முதுகில் அப்படியே பதிந்தன. எஞ்சியிருந்த கொஞ்சம் சோளக்கஞ்சியையும் குடித்துவிட்டு மீண்டும் நடையைக் கட்டினாள், இரத்தினம்.

பூப்போட்ட பட்டுப்பாவாடைகள்... எத்தனை நிறத்தில்... எத்தனை விதத்தில் .... அடேயப்பா.... அனைத்தும் அவளுக்குப் பூதாகாரமாகக் காட்சி தந்தன.

இரத்தினம் தன் வீட்டிலிருந்து கிறிஸ்தவக் கோவிலுக்குப் போகும் வழியில் ஓர் இசக்கியம்மன் கோவில் இருக்கிறது. அதைத் திடீரென்று பார்த்த அவள் பிரமிப்பும், பூரிப்பும் நிறைந்து நின்றாள். இசக்கியம்மனுக்கு மிக அழகான ஒரு பட்டுப்பாவாடை கட்டி, சந்தனம் தெளித்து, செந்தூர்க்கம் பொட்டும் வைத்திருந்தது. யாரோ நேர்ச்சையாக அன்றுதான் கட்டியிருக்க வேண்டும். அந்தப் பட்டுப்பாவாடையிலுள்ள பூக்கள் மூன்று நிறங்களில் ஒளி வீசின.

அங்கு யாருமில்லை. அதைப்பற்றிக் கவலையுமில்லை. இரத்தினம் பக்கத்தில் ஓடினாள். பாவாடைச் சுருக்கை இழுத்தாள். தன் இடப்பில் சுற்றிக்கொண்டு நேரே கோவிலுக்கு ஓடினாள். எல்லாக் குழந்தைகளும் ஊமைக் குழலை வேடிக்கை பார்ப்பதை விட்டு இரத்தினம் கட்டியிருந்த பட்டுப்பாவாடையை வேடிக்கை பார்த்தனர். நைலான்லேஸ் மேரி, பட்டுப்பாவாடை இரத்தினத்தையும் விளையாடச் சேர்த்துக்கொண்டாள். இரத்தினத்திற்குப் பரம திருப்தி.

4

விடிந்தது, ஊரில் ஒரே பரபரப்பு. 'இசக்கியம்மன் பட்டுப்பாவாடையை யாரோ உரிந்து கொண்டு போய்விட்டார்கள் - வேண்டுமென்று செய்த வேலை - நாத்திகத்தாரின் கொழுப்பு'- கிறிஸ்து பிறப்பின் பண்டிகையன்று இந்தக் கேவலம் நடந்து விட்டதால், இசக்கியம்மன் பக்தர்களுக்கு ஆத்திரம் அதிகமாயிருந்தது. கோபம் தலைக்கேறியது. பக்தி என்பது எல்லோருக்கும் பொதுதானே?

விஷயம் தெரிந்த நல்லம்மாள் தர்மகர்த்தாவின் காலை பிடித்துக் கெஞ்சி வேண்டினாள். 'குழந்தை உடுத்தி விட்டதால் துணி தீட்டாகிவிட்டதென்று' பட்டுப்பாவாடையை வாங்க மறுத்து விட்டார்கள். யேசுவின் அடியாளான நல்லம்மாள், 'சாமிக்குக் கட்டியதைத் தன் பிள்ளை கட்டக்கூடாதென்று' அதைத் தூக்கி எறிந்து விட்டாள்.

இசக்கியம்மனும், இரத்தினமும் நிர்வாணமாயினர்.

1. முதலில் பிப்ரவரி 1959 'வாலிபர் தோழன்' இதழில் வெளியானது.
2. 1971 - நூறு ஜீவனுள்ள கதைகள் என்ற நூலிலிருந்து எடுத்தது.
3. சென்னை - கருத்தரங்குகளில் வெகுவாக விவாதிக்கப்பட்டு, பாராட்டும் பெற்ற கதையாகும்.



முரண் தொடை

முதுகில் தொங்கிய மூட்டையை தூக்கி எறிந்தாள் சுகுணா.

'கான்வெண்ட் பாடங்கள் ஒரு கழுதைச்சுமை, பாவம், குருவி பனம் பழத்தைச் சுமக்கிறது.' என்று தாத்தா முனகியவாறே டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்.

பள்ளி அசடுகள் தீர, முகம் கழுவி-பவுடர் போட்டு முகம் மலர்ந்து வந்த சுகுணா தாத்தாவை அன்புடன் அணைத்தவாறு சோபாவில் தொப்பென்று விழுந்தாள்.

மெட்ரிகுலேஷன் பள்ளியில் மூன்று படிக்கும் சுகுணா படு சுட்டி, பயங்கர அறிவு, மண்டை முழுசும் மூளை, வாயில் ஆங்கிலம் துள்ளி நடம் புரியும்.

'டி.வியில் செய்தி ஓடிக்கொண்டிருந்தது. பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள், இலவச பாடப்புத்தகங்கள் இலவச முட்டை, இலவச பஸ் பாஸ்...'

'போரடிக்கு தாத்தா.... இங்கிலீஸ் மீடியம் பிள்ளைகளுக்கு ஒண்ணும் இலவசம் கிடையாது...' என்றவாறே டி.வி. பக்கம் போகவும் 'நுழைவுத்தேர்வு ரத்து' என்ற செய்தியை வாசிக்கவும் தாத்தா கைதட்டி வரவேற்றார்.

'போங்க தாத்தா, அதெல்லாம் மண்டுப்பிள்ளைங்களுக்கு நல்ல செய்தி எங்களுக்கெல்லாம் கெட்ட செய்தி' என்று கூறியவாறு சேனலை மாற்றினாள்.

'கும், கும்... டமால் .. டுமீல்' முட்டைகள் உருண்டு உடைந்தன. பாத்திரங்கள் பறந்தன். நாற்காலிகள் எட்டுக்கால்களாக உடைந்தன...

'ஐய்... ஐய்.... ஜாலி கண்ணா ஜாலி....' என்று கைகொட்டிக் குதித்தாள்.

சுகுணாவிற்கு சண்டைப்படம் ரொம்பப் பிடிக்கும். கதாநாயகன் வேட்டி அவிழாமலே எட்டுபேரை அடித்து வீழ்த்தினான். வில்லன் விழுந்து விழுந்து எழுந்தான். கும்மாங்குத்தில் ஒரு பல்கூட உடையாமல் வாயிலிருந்து சிவப்புமை இரத்தம் சிந்தியது.

'அயோக்கியப் பசங்க, சண்டை போட்றானாம் - ஊர் உலகத்தை ஏமாத்துறான்க' தாத்தா தம் ஆதங்கத்தைக் கொட்டினார்.

சுகுணா எழுந்தாள். 'தாத்தா...' என்று நீட்டி முழக்கி சுட்டு விரலால் அழகு காட்டி, 'இவங்க, நீதிமான்கள் தத்தா' என்றாள்.

'நீதிமான்களையே கொச்சைப் படுத்துறீயே குட்டி - இங்கிலீஷ் மீடியம் இப்படித்தான் இருக்கும் ... சண்டைப் படத்துல நடிக்கிற இவங்க அயோக்கிய ராஸ்க்கல்கள் ...' தாத்தாவின் மீசை துடித்தது.

'தாத்தா...' என்று நளினம் காட்டி எழுந்த சுகுணா, 'இவங்க நீதிமான்கள்ன்னு நா சொல்லலை தாத்தா... உங்க பைபிள் சொல்லுது. நீதிமொழிகள் புத்தகம் இருபத்து நாலாம் அதிகாரம், இருப்பத்தாராம் வசனத்தை நான் வாசிக்கிறேன் தாத்தா'

'நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் எழுந்திருப்பான்'.

'இந்த வாரம் சண்டே கிளாஸ்ல மனப்பாட வசனம் தாத்தா, இவங்க எத்தனை தடவை செத்து விழுந்தாலும் எழுந்திருப்பாங்க தாத்தா' என்று சொல்லி டீவியை சத்தமாக வைத்தாள்.

தாத்தாவிற்கு ஒரே சிரிப்பு, அவரின் கட்டுமானப் பற்கள் குலுங்கி ஆடின.

ஆயினும் கவலை கொண்டார்.

சினிமாச் சண்டையையும், பைபிள் வசனத்தையும் ஒன்றாகக் குழப்பி அவள் பிஞ்சு உள்ளத்தில் முரண் தொடையாகப் பதிந்திருக்கிறதை நினைத்து தாத்தாவின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் சொட்டுச் சொட்டாய் விழுந்தன.

அக்டோபர் 2005 'விண்ணரசு'

சுனாமி... சுவாமி...

சுனாமி! என்றொரு புதுச்சொல் தமிழ் அகராதியினுள் புகுந்து விட்டது. அந்தச்சொல் ஒரு சிம்மசொப்பனம் போல் ஆகிவிட்டது.

கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடி முடித்து, உண்டு களித்து உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் சுனாமி எனும் பூதம் சீறியது.

26.12.2004 அதிகாலை 6.15 மணிக்கு சுமத்ரா தீவின் ஆழ்கடலில் உருவெடுத்த கடல் கொந்தளிப்பு ஆவேசமாகத் தாக்கியது. அலைகள் மலைபோல் எழுந்து மக்களை நிலைகுலையச் செய்தது.

இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, அந்தமான் ஆகிய கடலோரப் பகுதிகளில் முட்டி மோதி வெடித்த பேரலைகள் இலட்சத்திற்கும் அதிகமான மக்களை விழுங்கிச் சுருட்டின.

'பிள்ளைப் பேற்றை தடுக்காவிட்டால் நாடு இடங்கொள்ளாமல் போய்விடும்' என்று ஒப்பாரி வைத்த சில அறிவாளிகள் வெட்கி நாணினார்கள்.

அந்தமான் பக்கமுள்ள எட்டு குட்டித் தீவுகள் கடலில் மூழ்கின. இன்னும் ஆபத்துகள் தொடர்கின்றன.

குமரிக்குத் தெற்கே கடற்கோளினால் லெமோரியாக் கண்டம் அழிந்துவிட்டது என்பதைப் பலர் இப்பொழுதுதான் நம்பினர். கடற்கரை கிராமங்களில் தப்பியோடியவர்கள் உணவில்லாமல், உடையில்லாமல் உறைவிடமில்லாமல்... ஐயோ அந்தக் காட்சி நெஞ்சைப் பிளந்தது.

கடற்கரை கிராமங்களில் தோண்டத் தோண்டப் பிணங்கள்... நினைக்கும் போதே இதயத்தைப் பிழிந்தது. அந்தமான், நிக்கோபார் மக்கள் அதிர்ச்சியில் துடித்தனர்.

நிவாரண உதவிகள் நிறைந்தன.

நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

வீண் பேச்சுகளுக்குக் குறைவில்லை. வாய்கிழியப் பேசினர்.

'கடைசிக் காலம், அழிவுக்காலம்' என்று ஒரு பெரியவர் அங்கலாய்த்தார். 'பூமி அதிர்ச்சிகள் பல இடங்களில் உண்டாகும்' என்று மத்தேயு நற்செய்தியாளர் சொல்கிறார் என்றார் அடுத்த ஒருவர்.

கடல் கொந்தளிப்பு சம்பந்தமான வேத வசனங்களை பைபிளிலிருந்து பாராமல் சொன்னார்கள்.

மரணம் நிச்சயம், மறுமை அதைவிட நிச்சயம் என்று பிறிதொருவர் தத்துவம் பேசினார். 'உலகம் மாறும், ஒழியும்; ஆனால் கடவுள் மட்டும் மாறாதவர்' என்று இன்னொருவர் வேத உபதேசம் சொன்னார்.

தப்பிப்பிழைத்தவர்களில் சிலர் 'அவனையன்றி ஓர் அணுவும் அசையாது' என்று தங்களுக்குத் தாங்களே வேதாந்தம் பேசினர்.

'பூமி தன் அச்சிலிருந்து விலகி விட்டதாம். இனி அடிக்கடி துன்பம்தான்', என்று ஒருவர் அடித்துப்பேசினார்.

இதற்குப் பரிகாரம்தான் என்ன?

'பேரழிவை அறிவிக்கும் கருவி வருகிறதாம்' என்றார் ஒருவர் குதூகலமாக. 'கடலோரத் தடுப்புச் சுவர் கட்டப்போகிறார்களாம்' என்றார் அரசியல்வாதி ஒருவர்.

இவைகளுக்கு மத்தியில் ஒரு செய்தி என் உள்ளத்தை நெருடியது.

நாகப்பட்டிணம் கடற் கரைக்கு ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் நீண்ட குச்சிக்கம்போடு வந்தான்.

'சுவாமி... எங்கப்பாவைக் கொண்டுவா என்று சொல்லி கடல் தண்ணீரை ஓங்கி ஓங்கி அடித்தான். கதறி அழுதான். அப்பா... வா.. என்று சொல்லி கேவி கேவி அழுது ஏங்கினான்.

சுனாமி என்று சொல்லத் தெரியாமல் சுவாமி... சுவாமி என்று கூவியிருக்கிறான்.

பார்த்தவர்கள் பரிதாபமாகக் கண் கலங்கினர்.

என்னதான் நிவாரணங்கள் செய்தாலும், தந்தையைப் பறிகொடுத்த அந்தச் சிறுவனுக்கு யார் என்ன பதில் சொல்ல முடியும்?

உடைமை இழந்தவர்களுக்கு அரசு உத்தரவாதம் அளிக்கலாம். உயிரை இழந்து தவிப்பவர்களுக்கு யார் உத்தரவாதம் அளிப்பர்.

அப்பா, அம்மா என்று அழும் சின்னஞ்சிறு மழலைகளின் குரல் உள்ளத்தை உடைக்கிறது.

சிறுவன் கூவிக் கதறினானே 'சுவாமி' என்று... அவர்தான் பரிகாரியாகிய கடவுள். கடலுக்கு அரண் கடவுள்தான்.

மனிதநேயம் பேண விழைவோருக்கு - மானுட இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள உறுதுணையாக நிற்போருக்கு, சுவாமியும் நின்று உதவுவார். சுனாமியும் விலகிப்போம்.

சுனாமி... சுவாமி...

'மனைதீபம்' 2005

நொண்டி ஆட்டுத் திரடு

முன் வரலாறு

ஊர்களின் வரலாற்றுக் கதைகளை எழுதுவதில் எனக்கோர் தனி இன்பம். அதன் சுவையே அலாதி. சில ஊர்களின் பெயர்களிலிருக்கும் பின்னணிக் கதைகளையும் நினைத்து நினைத்து மகிழ்வேன். அதன் சுக அனுபவமே வேறு.

குறிப்பிட்ட ஊர்களுக்கு நேரில் சென்று வயது முதிர்ந்த பெரியவர்களிடம் ஊர் வரலாறு பற்றி வினவியும், துழாவியும் கேட்டு எழுதினேன்.

முதலில் நூறு ஊர்களையும், அடுத்து நூறு ஊர்களைப் பற்றிய செய்திகளையும் திரட்டி 'ஊரும் பேரும்' என்ற தலைப்பில் இரு தொகுதிகளாக இரு நூற்கள் வெளியிட்டேன்.

அதனால் நாட்டார் வழக்காற்றியல்களும், நாடோடிக் கதைகளும் நிறையக் கிடைத்தன. மேலாதிக்கவாதிகளின் கொடுமை தாங்க முடியாமல் கிறிஸ்தவம் தழுவிய பல ஊர்களின் வரலாறுகளும் கிடைத்தன.

ஊரும் பேரும் மூன்றாவது தொகுதிக்காக 'மானூர்' என்ற ஊர் பற்றி எழுத விழைந்தேன்.

மானூர், வட திருநெல்வேலியில் சங்கரன்கோவில் செல்லும் பெரும்பாதையில் - நெல்லையிலிருந்து வடக்கே பத்துக்கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஊர்.

மானூருக்குச் சென்று முதியோர் சிலரைச் சந்தித்து உரையாடினேன். மானூர் பேர்காரணம் பற்றி அறிந்து கொண்டேன்.

அதன் பிறகு - நூறு ஆண்டுகளுக்கு முன்பு மானூர் குளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் செழிப்பு பற்றிச் சொல்ல வந்த நபர் ஒரு சுவையான செய்தியைச் சொன்னார். அது இனிக்கும் கதை போன்றிருப்பதினால் அதனை இங்கு எழுதுகிறேன்.

பின் வரலாறு

மானூர் குளம் மிகப்பெரியது. குளத்தின் மத்தியில் தீவு போன்று ஒரு பெரிய திரடு உள்ளது. அந்த மேட்டுத் திரட்டில் புற்களும், செடிகளும் இலை தளைகளும் செழித்திருக்கும்.

அந்தக்கால கூலி விவசாயிகளில் சிலர் இப்படிச் சொல்வார்களாம்:

'மானூர் குளமிருக்கு, மாவிடி பண்ணையார் இருக்கார், எங்களுக்கென்ன கவலை' என்பார்களாம். வயித்துக் கஞ்சி கிடைத்தால் போதும் என்கிற பிற்போக்காளார்கள் இன்னும் நாட்டில் நிறைய இருக்கிறார்கள்.

அந்த வருடம் குளத்தில் தண்ணீர் குறைவாக இருந்தது. - ஒரு நல்ல உள்ளூர் மேய்ப்பன் நூற்றுக்கும் அதிகமான தன் ஆடுகளை மேட்டுத்திரட்டில் அமர்த்தி மேய்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது இடிமின்னல்களுடன் கூடிய பெருமழை பிடித்தது.

ஆடுகளை விரைவாகக் கூட்டிச் சேர்க்கக் குரல்கொடுத்தான். ஆடுகள் மேய்ப்பன் குரலுக்குக் கீழ்ப்படிந்தன. ஆனால் இடியின் அதிர்ச்சியில் ஆடுகள் மிரண்டன. மின்னல் கண்களைப் பறித்தன. பேய் மழை கொட்டியது.

ஒரு நொண்டி ஆடு சினையாக இருந்தது. அதற்காக மேய்ப்பன் பரிதாபப்பட்டான். அதே வேளையில் இன்றுதான் பிறந்த மூன்று ஆட்டுக்குட்டிகள் நடக்கத் திராணியற்று விழுந்து கிடந்தன.

இருட்ட ஆரம்பித்தது. குளத்தில் தண்ணீர் கிடுகிடுவென ஏறினது. மேய்ப்பன் மூன்று இளமரிகளையும் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டான். பிறிதொரு சினை ஆட்டை இரு கைகளிலும் மார்போடு அணைத்துக் கொண்டான்.

மழைக்குள் ஆடுகளை ஓட்டிச்சென்று பாதுகாப்பாகப் பட்டியில் அடைத்தான். நொண்டி ஆடுமட்டும் இல்லை.

மேய்ப்பன் மிகவும் களைப்பாக இருந்தான். இரு கால்களிலும் மூன்று முட்கள் குத்தி ஒடிந்திருந்தன. ஆடுகளை பத்திரமாகக் கொண்டு சேர்த்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தாலும் நொண்டி ஆடு தப்பி விட்டதே என்று வருந்தினான். அந்தி மழை அழுதாலும் விடாது என்றபடி விடிய விடிய மழை கொட்டியது.

குளம் நிறைந்து மறுகால் ஓடியது. ஆயினும் மேட்டுத்திரடு மட்டும் நீரில் மூழ்கவில்லை.

விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், நெற்பயிர் அறுத்தல் என்று காலங்கள் மாறி மாறி வருடங்கள் உருண்டோடின.

மேய்ப்பனின் ஆடுகள் பெருமந்தையாகப் பலுகிப்பெருகின. நாடுசெழித்துக் கொழித்தாலும் நாட்டாமை ஆதிக்கமும், பண்ணைக் கொத்தடிமைத் தனங்களும் காட்டு முள்மரங்கள் போல்மலிந்து கிடந்தன.

"காடு விளைஞ்சென்ன மச்சான் - நமக்கு
காலும் கையும்தான மிச்சம்"

என்று பட்டுக்கோட்டையார் எழுதிய வரிகளை, சினிமாவில் பாடிய மாதிரி விளைஞ்சாலும் வறுமைதான் மிஞ்சி இருக்கு.

மேய்ப்பன் அவ்வப்போது 'நொண்டி ஆடு அநாதையாகச் செத்திருக்கும்' என்று நினைத்து அழுவான்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு குளம் சிறிது வற்றியது. மேய்ப்பன் கழுத்தளவு தண்ணீரில் நொண்டி ஆட்டை நினைத்து நீந்திச் சென்றான்.

திரட்டு மேட்டில் அவன்கண்ட காட்சி அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

நொண்டி ஆட்டின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளுமாக ஐம்பத்தொரு ஆடுகள், நொண்டி ஆட்டைச்சுற்றிச் சூழ்ந்து மேய்ந்து கொண்டிருந்தன.

தன் மேய்ப்பனைக் கண்ட நொண்டி ஆடு ஆனந்தக் கண்ணீர் சிந்தியது. மேய்ப்பனை நக்கி, வருடி தன் அன்பைக் காட்டியது. மேய்ப்பனும் ஆட்டை அணைத்துக் கொண்டு, 'நான் உன்னை அநாதையாக விட்டுச் சென்றேன். நீயோ ஒரு மந்தையாகப் பெருகி வாழ்ந்து காட்டி விட்டாய்' என்று கூறி குதூகலத்தில் குலுங்கிக் குலுங்கி அழுதான். இப்பகுதியில் 'நொண்டி ஆட்டுத் திரடு' என்பது இன்றும் பெருவழக்காக உள்ளது.

பெரியவர் சொன்ன சுவையான செய்தி கேட்டு இன்பப் பெருமூச்சு விட்டேன்.

குறிப்பு : மானூர் சென்று கள ஆய்வு செய்த நாள் : 26.2.2005
தகவல் தந்த பெரியார் - சொள்ளமாடன், வயது 77

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு...

கடல் கொந்தளிப்பு!...

தம்பி, சாமு! உனக்கு எத்தனை மட்டம் சொல்றது? கடினமான கப்பல் பயணம். உன் விளையாட்டுப் பொருள்களை மாமா வீட்டில் வைத்துவிடு. அவைகளை இப்பொழுது அள்ளிச் சுமக்க முடியாது. தாத்தா வரும்போது கொண்டு வருவாங்க. நீ அடம்பிடித்து அழுவது சரியில்லை' என்று கண்டித்தும் நயந்தும் வேண்டினாள் சாராம்மாள்.

ஏசா தாத்தாவும், எஸ்தர் பாட்டியும் மகளின் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பெத்தலேகம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சாராயின் கணவன் தர்சீசு பட்டணத்தில் பட்டாடை வியாபாரம் செய்கிறார். எனவே அங்கேயே குடும்பமாக குடி இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்பது வயதுள்ள சாமு என்ற சிறுவன் இருக்கிறான். அவனையும் கூட்டிக் கொண்டு பெத்லேகேமிலுள்ள தங்கள் பெற்றோர் வீட்டிற்கும் ஆயிரம் ஆடுகளுக்கு மேய்ப்பனான தன் தமையன் வீட்டிற்கும் விருந்திற்கு வந்திருந்தார்கள். மூன்று மாதங்கள் முடிந்த பிறகு தர்சு பட்டணத்திற்குப் புறப்பட்டார்கள். வட கீழ்த்திசையிலிருந்து நேரே மேற்கு திசை நோக்கிச்சென்று யோப்பா என்னும் துறைமுகத்தில் கப்பல் ஏறவேண்டும்.

சாமுவிற்கு, அவனின் மாமா எரிகோச் சந்தையிலே வாங்கிக் கொடுத்த அழகான மரக்குதிரை, பொம்மைகள், விலையேறப்பெற்ற விளையாட்டுச் சாமான்கள் ஏராளம் இருந்தன. அவை அனைத்தையும் எடுத்துச்செல்ல வேண்டும் என்று அழுதான்.

அம்மா அன்போடு கூறினாள்.

'தம்பி ராஜா, சீக்கிரம் குடிமதிப்பு எழுதும் நாள் வருகிறது. அப்பொழுது அப்பாவும் நம்மோடு வருவார்கள். இப்பொழுது தாத்தா வீட்டில் உன் விளையாட்டுச் சாமான்கள் பத்திரமாய் இருக்கட்டும், பிறகு வரும்போது எடுத்துச்செல்லலாம், என்னடா கண்ணு...'

'ஆமா, முடியாது, பிறகு எனக்கு அங்க விளையாட வேண்டாமா?' என்று காலை கையை உதைத்து கொண்டு சாமு குமுறினான்.

'சாமு ராஜா... அம்மா சொல்வதைக்கேள் - உன் விளையாட்டுப் பொருள்கள் யாவும் மிகவும் கனமுள்ளவை. மேலும் கப்பல் பிரயாணத்தில் இவைகளை சுமந்து செல்வது கஷ்டம். கேளுடா தம்பி' என்று கொஞ்சலுடன் கூறி அவனைத் தூக்கி அணைத்தாள் தாய்.

சாமு, அம்மா பிடியிலிருந்து தப்பி ஓடி கீழே விழுந்து புரண்டு அழுதான். அவனின் கோடி உடுப்புகள் அழுக்காயின.

'கீழ்ப்படியாத பிள்ளையை கடவுள் தண்டிப்பார்' என்றாள் பாட்டியம்மா.

'எனக்கு விளையாட்டுச்சாமான் வேண்டும் - எல்லாத்தையும் கொண்டு போவேன்' என்று ஒற்றைக்காலில் நின்றான் சாம்.

புறப்படவேண்டிய நேரமாயிற்று.

அம்மா எரிச்சலுடன் இரைந்தாள் :

'அழுகையோடு கூட்டிட்டுப் போனாலும் ஆக்கமாய்தான் இருக்கும். அவன் இஷ்டம் போல் செய்யட்டும். இவ்விதம் கூறிய அம்மாவின் கண்களில் கண்ணீர் சொட்டியது. பெரும் சுமையுடன் துறைமுகப்பட்டினம் போய்ச் சேர்ந்து கப்பல் ஏறினர்.

கப்பல் புறப்பட்டது. நடுக்கடலுக்குச் சென்ற சிறிது நேரத்தில் 'ஐயோ அம்மா... கடவுளே...' என்ற அலறல் ஒலி எங்கும் எழுந்தது. பேய்க்காற்று கப்பலை அங்கும் இங்கும் புரட்டியது. பயங்கரக் காற்றினால் கடலில் கொந்தளிப்பு எழுந்தது. மாலுமி வந்து எச்சரிக்கை கொடுக்கிறான்.

'கப்பலின் பாரத்தைக் குறைக்க உயிரையும் உடலையும் தவிர மீதி அனைத்தையும் கடலில் அள்ளி எறியுங்கள்.' அவனுடைய முரட்டுக் குரல் மூர்க்கமாக ஒலிக்கிறது.

அதோ ஒருவர் தனக்கு இஷ்டமான துணிமணிப் பெட்டியைக்கூட தூக்கி எறிகிறார். ஐயையோ ஒரு அம்மாள் தன் நகைப்பெட்டியை எறிய வேண்டிய நிர்பந்தநிலை. அன்று இரவுப் போதிற்குரிய கட்டுச் சாதங்களையும் கூட தூக்கி எறிகிறார்கள்.

அந்தோ பரிதாபம்!

அருமருந்தையொத்த சரக்கெல்லாம் ஆழ்கடலில் அமிழ்ந்தன.

பேய்க்காற்று ஓய்ந்தபாடில்லை. கடலின் குமுறல் குறைந்த பாடில்லை. கப்பல் உடைந்து அல்லது அமிழ்ந்து அனைத்து உயிர்களும் நாசமாய்விடுமோ என்று அஞ்சினர்.

மாலுமி மீண்டும், சுற்றி வந்தார் - அடித்தட்டில் தூங்கிக் கொண்டிருந்த யோனாவை எழுப்பி- இறைவனை வழிபடும்படி கூறிவிட்டு கோபத்தில் வந்து கொண்டிருந்தார். வரும்போதே சாமுவின் விளையாட்டுச் சாமான்களை கண்டு குடல் கொதித்துக் குமுறினார். 'என்னம்மா நீ, ஆடைகளையும் அணிகலன்களையும் அள்ளி எறியும் போது உன் பிள்ளை இன்னும் இந்த விளையாட்டுச் சாமான்களை வைத்திருக்கிறான்' என்று கூறி அவன் கையிலிருந்து பிடுங்கி அனைத்தையும் கடலினுள் எறிந்தார். கடவுளை வணங்கும்படி யாவரையும் கெஞ்சி வேண்டினார்.

சாமு வீறிட்டு அழுதான்.

இன்னும் காற்று நின்றபாடில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாவங்களை நினைத்து கடவுளை நோக்கி அழுது வேண்டினார்கள்.

பலரின் ஆலோசனைப்படி இறுதியில் சீட்டுப் போடவே, சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தத. காரணம் கேட்டுத் துருவினர். 'யோனா என்ற ஒரு மனிதன், "கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்படியாமல் விலகி ஓடுகிறான்". என்ற செய்தி கப்பலெங்கும் பரவியது.

யோனாவோ தன்னை சமுத்திரத்தில் தூக்கிப்போடும்படி வேண்டினான்.

'பாவம் பிழைத்துப்போகட்டும், சீக்கிரம் தண்டு வலியுங்கள் ஐயா' என்று ஒரு பிரயாணி இரக்கத்துடன் வேண்டினார். உடனே காற்றும் புயலும் இன்னும் அகோரமானது, கடல் ஆங்காரங் கொண்டது.

மனித இரக்கம் யாது பயன்? கடலுக்குள் மனித முயற்சி வீண். சமுத்திரம் வெகு மும்முரமாய் மூர்க்க வெறி கொண்டது.

அனைவரும் யோனாவைச் சூழ்ந்தனர்.

"ஐயாமார்களே, இலட்சக்கணக்கான மக்களின் அழிவைத் தடுக்க கடவுள் என்னை நினிவேக்குப் போகச் சொன்னார். நான் அவர் கட்டளையை மீறி தர்சீசுக்குக் கப்பல் ஏறினேன். என்னைத் தூக்கிக் கடலில் போட்டால் தான் கடல் கொந்தளிப்பு நிற்கும்" என்று யோனா கூறினான்.

இறுதியில் யோனாவைத் தூக்கி கடலில் போட்டார்கள். காற்று நின்றது. கடல் அமைதலானது. கப்பல் கனகச்சிதமாகச் சென்றது.

'அம்மா, அம்மா கீழ்படியாத யோனாவுக்காகவாம்மா இவ்வளவு கொடிய ஆபத்து நிகழ இருந்தது?' சாமு கேட்டான்.

"ஆமாடா கண்ணு, கீழ்ப்படியாமை கொடிய பாவம்", அம்மா அவன் உச்சியைக் கோதியவாறு சொன்னாள் :

'அம்மா, இன்னொரு காற்று வந்தால் என்ன செய்வது? என் பெயருக்குச் சீட்டு விழுமே .... என்னையும் தூக்கிக் கடல்ல போடு வாங்களோம்மா... நானும் கீழ்ப்படியாமல் தானே வந்தேன்.... அம்மா அம்மா என்னை மன்னிச்சிடுங்கம்மா, நான் இனி கீழ்ப்படிந்து உங்களுக்குப் பிரியமாய் நடப்பேம்மா' என்று கூறி சாமு மனங்கசந்து அழுதான்.

"நாம் இந்த உலகத்திலிருந்து ஒன்றும் கொண்டு போக முடியாது. இருக்கும் போதே காலா காலங்களில் பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்து வாழ வேண்டும்" என்று எண்ணியவளாக,

இருவரும் முழந்தாளிட்டு நன்றிப் பெருக்கோடு வேண்டினார்கள்.

குறிப்புகள்:-

1. கதைக்கு மூலப்பொருள்:- மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய விவிலிய "யோனா" நூல்
2. தர்சீசு பட்டணம் நினிவே நகருக்கு எதிர் திசையிலிருக்கிறது.
   இது ஸ்பெயின் நாட்டில் இருந்ததாகக் கருதப்படுகிறது.
3. ஜனவரி 1970 'பாலியர் நேசன்' இதழில் எழுதியது.

நிழல் அல்ல நிஜம்

சுனாமி சுருட்டி விழுங்கிய இடங்களில் ஒன்று கடலூர் கடற்கரை.

இரண்டாயிரத்து நாலு டிசம்பர் இருபத்தாறு தென்கிழக்கு ஆசிய கடற்கரைப்பகுதிகளில் ஒரே அழுகையும் ஒப்பாரியுமாயிருந்தது. ஏன், நாடே அழுதது. பேரலைகளின் பேரழிவு பெருவாரியாக இருந்தது.

ஆயிரமாயிரம் பேர் அநாதைகளாயினர். இலட்சக் கணக்கானோர் வீடிழந்தனர். கோடாகோடி மக்களின் உள்ளம் "நம் கதி என்ன ஆகுமோ?" என்று உடைந்து நொறுங்கின.

அநேகர் அரசியல் வலை வீசினர். இன்னும் பலர் வாக்குச் சீட்டுக்காக வாயை விரிவாக்கினர். மேலும் பலர் மதச்சாயம் பூசி மானுட நேயம் பேசினர். நிவாரணப் பணிகளிலும் கரும்புள்ளிகள் விழுந்தன.

இவர்களுக்கு மத்தியில் ஒரு சினிமா நடிகர் இருளை கிழித்துக் கிளம்பும் பகலோன் போல வீறிட்டு எழுந்தார். நிழல் உலகில் வாழ்ந்தவர் நிஜ உலகிற்கு கடலூர் தேவனாம் பட்டியை நோக்கி விரைந்தார்.

ஆங்கு உடைமைகளை இழந்து தவிப்போருக்கு ஊடே ஓர் தாயின் அழுகுரல் ஓங்கி ஒலித்தது. கணவனையும், பிள்ளைகளையும் இழந்து விட்ட அவளின் ஒப்பாரியை யாரும் கேட்கவில்லை.

அந்தத் தாய் யார்?

கணவனைப் பேரலை இழுத்துச்சென்று கொன்று விட்டது. பிள்ளைகளையும் கடல் கொள்ளை கொண்டது. தாங்க முடியாத வேதனை. அனைவரையும் மறந்தாலும் நம்பிக்கையின் நட்சத்திரமாக விளங்கினானே, அந்த வாலிப மகனை மறக்க முடியுமோ?

தலையில் அடித்தாள், தரையில் உருண்டாள். தலைதெறிக்கக் கடலை சபித்து அலறினாள்.

'என் மகனே, நீ என்னைக் காப்பாற்றுவாய் என்று எண்ணினேனே, நீ மட்டுமாவது பிழைத்திருக்கக் கூடாதா?'

"ஏ.... கடலே... என் மகனை உயிரோடு கக்கிவிடு, திரும்ப எனக்குத் தந்து விடு... இல்லாவிட்டால்... என்னை கொன்று விடு.

அலறினாள், பெருமூச்சு விட்டாள்.

சினிமா உலகின் நட்சத்திரமாக விளங்கிய அவருக்கு அந்தத் தாயின் முழு மொழியும் தெரியாது. மழலைத் தமிழ் மட்டும் தெரியும்.

அந்தத் தாயின் சோகம் விளங்கியது; அவளின் தாகம் புரிந்தது.

அந்த நடிகர் தாயின் பக்கம் தாவினார், கழுத்தைச் சுற்றி அரவணைத்தார்.

மழலைத் தமிழில் மொழிந்தார்.

“அம்மா, இன்று முதல் நான் உன் மகன்” என்று சொல்லி முதுமையான அந்தத் தாயின் கண்ணீரைத் துடைத்தார்.

அந்த இளைஞன் வானத்திலிருந்து விழுந்த தேவ தூதன் அல்ல. விவேக் ஒபராய் என்ற இந்தி நடிகன்.

அவனிடம் மத வெறி இல்லை, மனித நேயமிருந்தது. அரசியல் ஆதாயம் இல்லை; அன்பு மட்டுமே இருந்தது.

நிவாரணப்பணிக்கும், நிலமைகளை ஆய்வு செய்வதற்கும் வந்தவர்கள் விழித்தார்கள், வியந்தார்கள், விக்கிப் போனார்கள்.

இது நிழல் அல்ல நிஜம்!

அந்த அன்பு உன்னதமானது.

அத்தகு அன்பே இன்று வேண்டியது.

மே-ஜூன் 2005 ‘மனைமலர்’



அன்பிற்கும் உண்டோ...?

இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸின் தற்கொலையினால் அவனது தாயும், தந்தையும் மனம் நொறுங்கிப் போனார்கள். உள்ளம் உடைந்து குமுறினார்கள்.

பகைவர்களின் பரிகாசம், நண்பர்களின் புறக்கணிப்பு, சொந்தக்காரர் களின் நிந்தை-மொழிகள்... அனைத்திற்கும் மேலாக எருசலேம் நகர் வீதிகளில் தலைகாட்ட முடியாத கொடு பயங்கர நிலை. தாங்களும் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று கூட எண்ண ஆரம்பித்தார்கள்.

வருடம் ஒன்று ஓடியது, இழந்த மகனுக்காக அழுது வடிந்து அங்கலாய்த்தார்கள். ஆறாப்புண்ணாய் சாகாமல் செத்தார்கள். யார் கண்ணிலும் விழிக்க வெட்கம். அவமானங்களை சகிக்க முடியவில்லை.

புதிதாக ஓர் எண்ணம் உதித்தது.

பக்கத்திலிருந்த ஒரு கிராமத்திற்குப் போய் யாருக்கும் தெரியாமல் அமைதியோடு வாழ நினைத்து ஓடினார்கள்.

'இந்தக் கிராமத்திலேயே மீதி நாட்களைப் போக்கி மடிந்து விடலாம்' என்றார் யூதாஸின் தந்தை.

ஒரு மாலைப்போதில் இருவரும் ஓர் ஆற்றோரம் சென்று அமர்ந்தனர்.

இருவரும் கவலைகளை அடக்க முடியாது அழுதனர். தாய், தேம்பித், தேம்பி அழுது கொண்டே சொன்னாள் : "மகனை மறக்க முடியவில்லையே. அவன் செய்ததோ பெரிய துரோகம். இன்று அவன் பிறந்த நாள். அவன் பிறந்த நாளில் நம் வீட்டில் எத்தனை ஆனந்தம்? குழந்தையாயிருக்கும் பொழுது அவன் எவ்வளவு அழகாயிருந்தான். பின் நாளில் பணக்கணக்கில் கைதேர்ந்தவனாயிருந்தானே... அவனை எப்படி மறப்பது".

உள்ளம் பதைத்து கதறிக் கதறி அழுதாள். தந்தையும் அழுது கொண்டே வாய் உளறினார் :

யூதாஸ் பிறந்த நாளில் வானத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னி மினுங்கின. அவைகள் அவனை ஆசீர்வதிப்பது போல் எண்ணி பூரித்துப் பொங்கி மகிழ்ந்தோமே. அவனது முடிவு இப்படியாகும் என்று கனவுகூட காண வில்லையே.

என்று வாய்விட்டு அழுது புலம்பினார். அவர் குலுங்கிக் குலுங்கி அழுவதைக் கண்டு மனம் சகியாத மனைவி, 'அழாதீங்க, அமைதியா இருங்க இந்தக் கிராமமாவது கிடைத்ததே' என்றாள்.

அவர்களின் அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது.

ஊரை மூட உலை மூடி உண்டா?

அந்தக்கிராம மக்களுக்கும் செய்தி தெரிந்தது. அனைவரும் அவர்களை வெறுத்தனர். காரித்துப்பினர். காட்டிக் கொடுத்த துரோகியின் பெற்றோர் என்று தூஷித்தனர். வசை புராணம் பாடினர்.

அவர்களின் மனக்கசப்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. இந்தச் செய்தி மரியாள் என்ற ஓர் அம்மாவுக்கு எட்டியது. ஒருநாள் அவ்வம்மையார் அவர்கள் வீட்டிற்குச் சென்றார்கள். யூதாசின் தாயிடம் கருணை பொங்கப் பேசினார்கள்:

'சகோதரி, இந்த ஊரில் நீங்கள் சந்தோஷமாய் இருக்க வேண்டும், இதுவே என் ஆசை', என்று அன்பு கனியச் சொன்னார்கள்.

அன்பு மொழி கேட்ட யூதாஸின் தாய் ஆறுதல் கொண்டாலும் துக்கம் தாங்க முடியாமல் மனவேதனையை தெளிவாகச் சொன்னாள்.

"அம்மா, எங்கள் மகன் யூதாஸ், அவனுக்கு ஏன் இந்த பயங்கர முடிவு? நாண்டு கொண்டு செத்தான் என்று நினைக்கும் போதே குடல் துடிக்கிறது". என்று சொல்லி வயிற்றிலடித்து அழுதாள்.

மரியாளின் உள்ளத்தை-ஓர் அம்பு ஊடுருவிப் பாய்ந்தது.

'ஆ, என் மகனைக் காட்டிக் கொடுத்த யூதாஸின் தாய்தான் இவள்...'

மரியாளிள் மனம் வலித்தது. ஆயினும் மரியாளின் உள்மனம் இப்படிப் பேசியது: இவள் என் மகனைக் காட்டிக் கொடுத்த யூதாஸின் தாய்தான். எனினும் அவளும் ஒரு தாய்தானே? ஒரு தாயின் உள்ளம் எத்தனை தூய்மையானது? என் மகனை நான் நேசித்த வண்ணம்தான் இவளும் தன் மகனை நேசிக்கிறாள்? நானும் என் மகனை இழந்தேன். இவளும் தன் மகனை இழந்தாள். இவளின் மன வேதனையை நான் தெளிவாகத் தெரிகிறேன். அந்தோ, பரிதாபம், இவளுக்கு ஆறுதல் சொல்வார் யாருமில்லையா? மகன் செய்த தவறுக்கு பெற்றோர் என் செய்வர்?

மரியாள் அவளண்டை நெருங்கினாள். அன்புடன் அரவணைத்தாள். கன்னங்களில் முத்தம் கொடுத்தாள். பின்பு அவள் தலையை வருடியவாறு

சொன்னாள் : சகோதரியே, துக்கப்படாதே, கடவுள் நமது பிதா. அவரை நம்பி அவர்மேல் சார்ந்து கொள். நம் பரம பிதா உன் கண்ணீரைத் துடைப்பார். இதை நம்பி ஆறுதல் கொள். நம் அன்பை ஒருக்காலும், ஒருவராலும் பிரிக்க முடியாது.

யூதாஸின் தாயோ இன்னும் ஆறுதல் அடையவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க அரற்றினாள். மரியாளின் கண்களில் நீர் பனித்தது. மரியாள் மீண்டும் அவளை அரவணைத்து அன்பு கனியச் சொன்னாள்:

“சகோதரியே, என் மகனும் எனக்கு ஒரே மகன் தான். நானும் என் மகனை இழந்தேன். அவன் மரணமும் அகால மரணம்தான். அகால மரணம் மட்டுமல்ல, மகா பரிதாப மரணம் - கொலைகாரனை அடித்துக் கொல்லும் சிலுவை மரணம்” என்று சொல்லி தன் பெருமூச்சை அடக்கிக் கொண்டு கண்ணீர் சொட்டச் சொட்ட யூதாஸின் தாயுடைய கண்ணீர் வெள்ளத்தைத் துடைத்தாள். முத்தம் கொடுத்துக் கொண்டே இருந்தாள்.

யூதாஸின் தாய் பிரமித்துப் போனாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பதட்டத்துடன் சகோதரியே, உன் மகன் பெயர் என்ன என்று கேட்டாள்.

மரியாள் சிறிது நேரம் பேசவில்லை. பின்பு தன் உள்ளக் குமுறலை அடக்கிக் கொண்டு, ‘இயேசு’ என்ற பெயரை உச்சரித்து மீண்டுமாக அவளின் கண்ணீரை துடைக்கப் போனாள்.

அவளோ திடுக்கிட்டு எழுந்து, ‘இயேசுவா’ என்று கூறித் திகைத்தாள், தடுமாறினாள், பயந்தாள், படபடத்தாள், கண்ணீர் கொட்டியது. அவளின் கண்ணீர் வெள்ளமோ அன்பின் வெள்ளமாய் மாறிற்று.

யூதாஸின் பெற்றோர் ஆறுதலும் தேறுதலும் பெற்றனர்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

குறிப்புகள் :

1. தமிழில் முதல் நாவல் எழுதியது மாயூரம் நீதிபதி ச. வேதநாயம்பிள்ளை என்று நாமறிவோம் (1879). ஆனால் முதல் சிறுகதையை எழுதியது யார் என்று இன்னமும் நமக்குத் தெரியாது. ஏன் இந்தக் கதையாக இருக்கக் கூடாது?... இது எழுதப்பட்ட காலம் 1880 ஆக இருக்கலாம்.
2. மிகமிகப் பழங்கதை ஒன்றின் மொழி நடையைத் திருத்தி செப்பனிட்டுத் தரும் சிறுகதையாகும்.
3. ஜூன் - ஜூலை 2002 ‘மனை தீபம்’

கதைகள் சாவதில்லை

புதிய புதிய ஊடகங்கள் குதிபோட்டு வரும் இந்நாட்களில், நான் கதை எழுதுவதா, வேண்டாமா? என்று எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது.

பழைய நினைவுகள் எழுந்தன.

மண்போட்ட தரையில் விரலால் எழுதி எழுதிப்பழகிய - சுட்டுவிரல் இரத்தம் சொட்டி இருந்த ஒண்ணாங்கிளாஸ் வாழ்க்கையை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

அதனால்தான் அந்த விரல்களுக்கு இன்றும் வலிமை இருக்கிறது போலும்!

நான் பிறந்து வளர்ந்தது கரிசல் காடு. வட நெல்லையில் உள்ள வறண்ட பிரதேசம். அந்த வறட்சியில் தான் எத்தனை வளங்களை ஆண்டவன் வைத்திருக்கிறான்?

பதனீர் தேன் சொட்டு போன்று வாயில் ஒட்டும். கள்ளிப்பழம் தின்றால் உதட்டில் சாயம் இருக்கும். செடியில் பறித்துத் தின்னும் தக்காளிப்பழம் புளிப்பு கலந்து இனிக்கும். சோளத்தட்டையின் அடிப்பாகம் கரும்பைக் காட்டிலும் தித்திக்கும். உப்புமண் புழுதித்தரையில் எள்ளுச்செடி நன்கு காய்க்கும். கருப்புக்கட்டி போட்டு இடித்துத் தரும் எள்ளுருண்டை எத்தனையாய் ருசிக்கும். எந்த லாலாக்கடை மிட்டாயும் அந்த ருசிக்கு ஈடாகாது.

பள்ளியில் கரிசல் மண்ணைத் தெள்ளி வாயில் போட்டு சுவைத்துக் கொண்டே கதைகள் கேட்பேன். மண்மணம் என்பார்களே அந்த மணம் கரிசல் கதைகளிலும் இருக்கும். பாஞ்சைக்குப் பக்கமுள்ள எங்கள் கரிசல் காட்டின் அருகில்தான். வ.வு.சியும், பாரதியும் பிறந்தார்கள்.

காகமும் நரியும், காகமும் பானையும், குரங்கும் குல்லாவும், எலியும் தவளையும், முயலும் ஆமயும் - இந்தக் கதைகளை என் பாட்டிக்கு அவள் பாட்டி சொல்லி - பாட்டியிடம் நான் கேட்டு, என் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் நான் சொல்லி வரும் பரம்பரை கதைகளாகும். என் பூட்டிப் பிள்ளைகளும் கேட்கப் போகிறார்கள்.

இவைகள் கரிசல் காட்டில் பிறந்த கதைகளே ஆயினும், காலங்காலமாகச் சொல்லி வரும் மழலைக் கதைகளாகும். ஒருநாளாவது பள்ளியில் ஒதுங்கிய எந்த இந்தியக் குடிமகனுக்கும் இந்தக் கதைகள் தெரியும்.

நூற்றுக்கணக்கான கதைகளை புதிது புதிதாக எழுதி வருகிறேன். சிலகதைகள் கால நாளடைவில், சில கதைகள் பழசாகி விடுகின்றன.

வெள்ளத்தில் அடிபட்டு விடுகின்றன. ஆனால் எலி-தவளை போன்ற கதைகளில் இன்றும் உயிர் துள்ளுகின்றன.

நான் முதல் வகுப்பில் கேட்ட இரு தவளைகளின் கதை நினைவிற்கு வந்தது.

நண்பர்களான இரு தவளைகள் தத்தி தத்தி விளையாடின. இரண்டிற்கும் மாறுபட்ட குணங்கள் இருப்பினும் ஒன்றுபட்ட நண்பர்கள்.

இரண்டும் துள்ளிக் குதித்து விளையாடும்போது பால் நிறைந்த இருபாத்திரங்களில் இரண்டும் விழுந்து விட்டன.

முதல் தவளை பால் பாத்திரத்தினுள் கிடந்து நீந்தி நீந்திப் பார்த்தது. அது எப்போதும் சபலபுத்தியும், சந்தேகக் குணமும் கொண்ட தவளை, பயந்த சுபாவம் கொண்டது. இனி பிழைக்க முடியாது என்று நம்பிக்கை இழந்தது. பின் கால்களைப் பரக்க விரித்து மரித்தது.

இரண்டாம் தவளை பால் பாத்திரத்தினுள் நீந்திக் கொண்டே இருந்தது. கால்கள் ஓய்ந்தன. ஆனாலும் இறுதி மூச்சுவரை நீந்துவேன் என வட்டமடித்துக் கொண்டே இருந்தது. சாகும்வரை நீந்துவேன் என்று உறுதி பூண்டது. வாழ்வேன், வாழவே பிறந்தேன் என்ற பிடிவாதத்தில் நீந்தியது.

திடீரென்று ஓர் அதிசயம் நடந்தது. தவளை பாலைக் கலக்கிய கலக்கில் பால் வெண்ணெய் கட்டியாகத் திரண்டு விட்டது. பால் திடப்பொருளாகி விட்டது. தவளை அதன்மீது ஏறி ஆனந்தமாக அமர்ந்தது. சுதந்திரக் காற்றை சுவாசித்தது. தத்திக் குதித்துப் பிழைத்துக் கொண்டது.

இந்தக் கதையை நினைக்க நினைக்க எனக்குள் ஒரு தெம்பு பிறந்தது. புதிய சக்தி என்னுள் நுழைந்தது. தீமையை நன்மையாக்க முடியும், சோதனை களைச் சாதனைகளாக்கக் கூடும். கவலைகளை கலைகளாக மாற்ற முடியும் என்ற எண்ணம் என் உள்ளம் முழுவதும் நிறைந்து பூரித்தது.

ஆனா, ஆவன்னா எழுதிய என் விரல்கள் தரையில் பேனாவைப் பிடித்து மானுட நேயக் கதைகளை எழுதித் தள்ளுகின்றன.

என் நான்கு வயதுப்பேரன், "தாத்தா, எலியும் - தவளையும் கதையை இன்னிக்கும் சொல்லணும் தாத்தா" என்று சொல்லி என் மடியில் ஏறி அமர்ந்தான். "தவளைக் கதை ரொம்ப நல்லாருக்கு தாத்தா" என்றான். என்பேரப் பிள்ளைகளிடமிருந்து தினமும் நான் கதை சொல்லாமல் தப்ப முடியாது.

கதைகள் எவ்வளவு வலுவுள்ளவை!

"கதைகள் சாவதில்லை! காலங்காலமாக நிலைத்து நிற்கும்"

ஆத்துமத் தச்சன்

அண்ணன் தம்பியர் இருவர். இருவருக்கும் ஒரு பெரிய தோட்டமிருந்தது. இருவரும் கடின உழைப்பாளிகள்.

தம்பி சொன்னான் :

'அண்ணா, இருவர்க்கும் திருமணமாயிற்று, இனி நம் சொத்தைப் பிரித்துக் கொள்வோம்' என்றான்.

அண்ணன் அதற்குச் சம்மதித்தான்

சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தான்.

விசவாயக் கருவிகளை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

அண்ணன் உழவு போடும் அதே நாளில், தனக்கும் உழுபடை கருவி வேண்டும் என்றான் தம்பி.

அண்ணன் கொடுத்து விட்டான்.

தம்பி, மூன்று நாட்களாக அதைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

உழவு போடும் பருவம் தப்பி விட்டது.

இருவருக்கும் முரண்பாடுகள் முற்றின.

தம்பியின் விளை நிலத்தில் விதைகளை விட பொறாமை வித்துகள் அதிகம் விழுந்தன.

தம்பி ரொம்பக் கோபக்காரன் ஆனான்.

அண்ணன் என்ன சொன்னாலும் தப்பர்த்தம் கொண்டான். சில வேளையில் ஆத்திரத்தில் அறிவிழக்கவும் செய்வான்.

ஒரு நாள், சூரியன் இன்னும் தலை காட்டாத அதிகாலை வேளை:

அண்ணன் வீட்டுக் கதவை கொட்டும் சத்தம் கேட்டது.

கதவை திறந்த போது ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். அவன் சொன்னான்:

ஐயா, நான் தச்சு வேலை செய்பவன்; தங்கள் வீட்டில் ஏதாவது வேலை இருந்தால் நான் செய்கிறேன் என்று சொல்லி தச்சுக் கருவிகளின் சாக்கு மூட்டையைக் கீழே இறக்கி வைத்தான்.

அண்ணன் சொன்னான் :

"உனக்கு ஒரு பெரிய வேலை காத்திருக்கிறது; அதோ தெரியும் தோட்டம் என் தம்பியினுடையது. எங்கள் இரு நிலங்களுக்கும் மத்தியில் ஓர் அழகான புல் வெளியும், ஒரு சிறு கட்டிடமும் இருந்தது. இரு தினங்களுக்கு முன்பு அவன் ஒரு புல்டோசரைக் கொண்டு வந்து இடித்துத் தள்ளி விட்டான். அழகான புல்வெளி இருந்த இடம் ஓடையாகி விட்டது. அவனுக்கு என் முகத்தில் விழிக்க விருப்பமில்லை. எனவே ஒரு பெரிய வேலி அமைத்துவிட வேண்டும். பலகைகள், கம்புகள், ஆணிகள் எல்லாம் இருக்கின்றன" என்று மிகவும் மென்மையாகச் சொன்னான்.

வேலையை ஒப்படைத்து விட்டு அண்ணன் அவசர வேலையாகப் பட்டணத்திற்குச் சென்று விட்டான்.

மாலை அந்திவேளையில் அண்ணன் வந்து பார்த்தான் ஆச்சரியமாயிருந்தது.

வேலி இல்லை, பாலம் இருந்தது.

ஓடையை மறித்து இரு நிலங்களையும் இணைத்து ஓர் அழகான மரப்பாலம் அமைத்திருந்தான்.

பாலத்தைப் பார்த்த தம்பி விரைந்து வந்து அண்ணனை கட்டித் தழுவினான். கண்களில் நீர் ததும்பச் சொன்னான் :

"அண்ணா, உனக்கு நான் தீமை செய்தேன், நீ எனக்கு நன்மை செய்து விட்டாய், என்னை மன்னித்து விடு," என்று சொல்லி மனம் நொந்து அழுதான்.

தச்சன், தன் பணி முடிந்த பெருமிதத்தில் பாரமான கருவிகளின் மூட்டையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

அண்ணன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"நீ இங்கேயே இரு, தினமும் வேலை தருகிறேன்" என்றான்

தச்சன் சொன்னான் :

"எனக்கு இங்கிருக்க ஆசைதான், ஆனால் நான் இன்னும் நிறையப் பாலங்கள் கட்ட வேண்டி உள்ளன. நாடு முழுவதும் கேடுபாடுகள் நிறைந்து உடைந்து கிடக்கின்றன. நான் போய் வருகிறேன், என்று சொல்லிச் சென்று விட்டான்.

அவன் அதிகாலை இருட்டோடே வந்தான், அந்தி மயங்கும் வேளையில் சென்றான்.

அவன் சாதாரணத் தச்சன் அல்லன் அவன் ஒரு ஆத்துமத் தச்சன்

ஆங்கிலத்தில் இருந்து தமிழில் தழுவல்

கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய உலகில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாபெரும் எழுத்தாளர் திரு. ஆர். எஸ். ஜேக்கப். தமது வியத்தகு படைப்பாற்றலால் பல்லாயிரக்கணக்கான வாசக உள்ளங்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்ட பெருமை இவருக்குண்டு. அள்ள அள்ளக் குறையாத கலைச் சுரங்கமாய் கருத்துச் செல்வங்களை வாரி வாரி வழங்கும் ஆர். எஸ். ஜே. அவர்களின் இலக்கியத் தொண்டு தனிப்பெரும் வரலாறாய் இன்று விரிந்து நிற்கிறது. எந்த ஒரு நிகழ்ச்சியையும் கலை நயத்தோடும், கருத்துச் செறிவுடனும் படைத்தளிக்கக் கூடிய ஆற்றல் இவருக்கே உரித்தான தனிச்சிறப்பு. அந்த தனித்துவமே தலைசிறந்த எழுத்தாளராய் - சிறுகதை மன்னராய் உலகிற்கு இவரை அடையாளங் காட்டியுள்ளது. ஆயிரக்கணக்கான குட்டிக்-கதைகளையும், ஏராளமான சிறுகதைகளையும் வழங்கியிருக்கும் இவரது நூற்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

வாத்தியார், மரணவாயிலில் என்னும் இரட்டை நாவல்கள் இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்துள்ளன. மரணவாயிலில் என்ற புதினம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தாரால் 2004 க்கான 'சிறந்த நாவல்' என்ற முதல் பரிசைப் பெற்றது.

இவரது அறுபதாண்டு கால இலக்கியப் பணியைப் பாராட்டி - பன்முகப் படைப்புகளை மதிப்பீடு செய்து 12.4.2004 ல் டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவித்துள்ளார்கள்.

ஆர். எஸ். ஜே. 'முத்து விழா' தொடக்க நாளில் இந்நூலை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

இந்த ஞானத் தருவின் கலைப் பயணம் தொடர எங்கள் வாழ்த்துக்கள்.

வெளியீட்டாளர் சார்பில்,
தியாரு